1579

1579

"Tamil Arasu" Rgd. M. No. 2859.

# தமிழரசு

ஓர் செந்தமிழ் மாத வெளியீடு

17 MAR 1933
MADRAS

ஆங்கீரஸ ௵ பங்குனி ௴ 2௨
1933-ஆம் ௵ மார்ச்சு ௴ 15

மலர் 4. இதழ் 3.

ஆசிரியர் :
டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்.

வருட சந்தா

உள் நாடு ரூபா 1. வெளி நாடு ரூபா 2.

தனிப்பிரதி அணா 2.

பிரசுராலயம் :
31, வைத்தியநாத முதலி வீதி,
சென்னை.

# பொருள் அடக்கம்


1. கடவுள் வணக்கம் ... 129
2. 'நான் சர்வாதிகாரியா யிருந்தால்' ... 130
3. இரும்பு மனிதன் ... 132
4. சாந்த நிகேதக் காணாக் காட்சி ... 135
5. 'என் மனம் துடிக்கிறது' ... 144
6. வீரர் வணக்கம் ... 145
7. கோயிற் பூனைகள் ... 147
8. நிர்மலை (ஒரு சிறு கதை) ... 151
9. புற நானூறு ... 154
10. பழைய—புதிய தமிழ் நடைகள் ... 158
11. தாசிகளும் தாசிகாந்தர்களும் (நாடகம்) ... 165
12. ஸர். தி. முத்துசாமி ஐயர் 172
13. இந்திய உணவு ... 176
14. இழந்த தருணங்கள் ... 179
15. பிராணிகளின் துயரம் ... 182
16. பாப்பா பாட்டு ... 187
17. செட்டிமார்களின் சிக்கன ரகசியம் ... 188
18. தீனிப்பை ... 190


## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு ரூ | 1—0—0 |
| | பினாங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—2—0 |

**மாதிரி சஞ்சிகை இனாம்.**

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வோரு தமிழ் மாத முதல் தேதியிலும் வெளிவரும்.

## விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| உட்பக்கம் | ஒன்றுக்கு | 1-மாதத்திற்கு | ரூ. 10—0—0 |
| ,, | அரைப் பக்கத்திற்கு | ,, | 6—0—0 |
| ,, | கால் பக்கத்திற்கு | ,, | 4—0—0 |
| கவர் | 3-வது பக்கத்திற்கு | ,, | 15—0—0 |
| ,, | 4 ,, | ,, | 20—0—0 |

**இதர விவரங்களுக்கு எழுதவும்.**

மானேஜர்.

'தமிழரசு' ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

## ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்'...

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

17 MAR 1933


| மலர் | ஆங்கிரஸஹு பங்குனிமீ 1உ<br>1933ஹு மார்ச்சுமீ 14உ | இதழ் |
|---|---|---|
| 4 | | 3 |


### கடவுள் வணக்கம்

அரும்பொனே! மணியே! என் அன்பே! என் அன்பான
அறிவே! என் அறிவி லூறும்
ஆனந்த வெள்ளமே! என்றென்று பாடினேன்
ஆடினேன் நாடி நாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
மெய்சிலிர்த் திருகை கூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தே னியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனு னுமுனே
இடைவிட்டு நின்ற துண்டோ?
என்றுநீ அன்றுநான் உன்னடிமை யல்லவோ?
யாதேனும் அறியா வெறுந்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ?
தொண்டரொடு கூட்டு, கண்டாய்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மே! பரஞ்
சோதியே! சுகவா ரியே!

—தாயுமானுர்.

# ‘நான் சர்வாதிகாரியா யிருந்தால்’

மார்ச்சு மாதம் 2-ஆந் தேதி காலை டில்லி ஹிந்து கல்லூரியில் ஆசிரியர்கள், மாணவர்கள் அடங்கிய மா பெருங் கூட்ட மொன்றில் ஆசிரியர் பி. ஸி. ராய் ஓர் அரிய விரிவுரை நிகழ்த்தியபோது,

‘நான் ஒரு நாளைக்காவது நாட்டின் சர்வாதிகாரியா யிருக்க நேர்ந்தால் சர்வ கலாசாலைகளையும், சட்டக் கல்லூரி களையும் தரைமட்ட மாக்கி, நமது அருமைக் குழந்தைகளை அநாவசியமாய் வாடி வதங்குவதி லிருந்து காப்பாற்றி விடுவேன். சர்வ கலாசாலைப் பட்டம் பெறுவதற்காக உங்கள் சிறந்த மூளை யையும், இயற்கை ஆற்றலையும் வீணாக்கி விடாதீர்கள். இந் நாளில் அப் பட்டங்களால் பயனில்லை. விஞ்ஞான சாஸ்திரத் திலும், இந்தியக் கைத் தொழில்களிலும் கவனத்தைத் திருப்பி, வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை நீங்களே தீர்த்து விடுமாறு வற்புறுத்துகிறேன்’

என்று குறிப்பிட் டுள்ளார். பெரியார் பி. ஸி. ராயின் அறி வுரைகளை நாம் பொன்னே போல் போற்றுகிறோம்.

இந்தியாவில் இதுசமய முள்ள சர்வ கலாசாலைகளுக்கும், சட்டக் கல்லூரிகளுக்கும் கணக்கில்லை; நாளடைவில் இன்னும் பல ஏற்படலாம். ஆனால் இவைகளில் பயின்று ஆண்டுதோறும் வெளி வரும் பல்லாயிரக் கணக்கான மாணவர்களின் பரிதாப நிலைமையை நினைத்தால் மனம் துடிக்கிறது. எத்தனையோ வருஷங்கள் காத் திருந்து, எவ்வளவோ பணம் செலவு செய்து, எத்துணையோ கஷ்டப் பட்டுப் படித்துப் பட்டம் பெற்ற இவர்கள் முப்பது நாற்பது ரூபா வருமானம் கொடுக்கக் கூடிய ஒரு குமாஸ்தா வேலையும் கிடைக்காது வயிற்றை வளர்க்க வகையற்றுத் திண்டாடுகிறார்க ளென்றால் இக் கலாசாலைக் கல்வியின் சிறுமையை என்னென்று எடுத்துரைப்பது ?

வயிற்றுப் பிழைப்புக்குக்கூட வழிகாட்டாத கல்வி ஒரு கல்வி யாகுமா? தற்காலக் கல்வி முறையால் வறுமையும், அதனால் அடிமைத்

தனமும் அதிகரிக்குமே யன்றி பயன் சிறிது மேற்பட இடமில்லை. இவற்றை யெல்லாம் நோக்கும்போது ஆசிரியர் பி. ஸி. ராயின் அரிய கருத்துக்களைப் பாராட்ட வேண்டி யிருக்கின்றது; அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டி யிருக்கின்றது.

நமது நாட்டார் இனியும் பட்டக் கல்வியில் மோகம் கொள்வாரானால் அதைவிட மிகவும் தீமை வேறொன்று மிராது; 'கோழி மேய்த்தாலும் கும்பேனிக் கோழியாக இருக்க வேண்டு' மென்ற அடிமை எண்ணத்தை ஒழித்து, இனியேனும் 'கோழி மேய்த்தாலும் நம் கோழியாக இருக்க வேண்டு' மென்ற உரிமை உணர்ச்சியோடு கைத்தொழில், வர்த்தகம் முதலிய சுயாதீனத் தொழில்களை நாட வேண்டும்.

நமது தேசத்தில் இயற்கைப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. அவ்வா றிருந்தும் தயாராகும் செயற்கைப் பொருள்களுக்கு அன்னிய நாடுகளையே எதிர்பார்க்க வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். இனி, பட்டக் கல்வியைக் கற்று வேலையின்றி அல்லலுறுவதை விட்டுப் புதுமுறைகளில் தொழில்களை நடத்த முற்பட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்; நாடும் செல்வம் கொழிக்கும்.

நாட்டின் நன்மையைக் கருதும் நல்ல அரசாங்கமாக இருந்தால் தற்பொழுதுள்ள கல்வி முறையை மாற்றி மக்களுக்கு நலம் பயக்கும் வகையில் அமைக்க வேண்டும். மக்களுக்குப் பிழைப்பைத் தரும் கல்வியே தேவையானது.

ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டி, உடை, உறைவிடம் இவை இன்றியமையாதவை. இவைகளைத் தாங்களே தயாரித்துக்கொள்ளச் சக்தி யுடையவராக்கும் விதமாகக் கல்வி அமைக்கப்படல் வேண்டும். அன்றியும் கலாசாலைக் கல்வியானது தினசரி வாழ்க்கையுடன் தொடர்புடையதா யிருக்கத் தக்கவாறு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்; பிறருக்கு உழைக்கும் பேரெண்ண முடையவராய்ச் செய்யும் கல்வியே பெரும் செல்வமாகும். நமது அரசாங்கமும் தேசத் தலைவர்களும் இதனைக் கவனிப்பார்களா?

# இரும்பு மனிதன்

(திரு. ஜயந்தகுமாரதாஸ் குப்தா)



பத்தொன்பதாவது நூற்றாண்டில் நெபோலியன் போனபார்ட் என்ற உயர்ந்த மனிதர் ஐரோப்பாவில் அவதரித்திருந்தார். இவரைத்தான் கார்னல் என்ற மேனாட்டுக் கவிவல்லுனர் 'ஐரோப்பாவில் இறுதியிலவதரித்த மிகவும் உயர்ந்த மனிதர்' எனக் கூறியுள்ளார். நெபோலியன் தமது தோளிலிருந்த அங்கவஸ்திரத்தை (அதாவது சாமர்த்தியத்தை அல்லது பொறுப்பை) எடுத்து அவரது இதாலியப் பிரதிநிதியான ஸிக்னியர்பெனிடோ முஸோலினிமீது போட்டுச் சென்று விட்டதாகச் சில ஜனங்கள் நினைக்கிறார்கள். உண்மையில், இவ்விருவருக்கும் ஒற்றுமை யிருக்கிறதெனக் கூறலாம். பிறவியில் இருவரும் இத்தாலியர்களே. அவர்கள் இருவரும் மிகவும் கீழான ஸ்திதியிலிருந்து மிகமிக உயர்ந்த ஸ்திதிக்கு வந்திருக்கிறார்கள். அவர்களிருவரும் வசீகரிக்கத் தகுந்த ஆகிருதியை உடையவர்கள். அவர்களது சரீர அமைப்பும் ஒரேவிதமெனக் கூறலாம். அவர்களிருவரும் தேவாம்சமான சக்தியை யுடையவர்கள். அதனால் அவர்களை ஜனங்கள் எளிதில் மறக்க முடிவதில்லை. தேச சரித்திரத்தில் அவர்களது பெயர் பிரகாசத்துடன் நிற்கின்றன.

## விசித்திர வரலாறு

முஸோலினியின் சரிதம் விசித்திரமாக விருக்கும். கொல்லர் ஜாதியில் பிறந்து, தற்காலம் இத்தாலிய கவர்ன்மெண்டின் கீழ் முக்கியமான ஸ்தானத்தை வகிப்பவர் இவரே. இவர்பால் சகலத் தொழிகளுமிருக்கின்றன. தொழிலாளி, உபாத்தியாயர், பத்திரிகாசிரியர், சீர்திருத்தக்காரர், சிப்பாய், கவிஞர் இவர்கள் தொழிலெல்லாம் இந்த ஒரு மனிதனிடத்தில் அடங்கி யிருக்கின்றன. மேனாட்டு ராஜதந்திரிகளில் இவர்தான் முதன்மையானவர். இவரது வாழ்க்கையில் அநேக ஆபத்துகரமான விஷயங்கள் நேர்ந்திருக்கின்றன. எத்துணையோ கஷ்டங்களை இவர் அனுபவித்திருக்கிறார்.

## ஐரோப்பாவிற்குச் சந்திரன்

ஐரோப்பாவாகிற ஆகாயத்தில் இன்று இந்த ஆத்துமாவானது சந்திரன் போல் விளங்குகிறது. ஸர்வதேச சங்கக் கூட்டங்களென்ன; தொழிலாளர் கூட்டங்களென்ன ஆயுதப்பரிகாரண மஹாநாடுகளென்ன; ஒற்றுமை மஹாநாடுகளென்ன; இவைகளொன்றையும் அவர் லக்ஷியம் செய்யவில்லை. இத்தாலியில் இவர் தமது சொந்தச் சட்டங்களையே புகுத்த முயற்சி செய்கிறார். அனாவசியமான பேச்சுக்களிலெல்லாம் இவர் தலையிடுவதேயில்லை. இவரது வாழ்க்கையின் முக்கிய நோக்கம் யாதெனில் இத்தாலியை ஐரோப்பாவிற்குள் மிகவும் பலமுள்ளதாகச் செய்ய வேண்டுமென்பதே.

## மண்டையோடே மைக்கூடு

இவரது பிரசங்கங்கள் இவருடைய உத்தம குணங்களை விளக்கிக் காட்டுகின்றன. இவர் கூறியதாவது: 'எனக்குத் தேசியமென்பதே கிடையாது. நான் கூறவேண்டியது யாதெனில் உங்களது தாய்நாட்டின் மீது அன்பு காட்ட வேண்டுமென்பதே.' கடுமையான ஆபத்து நேரும்பொழுதும் இவர் மிக சாந்தமாயும், தன்னடக்கமுள்ளவராயுமிருக்கிறார். இவரது வாழ்க்கை பயங்கரமான பாதையின் வழியாகவே போய்க்கொண்டிருக்கிறது. இவர் உயிரை மாய்க்க நடந்த முயற்சிகளை யெல்லாம் இவர் அப்புறம் அகற்றி, தம் கொள்கையை யொட்டிப் போவதிலேயே கருத்துடையவராயிருக்கிறார். இத்தகைய விஷயத்திலிருந்து ஓர் பிரச்னை எழும்புகிறது. அதாவது இது இவரது மனத்தடுமாற்றமா, அல்லது இயற்கையாயமைந்துள்ள குணமா? இது இவரது இயற்கை குணமென்றே கூறுவது பொருந்தும். இவர் பாலியத்தில் அனுபவித்த கஷ்டங்களே இவரை இதாலியின் புனருத்தாரணத்தை நாடுமாறு போதித்தன. இவர் ஒரு நண்பருக்கு எழுதியதாவது: 'வேதனை, அவமானம், வறுமைக்கு அடிமையாயிருத்தல்; இவைகளே எனக்கு ஆபரணங்கள். இவ்விஷயங்களால் வருத்தப்படுவதற்காவது, வெட்கப் படுவதற்காவது காரணமில்லை'. இவர் சிறிதாவது தம் சரீர ஸௌகர்யத்தை நோக்காமலும், குடும்ப பந்தங்களைக் கவனிக்காமலும் இயந்திரம் போல் வேலை செய்கிறார். எனவே அரிதாகத்தான் இவர் தம் வீட்டிற்குச் செல்லுவது வழக்கம். இவர் பொழுது போக்குக்காக செய்யுங் காரியங்களெல்லாம் அபூர்வமாயும் விநோதமாயு மிருக்கின்றன. ரோம் காக்ஷி சாலையிலுள்ள சிங்கக் குட்டியுடன் இவர் விளையாடுகிறார். காகிதங்களுக்குப் பாரமாக அவர் கைத்துப்பாக்கியையும் கத்தியையும் உபயோகிக்கிறார். எழுதும் மை வைத்திருக்கும் பாத்திரமோ மனிதனின் மண்டையோடு.

## இவர் ஒரு தியாகி

இவரை அவதூருகக் கூறுகிறவர்களும், இவருக்குச் சத்துருக்களும் அநேகர். உயர்ந்த மனிதர்களுக்கு இது சகஜந்தான். சிலர் இவரை அவதூருகக் கூறுவதில் சளைக்காதிருக்கிருர்கள். இவர் கருணையற்றவராயும், செய்ந்நன்றி மறப்பவராயும், கர்வமுள்ளவராயும், பேராசையுள்ளவராயுமிருக்கிருரென இவரைக் கூறுகிருர்கள். இவர் தமக்காக யாதொரு செளகரியத்தையும் செய்துகொள்ளுவதில்லையென்பதையும், தேசத்திற்காகவே அத்துணையும் பாடுபடுகிருரென்றும் அநேகர் அறிவதில்லை. தேசபக்தியானது ஒரு துன்மார்க்கமாகக் கருதப்படுமானுல், உலகத்திலுள்ள தேசபக்தர்களெல்லாம் துன்மார்க்கர்கள் தாம். கொந்தளிப்பான முறைகள் எப்போதும் கொடிய முறைகளே. எனினும் இதாலிக்குக் கொந்தளிப்பான முறைகளே அவசியம். இம் முறைகளே முஸோலினியிடமிருக்கின்றன. இதுகாலே இதாலியானது இவரது கைக்குள்ளேயே இருக்கிறது. இவரை ஐரோப்பாவின் இரும்புமனிதனென்றே சொல்லவேண்டும். இவரது குமாரனை புருனே என்பவன், அவனது உபாத்தியாயரால், 'எம் மனிதனிடம் நாம் கோபமான குணத்தைக்காட்டக் கூடாது,' எனக் கேட்டதற்கு, அப்பையன் சிறிதும் தாமதமின்றி, 'அரசரிடமும், எனது தங்கையிடமும்' எனத்தயங்காமல் பதிலளித்தான். எலிஸபெத் மஹாராணியிடம் ஓர் சமயம் ஸீஸில் என்பவர் 'வேண்டும்' என்ற வார்த்தையை உபயோகித்ததற்காக அவரிடம் மஹாராணியார் கேவலமான வார்த்தைகளை உபயோகித்தாராம். மேற்கண்ட சிறு விஷயமானது நமக்கு இக்கதையை ஞாபகமூட்டுகிறது.

இவர் பத்திரிகைகளின் சுதந்தரத்தை அடக்கிவருகிருரென்றும், தாராளமாகப் பேசுவதற்கும் நினைப்பதற்கும் இவர் இடங் கொடுப்பதில்லையென்றும் கூறப்படுகிறது. தற்காலம் அநேக சர்க்கார்கள் இவ்வித முறைகளைக் கைக்கொண்டிருக்கவில்லையா? தேசியக் கக்ஷிகளில் சிலர் பல சூழ்ச்சிகளைக் கையாளுவதுபோல் இவர் செய்வதே கிடையாது. இவரிடம் புறங்கூறும் வழக்கமும் கிடையாது. 'முஸோலினியைப் போன்ற எஜமானன் பிரிட்டனுக்கு இப்போது வேண்டாம்' என்று ஒரு பிரசங்கத்தில் திரு. பால்ட்வின் கூறியதற்கு, இதாலிய பிரிமியர், 'ஓர் உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கும் ஒருவர் இவ்வாறு மற்றொருவரைப்பற்றிக் கூறுவதானது அழகல்ல' எனக் கோபத்துடன் தைரியமாகக் கூறிவிட்டார். ரிஷிகான், கமல்பாஷா இவர்களைப்போல் முஸோலினியும் ஒரு பெரிய மனிதரே. இவரைப் போல் வசீகரிக்கத்தக்க ஆகிருதியை உடையவர் இன்று இவ்வுலகிலேயேயில்லை யெனக் கூறலாம்.

# * சாந்தநிகேதக் காணாக் காட்சி

(திரு. R. பாலகிருஷ்ண முதலியார் B. A., L. T.,)



சிறப்பில் மிக்கது சாந்தநிகேதம். அறிவு என்னும் மலரின் மணம் அதுவேயாம். மனிதரால் ஆக்கப்பெற்ற பல்வகைத் தடைகளுக்கும் உட்படாது போயினும், பசிப் பிணியால் வாடிக் கால்களை யுதைத்துக் கதறி யழூம் குழவிக்குத் தன் கலச வமுதை யூட்டும் இயற்கை யன்னையின் விடுதியே என அது விளங்குகின்றது. பண்டைக் காலத்தில் வனங்களில் விளங்கிய பல்கலைக் கழக ஆசிரமத்தையே உயிர்ப்பித்தாற் போன்று அது மிளிர்கின்றது; கடவுள் உணர்ச்சி மக்கள் மாட்டுச் சிதைவுறு வண்ணம் இந்நில உலகை உய்விக்கத் தோன்றிய அவதாரம் இதுவோவெனத் துலங்குகின்றது; செயற்கை யுலகின் சந்தடியில் குயிலினங்கள் தம் அருங்கானமெனத் தோன்றுகிறது. இந்த இனிய இயற்கைக் கானம் உலகமனைத்தையும் பரவசப்படுத்தி அடிமை கொள்ளுகின்றது.

முதன்முதல் மூன்று உயர்ந்த மரங்கள் மட்டுமே அந்த ஒதுக்கமான விடத்திற்கு அணி புரிந்தன. கவி ரவீந்திரரின் தந்தையாரான ‘ மகரிஷி ’ தனிமையை நாடிப் பன்னாள் திரிந்து, இறுதியில், தாம் நிட்டை கூடியிருக்க இந்த இடத்தையே ஏற்றதெனக் கொண்டார். அவர் மாட்டுப் பேரன்பு கொண்ட அவருடைய மாணவர் பலர் அவரைச் சூழ்ந்தனர். ஆகவே, அது ஒரு தபோவனமாகச் சமைந்தது. முதன்முதல் ஆங்கிருந்த மூன்று உயரிய மரங்களை யடுத்துப் பல மரங்கள் தோன்றின. மகரிஷியை யடுத்து, பல மாணாக்கர்கள் குழுமியது போல, அம்மூன்று மரங்களை யடுத்து முளைத்து வளர்ந்திருந்த மரங்கள் பல விளங்கின. அந்த மரங்களின் கிளைகள் வீசிய மெல்லிய பூங்காற்றின் மணம் இடையறு இன்ப மூட்டியது. அவைகளளித்த நிழல், உயிர்வகை யனைத்திற்கும் இயற்கை யன்னையின் பாதுகாப்போவெனத் திகழ்ந்தது. அவ்வானளாவிய கிளைகள் அவ்வப்போது அசைந்தாடியது, அன்றலர்ந்த, இளம்பனி தோயப் பெற்ற தம் மலர்களை வான்மீ தெறிந்து இறைவனின் திருவடிகளை

---

* இக் கட்டுரை Educational Review என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்தது. இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் அன்பர் த. பா. நித்தியானந்தமாவர்.

வழிபடுவதே போன்றிருந்தது. அது போலவே, மகரிஷியும் அவருடைய மாணுக்கர்களும் தம் உள்ளம் நெகிழ இறைவனை நோக்கிப் புரிந்த பெருந்தவ வேகம் வானளாவியது. அவர்கள் அனைவருடைய நாட்டமும் ஒன்றின் மீதே பதிந்திருந்தது. பேரின்பமே அவர்கள் நாட்டம். இறைவனுடன் இரண்டறக் கலக்க வேண்டுமென்பதே அவர்கள் பேரவா.

தத்துவ விற்பன்னராம் தேவேந்திரரின் மகவாகக் கவியரசர் தாகூர் தோன்றியதே போன்று, அவர் நிறுவிய தபோவனத்தினின்றே தற்போதைய சாந்தநிகேதம் தோன்றியது. அதாவது தேவேந்திரர் கொண்ட இறையுணர்வு காரணமாகத் தபோவனம் தோன்றியதுபோலவே, அவருடைய மகனுன ரவீந்திரரின் கவிதைக்



கவி ரவீந்திரநாத தாகூர்

கலை யுணர்வு காரணமாகவே, சாந்தநிகேதமும் தோன்றியது. அத் தபோவனம் தத்துவங்கள் மலிந்தது; யோக சாதனத்திற்கேற்றது; மகரிஷிக்கும் அவருடைய உற்ற மாணவர்களுக்கும் மிக அரியதாய் விளங்கியது. இத்துணைச் சிறப்புக்கள் வாய்ந்திருந்த தபோவனம் இப்போது உலகத்திலேயே ஆதிக்க மிக்கதோர் இடமுகத் துலங்குகின்றது. இது இலௌகிகத் துறையில் மிளிரவில்லை. ஆனுல், இறைவனின் பேருட் திறத்தில் ஓங்கிச் சிறக்கின்றது. சாந்தநிகேத வாழ்க்கையின் கலை திக்கெங்கணும் வீசுகின்றது.

கவியரசருக்கு இறையருள் மிகுந்த தம் காலஞ்சென்ற தந்தையின் ஞாபகச் சின்னமாக அது விளங்குகிறது. எனவே, இஃது தூய்மை மிக்கதோர் இடமெனக் கொள்ளுதலே சால்புடைத்து. சாந்தநிகேதம் என்னும் பதத்திற்கே, நிம்மதி நிலயம் என்பது பொருளாகும்.

போல்பூர் புகைவண்டி நிலயத்தினின்று இந்தத் தூய சாந்தநிகேதம் இரண்டு மைல் தூரத்தி லுள்ளது. அந்த இரண்டு மைல்களும் வழி நெடுக மாஞ் செடிக ளற்று செழிப்பின்றி இருக்கின்றது. இந்த நெறி பற்றியே டாக்டர் ஜேம்ஸ் எச். கஸின்ஸ் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் இந்துஸ்தானியும் வங்கமொழியும் சிறிதுமறியாது, இரட்டை மாட்டுக் கட்டை வண்டியில் சாந்தநிகேத ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் ஏறிச் சென்ற வண்டி வில் வண்டியன்று. ஆகவே அந் நெறியிலுள்ள ஒவ்வொரு மேடு பள்ளத்திலும் அவ்வண்டி ஏறி இறங்குவதனால் அவர் அடைந்த துயர் கொஞ்சமன்று. ஆனால் இப்போதோ அதி வேகமாகச் செல்லக்கூடிய ஒரு மோட்டார் வண்டி புகைவண்டி நிலயத்தை யடுத்து நிற்கின்றது. அது இமைப் பொழுதில் பிரயாணிகளை ஆசிரமத்திற்கு ஏற்றிச் செல்லுகிறது.

உயர்ந்த கோபுர மமைந்த அந்த ஆசிரமம் தன்னை யடுத்துள்ள சிறு குடிசைகளுக்குக் காவல் புரிவதே போன்று சிறந்தது. சிறிது தூரத்திலேயே அதைக் காண்போருக்கு ஒருவித அச்சமும் மரியாதையும் உள்ளத்திடையே உதிக்கும்.

ஆசிரமத் தலைவாசலில் மோட்டாரை விட்டு இறங்கியவுடன், இன்பமே உருவா யமைந்த இளைஞர்கள் பலர் ஆங்கே காணப்படுகின்றனர்; பல்லிசை முகமன் கூறி வரவேற்கின்றனர்; ஆசிரமத்திற்குள்ளே அழைத்துச் செல்லுகின்றனர். ஆங்குத் தோற்றும் காட்சிதானென்னே! இயற்கை யன்னையின் இன்பத்துறைக ளனைத்தும் ஒருவயப்பட்டு நில உலக நிமல நாடாகத் துலங்குகின்றது.

கவியரசரின் இனிய தோற்றமே ஆசிரம மெங்கணும் நிலவுவதாகத் தோற்றுகின்றது. அவர், ஆசிரம வாசிகள் உறைவிடத்திற்குச் சிறிது அப்பால் ஒரு தனிக் குடிசையில் தம் மேசைக் கருகில் அமர்ந்து எழுதுகோல் கொண்டு ஓவியங்களோ, இனிய பாக்களோ யாத்துக் கொண்டிருப்பாரேனும், உறுதி மிக்க எளிய வாழ்க்கை செறிந்த அவருடைய இனிய தோற்றம் ஆசிரமம் எங்கணும் முகமன் கூறுவது போலவே தோற்றுகின்றது. கவியரசரின் திருமுகக் காட்சி பெற வேண்டுமானால், ஆசிரம இளைஞருள் ஒருவரின் துணைக் கொண்டால்தான், எளிதில் இயலுமெனக் கூறுகிறார்கள்.

அங்கே செல்லும் ஒவ்வொருவரும் கவியரசரைக் காணும் முதல் நோக்கங் கொண்டிருப்பினும், ஆசிரமத்தில் மலர் செறிந்த மா நிழல்களில் கூடிப் பயிலும் மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் நெருங்கி ஊடாடிப் பழகினுல்தான் அவரைப் பற்றி அனைத்தும் அறிந்துகொள்ள இயலும்.

கலை மாணவக் குழுவினரையோ, இசை மாணவக் குழுவினரையோ சந்தியுங்கள். அவர்களுடைய போக்கு எப்படி இருக்கின்றது? இதர கலா சாலைகளில் காணப்படும் கட்டுதிட்டங்கள் சிறிதும் இல்லை. மாணவர்கள் நாள்தோறும் தவருது குழுவுடன் கலக்க வேண்டுமென்னும் கட்டாயம் கிடையாது. விருப்பமுள்ளவர்கள் வரலாம்; அமர்ந்து கலை இன்பத்தையும் இசை இன்பத்தையும் நுகரலாம். தமக்கிஷ்டமானபடி மரக் கிளைகளின் மீதும் அமர்ந்து கொள்ளலாம். ஏனெனில் மாணவக் குழுவினர் பயிற்சி பெறுவது கல்லும் சுண்ணும்பும் இயைந்து அமைத்த கட்டடங்களுக்குள்ளன்று. ஆனுல், ஆசிரமத்திலுள்ள மரங்களின் நிழலில் பொரியும் சிற்றொலிகளுடேயே யாம். நீர் மலிவால் முளைத்தெழுந்த செடிகளிலும் மரங்களிலும் கூடமைக்கும் புள்ளினங்களின் இசை பழகிய செவிகளுக்கு, கூண்டிலடைபட்டு, பாடும்படி மனிதனுல் பயிற்றப் பட்ட பறவையின் இசை இன்பம் நல்குமோ? அது போலவே, தற்போது பள்ளிக்கூடங்கள் எனக் கூறப்படுமிடங்கள் கற் சுவர்கள் சூழ்ந்திருப்பதனுல், அவ்விடங்களில் இந்த ஆசிரமத்தின் ஆசிரியர்கள் தம் மாணவர்களைப் பயிற்றுவிக்க மனம் இசைவரோ? நாம் கற் சுவர்கள் சூழ்ந்த பள்ளிக்கூடங்களில் பயின்று தேறியவர்களாக இருப்பினும் இந்த ஆசிரமக் கலாசாலைகளின் மாறிய நிலை மிகவும் மேன்மையுடையதாகவே தோற்றுகிறது. ஒரு இந்திர உலகமெனவே அது நமக்குப் புலனுகிறது. அம் மாணவர்களின் வாயினின்றெழும் இசையொலி, யதேச்சைப் பாக்களாகவே மிளிருகின்றன; அதாவது புட்கள் தம் கூடுகளிலிருந்து ஒலிக்கும் இசையே போன்று இயற்கை இசையாய் விளங்குகின்றது. எத்தகைய வற்புறுத்துதலை முன்னிட்டும் இந்த ஒலி தொனிக்கவில்லை. அந்த இசையிலே இயற்கை மட்டும் துலங்குகின்றதேயன்றி, செயற்கை என்பது சிறிதுமின்று. சுருங்கக் கூறுமிடத்து, தற்காலத்திய ஆடம்பரங்களையும், கடுமையான கட்டு திட்டங்களையும், பயில வேண்டிய பாடத் தொகுதிகளையும், பரீக்ஷைப் பயங்கரம் முதலிய கொடுமைகளையும், இந்த ஆசிரமம் வெகுவாக வற்புறுத்திக் கண்டிப்பதே போல் தோன்றுகின்றது.

நமது பள்ளிக்கூடங்களில் தோட்டங்கள் அமைக்கிருேம். ஆனுல், அங்கே தோட்டங்களுக் கிடையே பள்ளிக்கூடங்கள் அமை

கின்றன. இளைஞரும் முதியவரும் பயிற்சியுற இயற்கை யன்னை தன் அருளொளி வீசுகின்றாள்.

காலையிலும் மாலையிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும்போது, அணில்கள் ஆங்குள்ள மரங் களின் மீது ஏறி யோடி யாடுவது சிறந்ததோர் காட்சியே யாம். மாணாக்கர்களை ஆற்றுப் படுத்துவான் வேண்டி கவியரசர் தம் குயிலினை வெல்லுங் குரலோச்சி நிகழ்த்தும் சொற் பொழிவுகள் மாணவர்கள் செவிகளில் நனிபடா வண்ணம் மர உச்சிகளினின்று பறவை யினங்கள் மகிழ்ச்சியுடன் கூவுகின்றன. தன்போக்கில், மலர்கள் மீதுராய்ந்து வீசும் இளந்தென்றல், அம் மலர்களின் நறு மணத்தை வாரிக் கொண்டு வந்து இனிமை செய்தது. கதிரவன் தோன்றுங் காலத்தும் மறையுங் காலத்தும் தன் கதிர்களை வீசி ஆசிரமத்திற் கணி புரிந்தான். நம் தலைமீது கரமமைத்து ஆசி கூறுவன போன்று விட்டுவிட் டிமைக்கும் வான்மீன்கள் பல ஆங்காங்கே நம் கண் முன் தோற்றுகின்றன. ஆனிச் சாரல் பனி நீரெனத் தெறிக் கிறது. கரிய மேகங்கள் வானத்திலே ஒன்றை யொன்று முந்திக் கொண்டு செல்லுகின்றன. இள மாருதத்தினால் அசையும் இலைகளின் சலசலப்பு அதி இன்ப மூட்டுகின்றது. மார்கழித் திங்களின் சலன மற்ற இரவின் தன்மைதா னென்னே! இடையறாது மாற்ற மெய் திக்கொண் டிருக்கும் இயற்கை யன்னையின் திருவிளையாடல்களனைத் தையும் அந்த ஆசிரம வாசிகள் செம்மையாய்ப் பயின்றிருக்கின்றார் கள். அந்த இனிய அனுபவங்களைக் கொண்டே உயரிய கலைகளையும், இசைகளையும், கவிதைகளையும் அமைக்கிறார்கள்.

அதிகாலையில் சலசலவென ஒலிக்கும் அற்புதமான மர நிழலில் அமர்ந்து, பறவைகள் இசைக்கும் பண்ணிற் கேற்ப தம் கவிதை களைப் புனைகிறார் நமது கவியரசர். கருவிழிக் காளை யொருவர் கள்ளத் தனமாகக் கவிதையைக் காணுவான் உன்னி அடிமேல் அடிவைத்து, காவிற் சென்று கவியில் பின்னே தம் காற் பெருவிரல் மீது நின்று கவிதையைக் காணுவார். கள்ளனெனக் கவியரசர் கண்டும் காய் வரோ அவரை? புன்முறுவலுடன் புறத்தே திரும்பும் நம் கவி, அக் கள்ளனைக் கையுங் களவுமாகப் பிடிக்கின்றார். தாம் பிடிபட்டது பற்றி அந்த இளைஞர் சிறிது வெட்கமுறுகிறா ரேனும், 'குரு தேவ! இதற்கு முந்திய ஏட்டில் தாங்கள் தீட்டி யிருக்கும் கவிதையைப் பார்க்க அவாவுகிறேன்' என விண்ணப்பிக்கின்றார். கவியரசர் தம் சுவடியின் முந்திய ஏட்டைப் புரட்டி அவ்விளக் கள்ளரான தம் மாண வர் பார்க்குமாறு அனுமதிப்பது மட்டு மன்றி, உள்ளங் கவரும் பண்ணமைத்து அப் பாட்டுக்களைப் பாடிப் பரவசப் படுத்துவார்.

கவியரசர் கவிதைகளை இயற்றும் போதே அவர் தம் இனிய குரன் முகமாக அவைகளைப் பாடக் கேட்கும் பாக்கியம்

மட்டுமன்றி, அவை இயற்றப்படும் போதேயே அவைகளைப் படித்துப் பார்க்கும் பேறும் அம் மாணவருக் குண்டு. கவிதை புனைய முற்படுங் காலத்து, கவியரசர் பல விடங்களில் தம் சுவடியில் கிறுக்கியும், அடித்தும், பெருக்கிக் கொள்ளவும், மீண்டும் மீண்டும் திருத்தி எழுதவும் அவ் வேட்டில் இட னமைத்தும், ஆங்காங்கே பெருக்கிப் புனைவதற்கான குறிப்பு மொழிகளைப் பொறித்துக் கொண்டும் போகின்றார். அவர் யாத்த பாக்கள் அச்சிட்டு சுவடி வடிவாய் வெளிப்பட்டவுடன் அவைகளின் உயர்வைப் பாராட்டா திருத்தற் கியலுமோ? மேற் கூறியவாறு நம் கவி கவிதைகளைப் புனையும் போது அவைகளைக் கண்ணுறும் இளைஞர்கள் கவிதை புனையக் கருத்துக் கொள்வர். அவர்கள் முதலில் இயற்ற இயலாது போயினும், பின்னர் இனிய கவிதைகள் இயற்றும் திறம்பெற கவியரசரின் கையேட்டு முதற் பிரதி ஊக்க மளிக்கும்.

ஒரு சம்பவம் எனக்கு நன்கு நினைவிருக்கின்றது. ஒரு கலாசாலை ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் பீ. ஏ. பட்டதாரி; ஒரு சித்திரக் கலைஞன் விவேகானந்த சுவாமிகளின் உருவப் பட மொன்றைத் தீட்டுவதை வெகு கூர்மையாகக் கவனித்துக் கொண்டு வந்தார்; அப்படம் எழுதி முடிந்த பிறகு தாமும் அதுபோலவே எழுத முற்பட்டார்; சுமார் ஆறுமுறை அதே படத்தைத் தாளில் எழுதி எழுதி முயன்றார். ஆறும் முறை அப் படம் இனிது அமைந்தது. பின்னர், அவர் பண்டித மோதிலால் நேரு, கவியரசர் தாகூர் ஆகியோருடைய உருவப் படங்களையும் அழகாக எழுதி முடித்தார். அவை இன்றும் செட்டிநாட்டுக் கலாசாலை மண்டபத்திற் கணி செய்கின்றன.

சாந்தநிகேதத்தைப் போல கட்டு திட்டங்க ளற்ற கலாசாலை மாணவர்கள் முன்னிலையில், கலாசாலை வேலையிலோ அதற்கு அப்பாலோ, நாம் நம் கலைத் திறன் கொண்டு கவிதை புனைய முற்படுவோமானல், மகத்தான பயனுண்டு.

இனிய காட்சிப் புலன்கள் பற்றிய கல்வியை நம் பள்ளிகளில் மாணக்கர்களுக்குப் புகட்டாதது வருந்தத் தக்கதே. யாதாமொரு முறை இத்தகைய கல்வி புகட்டப் படுகின்றதேனும், இக் கல்வியால் மாணக்கர்களின் மனப் போக்கு மாற்ற மெய்தி விடுமோ வென ஐயப் படுவோரு முண்டு. இத்தகைய தவமுன கொள்கை தான் பல்வகைத் தீமைகளுக்கு மூலமாக விருக்கின்றது. கல்வியில் ஊக்க மின்மை, பெருஞ் சோம்பல், அறிவையும் தன் நம்பிக்கையையும் வியர்த்தமாக்குதல் முதலிய பெருங் குறைகள் மேற் கூறிய தவமுன கொள்கை காரணமாகத் தோன்றுகின்றன. இவை யனைத்தினும் மிக மிகக் கொடுங் கேடொன்றும் விளையும். பள்ளிக்கூடங்களின் இயற்கைத் தன்மை நீங்கி, செயற்கைத் தன்மை துலங்கி வெறுக்கத் தக்க வீண் சந்தடி ஏற்படும்.

விவசாய மிக்க பகுதி யொன்றில் ஒரு வழக்கறிஞர் இருந்தார். அவர் தம் தொழிலில் மாண்புற விளங்கினர். அவருக்கோர் மகனுண்டு. அவன் உயர்தர வகுப்பில் பயின்று வந்தான். ஒரு நாள் தந்தை தம் மகனைத் தமது கிராமத்திற்கு அழைத்துச் சென்றார். அப்போது நஞ்சை நிலமெலாம் பரம்படிக்கவேண்டிய பருவம். ஒவ்வொரு வயலும் நீர் மேவப் பெற்று சிறு குட்டையே போல் விளங்கியது. இதுகண்ட அச் சிறுவன் பெரு வியப்புற்றான். தந்தையை நோக்கி, ' அடுத்தடுத்து இத்துணைக் குட்டைகள் ஏன்?" என வினவினன். இவ்வினா அவரது கோபக் கனலைக் கிளப்பியது. கல்விச்சாலைகளில் போதிக்கப்படும் போலிக் கல்வி மீது வெறுப்புற்றார். இந்தியாவாகிய விவசாய நாட்டிலே, விவசாயம் பற்றி ஒரு திவலையும் மாணுக்கர் அறியா திருப்பதுபற்றி அவர் பெரிதும் இரங்கினர்.

மாணுக்கர்கள் தம் ஆசிரியர்களுடன் கலாசாலைகளை விடுத்து வெளியே சென்று பயிலுவது இந்தப் பண நெருக்கடியான காலத்திலுங் கூட இயலாத காரியமன்று. கட்டடங்களுக்காகவும், மேசை நாற்காலி விசுப் பலகை முதலிய பொருள்களின் பொருட்டும் செலவிடும் பெருந் தொகையைக் குறைத்து, மாணுக்கர்கள் இயற்கையன்னையின் இன்பத்தில் திளைக்குமாறு பூந்தோட்டங்கள் அமைக்க வேண்டும்; நடவுக் காலங்களிலும் அறுவடைக் காலங்களிலும் மாணுக்கர்களைக் கிராமங்களுக்குக் கொண்டு சென்று அறிவூட்ட வேண்டும்; இயற்கைக் காட்சி மிளிரு மிடங்களுக்கும், சரித்திர சம்பந்தமிக்க விடங்களுக்கும் மாணுக்கர்களை யழைத்துச் சென்று போதிக்க வேண்டும். போல்பூரை யடுத்துள்ள ஆசிரமவாசிகளுக்கு இவையனைத்தும் வெகு இயல்பானவை.

கல்வித்துறையில் செலவாகுந் தொகையைக் குறைக்க நாடிப் பெரிதும் பாடுபடும் எவரும் இங்கோர் கடவு காண்பார். ஆசிரமத்திலுள்ள இயற்கைக் கலாசாலையும், ஆங்காங்கே சில கட்டடங்களும், மேசை நாற்காலி முதலிய சில பொருட்களும் கல்விச் செலவைக் குறைப்பனவாம்.

மாணவர்களுள் ஆண்களும் பெண்களும் ஒருங்கிருந்து கற்பது முறையா அன்ரு என்பது பற்றி இங்கே ஆராய்ச்சி செய்து, முறைதானென்னும் முடிவிற்கே வந்தனர். கைத்தொழில், கூட்டுறவு முறைகள், விவசாயம், முதியோருக்குக் கல்வி புகட்டல், கிராம மீட்சி முதலிய பலதுறைக் கல்வியையும் ஆசிரம வாசிகள் கற்கிறார்கள். உயர் குழுவு மாணவர்களுக்கும் ஆரம்பக் குழுவு மாணவர்களுக்கும் சில அழகிய படங்களமைந்த பத்திரிகைகள் நடைபெறுகின்றன. பண்பெற்ற திறனுடைய மாண

வர்கள் தம் அறிவைப் பெருக்குவதற்கு இவை சிறந்த சாதனங்களாக விளங்குகின்றன. நம் பள்ளிக்கூடங்களுள் எத்துணைப் பள்ளிக்கூடங்களில் தக்க பத்திரிகைகள் இயற்றப்படுகின்றன? கலை, இசை, கவிதை முதலியவற்றில் சிறந்த மாணவர்களுக்குப் பரிசு ஏதேனும் வழங்க எத்தனைக் கலாசாலைகள் முற்பட்டன. இத்துறையில் சாந்திநிகேதம் நமக்கு ஒரு வழிகாட்டியாக விருக்கின்றது. நாம் ஏன் அதைப் பின்பற்றக் கூடாது?

அம்மாணாக்கர்கள் பிணைக்கப்பட்டிருப்பது அன்பு, தூண்டுதல் என்னும் கயிறுகளால்தான். அவர்கள் தாமே நீதிமன்ற மொன்று நிறுவி, நீதி பிறழாது நெறி செலுத்தி உய்கின்றனர்.

நம் கவியரசர் கொண்ட அனுபவம் பற்றி நாம் கேள்வியுற்றிருக்கின்றோம். ஒரு நாள் ஆசிரமத்தில் உள்ள சில மாணாக்கர்கள் குறும்புத்தனமாக நடந்து கொண்டார்கள். கண்டார் கவி; கொண்டார் கோபம்; அவர்களைச் சாடும்பொருட்டு ஓடி வந்தார். அப்போது அவருடைய அகக் கண்களின் முன் தோன்றிய தென்னை? தாம் இளைஞரா யிருக்குங்கால் இயற்றிய குறும்புக ளனைத்தும் அவரது அகக் கண்ணிற்குள் மாறி மாறிப் புலனாயின; உடனே, தம்மைத் தாமே கடிந்துகொண்டார். உள்ளத் திண்மை போலி வெகுளியை வெருட்டி யோட்டியது. புன்முறுவல் பூத்தார். கொடு மொழி யொன்றும் கூறினாரில்லை. வந்த வழியே திரும்பிச் சென்றார். இதே முறையை நம் கல்விச் சாலைகளில் ஆசிரியர்களும் கைக்கொள்ளுவார்களானால் எத்துணை இனிமை பயக்கும்!

எளிய வாழ்க்கையும் உயரிய சிந்தையுமே ஆசிரம வாசிகளின் நோக்கமாகும். ஒரு மரத்தில் இலைகள் எவ்வண்ணம் இயற்கையாகவே துளிர்க்கின்றனவோ, அதுவே போல், இம் மாணவர்களுக்கு நல்லொழுக்கம் தானாகவே படிகின்றது. இந்தப் பள்ளிக்கூட மாணவர் ஆசிரமத்தை விட்டு வெளிப்போந்து ஒரு பெருங் கூட்டத்திலிருப்பினும், அவருடைய எளிய இயல்பான உடையினின்றும், உயர்ந்த போக்கினின்றும், அழகிய பொருட்களில் அவர் தம் கருத்தைச் செலுத்துவதினின்றும் அவரைக் கண்டு கொள்ளுதல் எளிது. அதாவது, மக்களுடன் அவர் செல்லும்போது ஒரு மகானெனவே தோற்றுகின்றார்.

மாணாக்கர்கள் அதிகாலையில் துயி லெழுந்து, கடவுள் வழி பாடியற்றி, கிணற்று நீரைத் தாமே இறைத்து நீராடுகிறார்கள்; பின்னர் தம் காலைப் பாடங்களைப் பயிலும்பொருட்டுச் செல்லுகிறார்கள். தூய்மையான ஆசிரமத்திற்குள் மாணாக்கர்களும், ஆசிரியர்களும் அடிக்கடித் தம் கருத்துக்களைக் கூறி கலந்து கொள்ளுகின்றனர். நமது கவியரசரும், பிற நாடுகளிலிருந்து வரும் சிறந்தக் கல்வியாள

ரும் அவ்வப்போது இசைக்கும் உள்ளங் கவர் பாக்களும் ஆற்றும் சொற்பொழிவுகளும் மிக உயர்ந்தன. மாணுக்கர்கள் தாமோ அல்லது தம் குருதேவரோ இயற்றிய நாடகங்களை அடிக்கடி நடித்து மகிழ்விக்கிருர்கள். நிலவு சிறந்த சலனமற்ற இரவிலே, மாணவ ரனைவரும் ஒருங்கே கூடிப்பாடிக் களிக்கும் பண்புதானென்னே! இவை காரணமாக அவர்கள் உள்ளம் பூரித்து நெகிழ்கிறது. மனம் சிறக்கிறது. கலாசாலை வாழ்க்கையோர் களியாட்டாய்த் தோற்றுகிறதே யன்றி, கடுமையாய்ப் படுவதில்லை.

அன்றலர்ந்த மலரின் மதுவை யுண்ணுவான் வேண்டி எண்ணிறந்த வண்டுகள் வந்து இமைப் பொழுதில் கூடுவதே போன்று, கல்வித் துறையில் ஒளிர் சுடர் வீசும் தன்மை மிக்க நம் கவிகளின் ஆசிரமத்திற்கும், தூரத் துறைகளினின்றும், தீவுகளினின்றும் விற்பன்னர்களும், ஆசிரியர்களும் ஆண் பெண் இருபாலாரும் வந்து சேருகின்ருர்கள்.

எனவே, இந்த ஆசிரமம், மேல் நாட்டாரும் கீழ் நாட்டாரும் ஒன்று படுவதற்கு ஏற்றதோர் இடமுக இருக்கின்றது. ஆறு மாணவர்களை மட்டும் கொண்டு தாமே அவர்களுக்கு ஆசிரியராய்க் கவியரசர் தோற்றுவித்த இச் சிறு ஆசிரமக் கலாசாலை, சர்வ தேச சர்வ கலாசாலையாக இதுபோது மாறிவருகிறது.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர்தான் இந்தக் கலாசாலை தோன்றியது. இது இப்போது எய்தியுள்ள விருத்தி நிலையை நோக்குமிடத்தும், அங்கே பல நாடுகளின் மாணவர்கள் நாட்டமுற்று வந்தெய்துவதைக் கருதுமிடத்தும், தற்கால உலகின் தெய்வீக நாட்டத்தைத் தணிப்பதற்கும், நம் நாட்டினர் தம் இயற்கையறிவைப் பெருக்கிக் கல்வி சம்பந்தமான தேவைகளை வழங்குவதற்கும் இதுவே ஏற்றதெனக் கூறுதற்குப் பிறிதோர் சான்றுந் தேவையோ?

'உலகெலாம் ஓர் குடி' என்பதே நம் நோக்கமானுல், இத்தகைய சர்வ கலா சங்கங்கள் பல தோன்ற வேண்டும். உலகில் மக்களாய்ப் பொற்புடன் வாழ்வதற்கு இவையே பயிற்சி நிலயங்களாம். நாடு தோறும் இவை தோன்றி மக்களிடையே சாந்தத்தையும் சமாதானத்தையும் பெருக்கி எல்லா நாட்டினருக்குள்ளும் நல்லுணர்வை வளர்க்க வேண்டும்.

கல்வித் துறையில் கவிந்திருப்போர் சாந்த நிகேதத்தைக் காணுதிருப்பது கொடும் இழுக்கென்றும், அதைப் பற்றி சிந்தியாதிருப்பது ஒரு கொடும் பாவமென்று மட்டும் கூறி இவ்வியாசத்தை முடிப்போம்.

---

## 'என் மனம் துடிக்கிறது.'

உனது திருமணமும், உனது திரவியமும், உனது வாழ்வும் உனது இந்திரிய போகத்துக்கல்ல வென்பதையும், உனது தனிமையான பிரத்தியேக போகத்துக்கல்ல வென்பதையும் மறவாதே.

மிகத் தாழ்ந்த ஜாதியானும், அறிவிலியும், ஏழையும், எழுத்தறியாதவனும், தெருப் பெருக்குவோனும் உன் இரத்தத்தில் சேர்ந்தவர்களென்பதையும் உன் சகோதரர்களென்பதையும் மறவாதே.

என் மனம் துடிக்கிறது; கதறுகிறேன். ஏழைகளின் நிலை என்னை வாட்டுகிறது. இலட்சக் கணக்கான ஒரு நாட்டு மக்கள் பசியாலும், அறியாமையாலும் அலைந்து கொண்டிருக்கும் பொழுது, அவர்களின் உதிரத்தால் வளர்ந்து, கல்வி கற்று அவர்களுக்குச் சேவை செய்யாது நிற்கும் ஒவ்வொருவரையும் தேசத்துரோகி என்றே அழைக்கிறேன். ஏழைகளை அழுத்தி, நசுக்கித் தான் அடைந்த தனத்தால் டாம்பீகத்தில் உழலும் ஒவ்வொருவனையும் கேடு நிறைந்த அயோக்கியன் என்றே கூறுவேன். பசிப் பிணியால் பல இலட்சம் மக்கள் பரிதபிக்கும் பொழுது, அவர்கள் உதிரத்தால் இவர்கள் உன்னதமாய் வாழ இவர்களுக்கு என்ன உரிமை உண்டு?

—விவேகானந்தர்.

---

## ஆசார வித்து

நன்றி அறிதல் பொறைஉடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு
ஒப்புர வாற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவைஎட்டும்
சொல்லிய ஆசார வித்து.

—பெருவாயின் முள்ளியார்.

# வீரர் வணக்கம்

( 'பாரதி' ஆசிரியர் திரு. ரா. நாராயணசுவாமி )

பிருதிவி ராஜன்மீது பதிபக்தி கொண்டு மடிந்த சம்யுக்தாவையும், படையெடுத்து வந்த அலாவுதீனுடன் தனது பர்த்தா பீம் சிங்கையும் தனது 11 அருமைக் குமாரர்களையும் போருக்கு அனுப்பிக் கடைசியில் தானும் வீரத்துடன் சண்டை செய்து, அக்கினி குண்டத்தில் உயிர் நீத்த சித்தூர் இராணி பத்மினியையும், தனது அரச குமாரனை உதயசிங்கைக் காப்பாற்றுவதற்காகத் தனது செல்வ மகனையே பலியாகக் கொடுத்த நன்றியறிதலுள்ள தாதி பன்னாவையும், தனக்குண்டாகும் விபத்துக்களையும் பொருட்படுத்தாது, தனது உயிரையே நீத்த கரும் தேவியையும், தனது நாட்டின் மீட்சிக்காகத் தனது கணவனுடன் சேர்ந்து, எதிரிகளுடன் போர் செய்து கீர்த்தி பெற்ற தாரா பாயையும், தனது பர்த்தா ஜெஸ்வந்த் சிங்கை ஊக்கியும், அவர் காலம் கடந்துவிடவே தனது குழந்தைக்கு வீரப் பால் ஊட்டி வளர்த்து, தனது பகைவர்களிடம் வெற்றி பெறுமாறு செய்த ஜோதிபுரி ராணியையும், விரோதிகளுடன் அபார தைரியங் கொண்டு சண்டை செய்த வீர மாதரசி துர்க்காவதியையும், தன்னை விரும்பிய அரசனைப் பிடித்துக் கீழே தள்ளி மார்பின்மீது உட்கார்ந்து அவன் கழுத்தில் கத்தியை வைத்துக்கொண்டு புத்தி புகட்டிய கற்பரசி கமலாவையும், அகமது நகரத்தைக் காப்பாற்றிய வீர மங்கை சுல்தானா சாந்த் பீபியையும், வீரத்துடன் போர் புரிந்து ஜெயம் பெற்ற மாது சிரோமணி துளசிபாயையும், சிவாஜிக்கு வீர ரசத்தைப் புகட்டிய அவரது மாதா ஜீஜா பாயையும், ஆட்சி முறையில் சிறந்து விளங்கிய அகல்யா பாயையும் இந்தியா என்றுமே மறக்காது.

தமிழகத்தின் வீரத் தாய்மார்களின் வீரமும் தீரமும் உலகமே போற்றற் குரியவை. கண்ணகியின் வீராவேசமும், தனது கணவன் சண்டைக் களத்தில் மாண்டான் என அறிந்தும், போர் முரசைக் கேட்டவுடன் தன் அருமை மகன் தலையில் எண்ணெய் இட்டுக் குடுமியை வாரிக்கட்டி அவனிடம் வேல் கொடுத்து அந்தப் போருக்கு அனுப்பிய அந்த அன்னையின் அபார தேசாபிமானமும், தனது மகன் போர் முகத்திலிருந்து ஓடினான் என்று கேள்வியுற்றவுடன் ' அவனுக்குப் பால் புகட்டிய முலையை அறுத் தெறிந்துவிடுவேன் '

என்று கர்ஜித்துக்கொண்டு போர்க்களம் சென்றபொழுது, தனது மகன் மார்பில் அம்பு பட்டிறந்திருப்பதைக் கண்டு ஆனந்தமடைந்த அந்த மறவர் குலத் தமிழ் மாதின் ஒப்பற்ற வீரமும், மதுரை மங்கம்மாளின் சிறந்த அரசாட்சியும் தென்னாட்டில் தமிழன் ஒருவன் உயிர் உள்ளளவும் மறக்காமல் பாராட்டி, போற்றி வரப்படும்.

எத்தேசம் வீர வணக்கம் செய்யவில்லையோ, எத்தேசம் வீரர்களுக்கு உற்சாகம் அளித்து அவர்களை ஆதரிக்க வில்லையோ, அத்தேசத்தில் வீரர்கள் அதிகமாய்ப் பிறக்க மாட்டார்கள்; அந்நாடு அதி சீக்கிரத்தில் அடிமையாய்ப் போய்விடும். நமது மாதரு பூமி, தனது பண்டைப் பெருமைகளை மறுபடியும் அடைய வேண்டுமேயானல், நமது நாட்டில் தேசாபிமானம் பொங்கிப் பொங்கித் ததும்ப வேண்டுமேயானல், பாஷாபிமானம் உயர்ந் தோங்க வேண்டுமேயானல், சுதந்திரம் வேரூன்ற வேண்டுமேயானல், புத்தம் புதிய ஆவேசம் கிளம்ப வேண்டுமேயானல், அடிமைத் தனத்தி லிருந்து நாம் விடுதலை பெற வேண்டுமேயானல், மக்களிடைச் சமத்துவம் உதயமாக வேண்டுமேயானல், மற்ற முன்னேற்றமடைந்த நாடுகள் போன்று தலை சிறந்து விளங்க வேண்டுமேயானல் நாம் வீரர் வணக்கம் செய்யவேண்டும்; வீரர்களைப் போற்ற வேண்டும்; வீரர் சரித்திரங்களைப் படித்து மகிழவேண்டும்; வீராதி வீரர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும். வீரர் வாழ்க, வாழ்க! வீரம் எழுக, எழுக!!

## உப்பின் தீமை

உப்பை அதிகமாக உபயோகிப்பதால் விரைவில் கிழத்தனம் ஏற்படுகிறதென்றும், உப்பு உண்ணுவதைக் குறைக்க வேண்டுமென்றும் ஜோசையா ஓல்டுபீல்டு என்ற பேர் போன ஆங்கில நாட்டு வைத்தியர் கூறுகிறர். உணவுப் பொருள்கள் அனைத்திலுமே உப்புச் சத்து அடங்கி யிருப்பதால் செயற்கை உப்பைக் கூடியவரை விலக்கி வாழ்தலே நலமாகும். விரைவில் முதுமை அடையாமல் இளமையுடன் வாழ விரும்பும் தமிழ் மக்கள் இதனைக் கவனிக்க வேண்டும்.

# கோயிற் பூனைகள்

(திரு. பெ. தூரன்)



நானும் என் நண்பர்களில் மூவருமாகக் காஞ்சிபுரத்திற்குச் சென்றிருந்தோம். சென்னையி லிருந்து வழி முழுவதும் இரு மருங்கிலும் வரிசை வரிசையாகப் பெரு மரங்களும், ஆங்காங்கே சிறு குன்றுகளும், ஏரிகளும் பொலிவுடன் விளங்கின. சுற்றுமுள்ள காக்ஷிகளைக் கண்டு களித்துக்கொண்டு காலை யிளவெயிலில் அம் மரங்களிடையே மோட்டாரில் வேகமாகச் செல்வது இன்பகரமாக இருந்தது.

சுமார் பத்தரை மணிக்கு நாங்கள் பெரிய காஞ்சியை அடைந்தோம். அதற்குள் அந் நாளை எப்படிக் கழிப்பது என்று எங்களுக்குள் ஒரு வகையாக முடிவு செய்தாயிற்று.

அம் முடிவின்படி எங்கள் முதல் வேலை குளத்திற் குளிப்பது. அங்குள்ள குளங்களெல்லாம் பாசி படர்ந்து வெறுங் குட்டைகள் போன்றிருந்தன. அவைகளிற் காலை வைப்பதற்கும் எங்களுக்கு அருவருப்பாக இருந்தது; அதனால் நாங்கள் பக்கத்தி லிருந்த ஆழமில்லாத ஒரு வட்டக் கிணற்றில் குளித்து விட்டோம்.

வேஷ்டிகள் உலர்ந்தவுடன் நாங்கள் சிவன் கோயிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனத்திற்குத் தயாராக இருந்தோம்.

தரிசனம் ஆயிற்று. உட்பிரகாரத்தை விட்டு வெளிக்கிளம்புமுன், 'ஏன், சுற்றி வந்து நாயன்மாராதிகளைப் பாருங்களேன்' என்று அழுக்காடை அணிந்துகொண் டிருந்த ஒரு பிராமணன் அன்போடழைத்தான். நாங்கள் அனைவரும் காஞ்சிக்குப் புதியவர்களாகையால் அவனை எங்களுக்கு வழிகாட்டியாக உடனே ஏற்றுக் கொண்டோம்.

'இதோ இவர்களெல்லாம் நாயன்மார்கள். இவர் காரைக்காலம்மையார். மற்றவர்களெல்லாம் இவர் பிள்ளைகள். அதோ அந்த இடத்தை நன்றாய்ப் பாருங்கள்; அதுதான் விஷ்ணு, சிவனைக் குறித்துத் தபஸ் பண்ணின இடம்' என்று அப்பிராமணன் சொல்லிக் கொண்டே போனான். ஒவ்வொரு சிலைக்கும் ஒவ்வொரு கதை கேட்டோம். (இப்பொழுது எனக்கு ஒன்றும் ஞாபகத்திலில்லை.)

ஒரு பக்கத்தில் பெரிய லிங்கம் ஒன்று இருந்தது. அதை யணுகியதும் வழிகாட்டி எங்களைக் கீழே அமருமாறு சொன்னான். நாங்களும் உட்கார்ந்தோம். பிராமணன் வாடிப்போன மாலைகளை (தங்கரலித் தழைகளால் தொடுக்கப்பட்டவை யென்று நினைக்கிறேன். தங்கரலித்தழையோ நொச்சித் தழையோ என்பது சந்தேகமாக விருந்தாலும் அம்மாலைகளிற் பூக் கிடையாது என்பது உறுதி.) எங்கள் கழுத்திலணிந்துவிட்டு, 'இதுதான் ஆயிரத்தெட்டு லிங்கங்களையும் தன்னுள்ளடக்கிய மஹாலிங்கம். இதன் முன்னிலையில் ஒரு காலணாத் தானங் கொடுத்தால் ஆயிரத்தெட்டுக் காலணா கொடுத்தது போலாகும்; ஒரு பிராம்மணனுக்கு அன்ன மளித்தால் ஆயிரத்தெட்டுப் பிராம்மணர்களுக்கு அன்னமளித்த பலன் உண்டு' என்று அதன் பெருமையை எங்களுக்கு எடுத்துச் சொல்லி, 'ஏதோ இப்படி தர்சனம் பண்ண வர்ரவா சந்தோஷப்பட்டுக் கொடுக்கிறதை வாங்கிச் சாப்பிட்டுண்டு இருக்கே. எனக்குக் கோயிலில் வேறு வரும்படி ஒன்றுமில்லே' என்று முடித்தான்.

இதற்குள் பார்வதி கோயில் அருச்சகருக்குக் கோபம் பிறந்துவிட்டது. 'என்னங்காணும், வர்ரவாளே இப்படி நிறுத்தி வைச்சிண்டிருந்தா' என்று அவர் இடிபோலக் கர்ஜித்தார்.

என் நண்பரில் ஒருவர் வழி காட்டிக்கு ஏதோ கொடுத்தார். பார்வதி கோயில் அருச்சகரின் பருத்த தொந்தியையும், கோபத்தையும் கண்டு பிரமித்து விட்டேனாதலால் நான் அதைக் கவனிக்க முடியவில்லை.

பின் பார்வதி தரிசனம். நான்கு வேதங்களையும் நான்கு கிளைகளாகவுடைய மாமரத்தைப் பார்த்து விட்டுக் கோயிலைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். உயர்ந்த கோபுரங்களும், மதிற்சுவர்களும், இடிந்து போன ஆயிரக்கால் மண்டபமும், ஒரு அரணமைந்த கோட்டையை நினைவுறுத்தின. என் நண்பர்களில் சரித்திரம் வாசிக்கும் ஒருவர்—அவருக்கு இவைகளைக் கண்ணுற்றதும் அங்கு நடந்த போரும், போர் புரிந்த அரசர்களும் நினைவிற்கு வந்தன போலும்—'இவையெல்லாம் இப்படிப் பாழாய்க் கிடக்கின்றனவே. நம் நாட்டுப் பழங்கலைகள் அழிந்து போகின்றனவே! இதைச் சீர்திருத்துவார் இல்லையா? கோயிற் பணத்தை என்ன செய்கிறார்கள்'? என்று வாய்விட்டுக் கத்தினார்.

இதற்குள் மணி ஒன்றாகி விட்டபடியால் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு நாங்கள் பக்கத்திலுள்ள ஒரு மண்டபத்தில் சற்று இளைப்பாறுவதற்காக அமர்ந்தோம். இயற்கையாகவே எங்கள் பேச்சு அதுவரை கண்டவை கேட்டவைகளைப்பற்றிச் சென்றது.

'கோயிலில் வேறு வரும்படி கிடையாது என்றால் கோயில் என்ன வியாபார ஸ்தலமா?' என்றார் ஒரு நண்பர்.

'வரும்படிக்காகவா கோயி லிருக்கிறது?'

'கொடுத்துப் பழக்கிவிட்டோம்.' (இதைச் சொன்ன அன்பர் பல தலங்களைத் தரிசித்தவர். அருச்சகர்களை அவருக்கு நன்கு தெரியும்.)

'அதிருக்கட்டும், அந்த மாமரத்தின் மஹிமையைப் பார்த்தீர்களா?' என்றேன்.

'நான்கு கிளைகளையுடைய மரங்கள் உலகத்தில் எத்தனையோ இருக்கின்றன. அதனால் அவைகளுக்கு ஒரு பெருமையோ, மஹிமையோ எப்படி ஏற்படக் கூடும்?' என்றார் ஒருவர்.

'இதெல்லாம் வெறுங்கட்டு' என்றார் மற்றொருவர்.

'கட்டோ, கதையோ—அதில் ஒருவன் பிழைக்க வழியிருக்கின்றதல்லவா?' என்றார் சரித்திரம் வாசிப்பவர்.

பிறகு நாங்கள் வரதராஜப் பெருமாள் சந்நிதியை யடைந்தோம். அர்ச்சகன் கோயிலைப் பூட்டிவிட்டுப் படுத்துறங்கிக் கொண்டிருந்தான். 'நாங்கள் சுவாமி தரிசனம் செய்ய முடியுமா?' என்று அவனை எழுப்பிக் கேட்டதற்கு, 'மூன்று மணிக்குமுன் கதவை நீக்கக் கூடாது' என்று அவன் சொல்லிவிட்டான். எங்களுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. மூன்று மணிவரை அங்கிருந்தால் சின்னக் காஞ்சியைப் பார்த்துத் திரும்ப நேரமிராது.

ஆனால் நல்ல வேளை. 'கொடுத்துப் பழக்கி விட்டோம்' என்று சொன்ன அன்பர் 'அருச்சனை' என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார். உடனே கோயிற் கதவு திறந்து விட்டது, தரிசனமுங் கிடைத்தது.

பெரிய காஞ்சியில் வேறு விசேஷமொன்றுமில்லை. ஒரு வண்டி வைத்துக்கொண்டு சின்னக் காஞ்சிக்குச் சென்றோம். அந்தக் கோயிலும் பல இடங்களில் மாசுண்டு கிடக்கின்றது.

கல்லில் செதுக்கிய சங்கிலிகளும், சிற்பவேலை யமைந்த கல் தூண்களும் கவனிப்பாரற்றுக் கிடந்தன. கோயில் யானைக்கு மதம் பிடித்து உடைத் தெறிந்த சப்பரங்கள் ஒரு புறம், பாசி பிடித்த குளம் ஒருபுறம், உப்புப் பொரிந்த கோபுரமொருபுறம் இவ்வாறு நாற்புறமும் பொலிவற் றிருந்தன.

சுவாமியைக் கும்பிட்டுவிட்டுத் திரும்பும்பொழுது நண்பர்களில் ஒருவர் அர்ச்சகருக்கு ஒரு அணுக் காணிக்கை கொடுத்தார். 'இரண்டணுக் கட்டளை - கற்பூர தீபாராதனைக்கு இரண்டணு, அர்ச்சனைக்கு மூன்றே காலணு' என்ருன் அர்ச்சகன்.

'நல்லது கொடுங்கள். சாமி முன்னிலையில்.'

ஆறு மணிக்கு மோட்டார் புறப்பட்டது. குன்றுகளின் பின் எழுந்த நிறைமதியின் அழகையும், அதன் அமுத கிரணங்களில் முழுகிக் கிடந்த மரங்க ளடர்ந்த நிலத்தின் வனப்பையும் கண்டு களித்து, அவ்வியற்கையி லுறையும் இறைவனைக் கோயிலிலும் குளங்களிலும் காணுது, இயற்கையிலேயே உணர்ந்து வணங்கிய எங்களுக்கு 'இவ்வளவு சீக்கிரத்தில் சென்னை வந்துவிட்டோமே!' என்று வருத்தமாகவே யிருந்தது.

## சுகாதார முறையில் படுக்கை யறை

சுகாதார முறையில் வீடு இருக்க வேண்டுமாயின் இரண்டு விதிகளைக் கட்டாயம் கவனிக்க வேண்டும். அவற்றுள் ஒன்று வெளிச்சமும் காற்றேட்டமும், மற்றென்று ஒரு அறை குறைந்தது எவ்வளவு விஸ்தீரணம் இருக்க வேண்டுமென்பது. ஒரு அறையில் போதுமான வெளிச்சமும் காற்றேட்டமும் வேண்டுமாயின் அதன் விஸ்தீரணத்தில் எழில் ஒரு பகுதி அளவாவது ஜன்னல்கள் இருக்க வேண்டும். வெளிச்சமும் காற்று மில்லாத அறையில் படுத்துத் தூங்கினல் பலஹீனமும் நோயும் உண்டாகும். இந்நாட்டில் படுக்கை யறை எவ்வாறு இருக்கின்ற தென்பதைப் பாருங்கள். அவை மிகச் சிறிதாயும் காற்றேட்ட மில்லாமலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு படுக்கை யறை குறைந்தது 144-அல்லது 120-சதுர அடி விஸ்தீரண முள்ளதாகவாவது இருத்தல் வேண்டும். அதாவது ஒரு அறை 12 அடி அகலமும் 12 அடி நீளமும் உள்ளதாக அல்லது 12 அடி நீளம் 10 அடி அகலம் உள்ளதாகவாவது இருக்க வேண்டும். இந்த அறைக்கு 20 சதுர அடி விஸ்தீரணமுள்ள ஜன்னல் இருக்க வேண்டும்.

—சிற்ப சாஸ்திர நிபுணர் திரு. புல்போர்டு.

# நிர்மலை

ஒரு சிறு கதை

(திரு. M. K. தணிகாசலம்)

தமிழ்நாடு
208592
சென்னை-600 008



வேதபுரி ஓர் அழகிய ஜமீன் கிராமம். அதன் அழகைக் கெடுப்பதற்கே ஜமீன்தார் சீதா ராம நாயுடு அங்கு வசித்து வந்தார். ஜமீன் தாரரது கல்யாண குணங்கள் அநேகம். அதை இங்கு எழுதுவது அனுவசியம். சுருக்கமாய்க் கூறலாம். நாயுடு பெரும் காமுகர்; குடியர்; சூதாடி; இரக்கமில்லாத் தடியர்........இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம். இவரிடம் அநேக சிப்பந்திகள் கூலி பெற்று சகல இழிவான காரியங்களையும் செய்வதற்குத் தயாரா யிருந்தார் கள்.

ஒரு மச்சு வீட்டிலே ஒரு யுவகனும் யுவதியும் உட்கார்ந்து ஏதோ பேசிக்கொண் டிருந்தனர். யுவகனது பெயர் சந்திரசேகரன் இவன் ஒரு பி. ஏ. ஹானர்ஸ் பட்டம் பெற்றும் இக்கிராமப் போர்டு பாடசாலையில் உபாத்தியாயர் வேலைக்கு 22 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்திருந்தது அவன் தலைவிதியைக் காட்டுகின்றது. யுவதியின் பெயர் நிர்மலை—நமது கதாநாயகி. நிர்மலை சொன்னாள்: 'சந்திரா! நாம் காலத்தை வீணாய்க் கொல்லுகின்றோம். ஓய்ந்த நேரத்தில் ஏன் ராட்டினம் சுற்றக் கூடாது. ஓய்ந்த நேரத்தில் நூல் நூற்பேன். சர்க்காவின் இனிய சங்கீதத்தில் என் மனச் சோர்வுகளெல்லாம் மாய்ந்துவிடும். நீயும் பள்ளிக்கூட வேலை முடிந்ததும் நூல் நூற்க லாம். என்னமோ முன்பெல்லாம் நகரத்தில் 'சர்க்கா வகுப்பு' ஏற்படுத்தி பெரிய ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தாய். இப்போது அதை யெல்லாம் அறவே மறந்துவிட்டாய். நாளைய தினம் பரிதிபுரத்திற்குச் சென்று சர்க்காக்களை எடுத்து வந்துவிடு. நாமும் நூற்கலாம். கிராமப் பையன்களுக்கும் சொல்லித் தரலாம்.'

சந்திரன் அதைக் கேட்டு, 'கண்ணே! வாஸ்தவத்தில் மறந்து விட்டேன். நாளைய தினம் நமது வீட்டில் சர்க்காக்கள் வரிசையாக விளங்கும்; கவலையேன்!' என்றான்.

காலை நேரம். பறவைகளின் ஆனந்த மயமான சப்தங்கள் மனதைப் பரவசப்படுத்துகின்றன. மலர்களை முத்தமிட்டுத் தழுவிய வெறிகொண்ட பூங்காற்று அதன் வெறியை மக்களுக்கும் அளித்துக் கொண்டே போகின்றது. நிர்மலை ஒரு வெள்ளிக் குடத்தில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு சாலைவழியே வந்துகொண் டிருக்கிறாள். யாரோ ஒருவன் அவளை உற்று நோக்குகின்றான். 'அச்சா! எக்ஸெலண்ட் பியூட்டி!' என்று தனக்குள்ளேயே அவன் கூறிக்கொள்ளுகின்றான். அவன் யார்? அவன்தான் ஜமீன் நாயுடுவின் தரகன்—பச்சைத் தமிழில் சொன்னால் டாபர் மாமா—நீலகண்டன். நிர்மலை இதை யெல்லாம் கவனியாதவளாய் வீடு வந்து சேர்ந்தாள்.

நறுமணங் கமழும் நல்லிளங் காற்று மெல்லென வீசும் அந்தி வேளை மறைந்து அரை மணி நேரமாயிற்று. நீல வானத்தில் மோகினி சந்திரிகா புன்னகையுடன் எழுந்து அவளிடத்திலுள்ள அமிர்தத்தை அள்ளி அள்ளி பூலோகத்தின்மீது வீசினாள். இத்தகைய மோகன நிலவின் ஒளியிலே-தென்றல் வீசும் நேரத்திலே நமது சந்திரனும் சுந்தரியும் அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் உட்கார்ந்து சர்க்காவைச் சுற்றிக்கொண்டு, இன்பமயமாகப் பாடிக்கொண் டிருந்தார்கள். இத் தருணத்தில் திடீரென்று அந்த இடத்தில் ஐந்து கட்டைத் தடியர்கள் தோன்றினார்கள். கண்ணிமைக்கு முன் சந்திரனின் தலைமீது 'தொப்' என்ற சப்தம் கேட்டது. சந்திரன் மூர்ச்சையானான். நிர்மலையும் மூர்ச்சையானாள். தடியர்கள் அவளைத் தூக்கிச் சென்றார்கள்.

நிர்மலை கண் விழித்தாள்; தான் ஒரு சிங்கார அறையிலே—பட்டு மெத்தையிலே இருப்பதைப் பார்த்தாள்; சுற்றிலும் கொக்கோகப் படங்கள் மாட்டி யிருப்பதையும் கண்டாள். விஷயம் அவளுக்குப் புரிந்துவிட்டது. தான் கற்பழிக்கப் பட்டதையும், தன் புனிதம் நாசமாக்கப் பட்டதையும், அவள் உணர்ந்தாள். அச்சமயம் அவளது மனோ வெழுச்சிகளை எந்த ஆசிரியனும் எழுத முடியாது. ஆசிரியன் அவள் நிலையி லிருந்து அதை அநுபவித்தா லொழிய அதை எழுத முடியுமா? என்ன செய்வாள்? அங்கிருந்த கண்ணாடிப் பீரோவின் கண்ணாடியைத் தன் கையால் குத்தி உடைத்தாள். அவள் சிவந்த கைகளி லிருந்து ரத்தத் துளிகள் சொட்டின. ஆ! விதியின் கூற்றை விலக்க முடியுமோ? மறுகணம் நாயுடு 'என் கண்ணே' என்று கூறிக் கொண்டு உள் நுழைந்தார். ஜெகன்மோகினி நிர்மலை ரௌத்திராகாரமான கோபத்துடன் அவர் மேல் மின்னலெனப் பாய்ந்து கண்ணாடித் துண்டால் வயிற்றில் குத்தினாள். நாயுடு கீழே வீழ்ந்து சவமானார்.

கண்ணாடித் துண்டுடன் கன்னிகை தன் வீட்டிற்கு ஓடினாள். சந்திரன் மண்டை பிளவுபட் டிருப்பதையும் அவன் சாகுந்தறுவாயி

இடையெழுத்து மிகுவது. சித்திரவண்ணமாவது குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் விரவி வருவது.........

(வீரசோழியம் உரையுடன்)

6. அங்ஙனமன்றோ உபாதியின்மையிற் றோன்றிய வாசனை யோடு கூடிய மறித்துக் காண்டலிற் றோன்றிய வாசனையோடு கூடிய வுடனிகழ்ச்சி கவருங்காட்சியானே புகைதீக்களது வியாத்தி துணி யப்படும்.

(தருக்கபாஷை)

7. வெகுதானிய வருஷம் ஆனிமீ 20௳ ஆதிவார நாள் காஞ்சிபுரத்துக்கு மேற்கு காவேரிப்பாக்கத்துக்குக் கிழக்கு மூணு நாழி வழியிலே கருவிடுகளத்தூர் திருவேங்கிட பிள்ளை குமாரன் பொன்னம்பலத்தா பிள்ளை கருப்பூர் வேளாபிள்ளை குமாரன் வயித்தி னாத பிள்ளை எழுதிக்கொடுத்த நாலடிதேவர் எழுதி முடித்தான்.

(ஸரஸ்வதிமஹால் லைபிரரி 82 (a) ஓலைச்சுவடி)

8. மன்மத சொரூபரான கஸ்தூரி நாயக்கர் அவர்கள் மனோ ரம்மியமாக ஸ்ரீமத் ராமாயண கதாசுதா சமுத்திரத்தை எழுதி முடிக்கவேணுமென்று சிந்திச்சு கோபால குலத்தில் பூவாத்தைபிள்ளை குமாரன் வாசுதேவ பிள்ளைக்கு சகல பாக்கியமும் கொடுத்து எழுதி முடிந்தது.

(IX No. 1. ௭௫)

9. பரமேசுபரனும் பாறுவதிபு மிமய பருவத்திலே யிருக்கிற போது தன்ம கதையான ஒரு கதை சொல்லுமென்று பரமேசுபரனை அம்மை கேழ்க அப்போ யீசுபரியாருக்கு சொன்ன கதை.

(முப்பத்திரண்டுபதுமை கதை)

10. அப்படிப்பட்ட பிராமணுளே யிந்த பரமானந்தர் வெகு உபசாரம் பண்ணினர். அந்தப் பிராமணுள் கவியீந்தாருடைய சமீபத் திலே உளுக்காந்துகொண்டு மகா பரிசுத்தமாயிருக்கிற சிவாஜீ ராசாவி னுடைய சரித்திரம் கேட்கவேணுமென்று.........

(சிவாஜி சரித்திரம்)

11. பரப்பிரமானந்த யோகீசுபரரும் பூரணப் பிரமானந்த யோகி யும் வல்லத்திலே யிருந்து தஞ்சாவூருக்கு வந்து சீதாப்பராவு அவல் தாரைக் கண்டு அவருடனே குருசுவாமியவர்கள் சொன்ன சேதி.

(பரமானந்தயோகி சரிதம்)

12. ஆனபடியினாலே மயிபதி பண்ணினாளே அத்தியாரோபமான நிமித்தியம் என்போல் வந்து விழுந்தது என்று அறியுங்கோள். சொஷ்த்த ஸ்ரீபக்தி விசைய கிரந்தத்தினால் பக்தாள் பாவிகாள் மனோரதம் பூரணமாக்கிவிக்கும். இந்த ஒன்பதான அத்தியாயம் கராசாளமுடையது.

(பக்தவிஜயம் வசனம்)

13. காம நுகர்ச்சிக் கின்பமாவததனை நுகர்தற் குரியராவார் ஆராமைபற்றி தம்முளூடுதலவ்வூடுதலுக் கின்பமாவததனை யள வறிந்து நீங்கித் தம்முட் கூடி முயங்குதல் கூடுமாயி னம்முயக்க மென்றவாறு. கூடுதலொத்த வுணர்வினராதல் முதிர்ந்து துனியாய வழித் துன்பம் பயத்தலானுந் தாமுணராத புலவியாய வழிக் கலவி யின்பம் பயவாமையானு மிரண்டிற்கு மிடையாகிய வளவறிந்து நீங்குத லரிதென்பதுபற்றிக் கூடி முயங்கப்பெறி னென்றான்.

(திருக்குறள், காமத்துப்பால், பரிமேலழகருரை)

14. பொருளாவன: அறம் பொரு ளின்பமுமவற்றது நிலையின் மையு மவற்றினீங்கிய வீடு பேறுமாம். பொருளெனப் பொதுப்படக் கூறவே யிவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியுங் காட்சிப் பொரு ளுங் கருத்துப் பொருளு மவற்றின் பகுதியாகிய வைம்பெரும் பூதமு மவற்றின் பகுதியாகிய வியங்குதிணையு நிலத்திணையும் பிறவும் பொருளாம்.

(தொல்காப்பியம்—நச்சினார்க்கினிய ருரை)

15. சார்வபூமேந்திரனே நீர் செய்த பக்திக்கு வுகந்து சகல வரங்களும் அருள் புரிந்தோம். நீயும் உன் மனைவியரும் புத்திரரும் நித்யானந்தமாய் சந்தத சுகத்துடனே தீர்க்காயுசாய் சித்திகளெல் லாம் பலித்து மங்களமும் ஜெயமும் மகிழ்ச்சியும் கீர்த்தியும் கல்யாண சுபங்களும் குலவிர்த்தியும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமு மாய் செங்கோல் நடத்திவைத்து சகல சாம்பிராச்சியமும் ராஜியாதி பத்தியங்களும் பெறுக.

(அருணசல கவிராயர்—மதனசுந்தரபிரசாதசந்தான விலாசம்)

16. அகோதெப்படியென்றால் அந்திரலோகம், சொற்கலோகம், தவலோகம், பிரம்மலோகம், விஷ்ணுலோகம், தெய்வலோகம், குமாரலோகமுமா யிருக்கும். அந்தப் பிரமண்டத்திற்கு நடுவாகிய பூமி நூறுகோடி யோசினை விசாலமா யிருக்கும். சத்ததுவீபாயிருக் கும். அதுக்கு நடுநாகத்து விபுலட்சம் யோசனை. அதுக்கு நடு மகாமேரு. அந்த மகாமேருவைச் சூழ நவகண்டம்.

(பூமி லட்சண வகுப்பு)

17. இயாப்புப் பொறிகளையுடைய அழகு மிக்க வண்டினம் பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாகும். நீர்த்தருவிதாழாவுயர்சிறப்பிற் றண்குன்ற நன்னாடனே செல்வமுடையராய் வாழாதார்க்குத் தமரில்லை யென்றவாறு.

(நாலடியார் உரை)

18. இதனுட் பாட்டுத்தோறுந் துறையு மலங்காரமுங் கண்டு எழுதாதது ஒரு துறையுட் பலபட்டு வருதலாலும், ஓலங்காரத்தால் பலப்பட்டு வருதலாலும், அவையடைவாய் வாராது கலந்து வருதலாலும், பொழிப்பு முடிவுந் துணிவுங் கண்டெழுதினோம்.

(திருவரங்கத்தந்தாதி உரை)

19. கொடிக்குறி பார்த்த லென்பது செவிலி நாடத் துணியா நிற்ப, அவ் விருவரையு மிப்பொழுதே வரும் வண்ணம் நீ கரைந்தால், நினக்கு உணங்கலை அஞ்சாதிருந்துண்ணலாம்; அதுவன்றித் தெய்வத்திற்கு வைத்த நிணத்தையுடைய வலியையும் நினக்கே வரைந்து வைப்பேன்; அவ்வாறு கரைவாயாகவென நற்றாய் கொடிக்குறி பாராநிற்றல்.

(திருக்கோவையார் உரை—நாவலர் பதிப்பு)

20. வெய்யோன் கள்வனல்லனென்றாகை, அவ்வளைத்தோளி, மற்றைச் சிலம் பொன்றைத் தன் கையிலேந்திக்கொண்டு அவ்வாயர் பாடியினின்றும் ஊர்க்குள்ளே போனவள் ஆண்டுள்ள கற்புடை மகளிரை நோக்கி முறை செய்த லில்லாத அரச னிருக்கிற ஊரின்கணிருந்து வாழும் கற்பை யுடைய பெண்டிர்காள்! இஃது அதன் மற்றைச் சிலம்பு காணுங்கோ ளென்றா ளென்க.

(சிலப்பதிகாரம்—அடியார்க்கு நல்லா ருரை)

21. இவ்வாறு வேறு வேறு கண்ணழியாது, உங்கண் அவன் வாழையிலே வரு அப்பிலே கண்கால் தேன்தாழ் ஐயிலே கண்டு என்றலைக் கண்டே னெனக் கொண்டு கூட்டி, நும்மிடத்து அவன் வாழுங்கால் வாராநின்ற நீர்ப்பெருக்குப்போல வேய் காலாநின்ற தேனின் நற்சுவையைத் தாழ்ப்பதாய வியப்பினைத் தரும் இதழின் கண் உறுங்கண்டினை என்று கோடலை யான் கண்டே னென்றாளாக ஒரு முடிபு செய்யினு மமையும்.

(ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்)

22. கழறுத லென்பது அன்புடையார் மாட்டுத் தீயன கண்டால் அவ்வன்பிற் றலைப்பிரியாத சொற்களால் நெருங்குவது. கழறு

மாறு: குன்றம் உருண்டாற் குன்றிவழி யடையாகாதவாறு போல வும், யானை தொடுவுண்ணின் மூடுங்கலம் இல்லது போலவுங், கடல் வெதும்பின் வளாவு நீரில்லது போலவும், எம்பெருமான் நின் உள் ளம், அறிவு நிறையோர் புக் கடைப்பிடியின் வரைத் தன்றிக் கைம் மிக்கோடுமேயெனின் நின்னைத் தெருட்டற்பால நீர்மையாரும் உளரோ, நீ பிறரைத் தெருட்டி னல்லது?

(இறையனாரகப் பொருள்—நக்கீரனார் உரை)

23. ஸ்வஸ்தி ஸ்ரீ திருவாய்க் கேள்விக்குமேல் ஸ்ரீ கோமார பன்மகான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு யருவதினெகிராமாண்டு மாசிமாதம் முள்ளி நாட்டு உடை யார் திருவாலீசுரமுடைய நாயனார் கோயிலில் ஸ்ரீகாரியஞ் செய் வார்.

(திருவாலீச்சுரம் கல்வெட்டு)

---

## புது நடை

1. வெளி வேடமின்றி உள்ளன்புடையாரை எனைத்தானுங் கொடுத்துக் கொளல் வேண்டும். அன்புடையவர் பிறர் இன்புறுங் காலத்து இன்புற்றுத் துன்புறும் வேளையினில் துன்புறுவர். அன்பிற் கறிகுறி அங்கண்ணீர். அன்பீனுமார்வம். அதுவினும் நட்பு. அன்பே இம்மையில் மறுமையின்பம் விளைக்கும். அகத்துறுப்பாகிய அன்பின் றேல் உயிர்நிலை என்புதோல் போர்த்ததாம். எலும்பில்லாப் புழுக்களை வெய்யோன் சுடுதல் போல அன்பில்லா உயிர்களை அறக்கடவுள் சுடும்.

(திரு. M. S. பூர்ணலிங்கம் பிள்ளை அவர்கள்)

2. ஐயா, பாட்டின் சுவை என்ன வாய் ருசிக்கின்றது, தத்து வத்தின் பெருமை என்னவாய் ஜொலிக்கின்றது, நல்லருசி, நல்லருசி, நல்ல சுவை, நல்ல சுவை, அப்பமொடு தோசை வடையாய் என்று அழகான வெண்பாவை அலங்காரமாய் முடித்தார். தெவிட்டாத தேனையும், குமட்டாத பாலையும், முப்பழத்தின் முதிர்சுவையையும், கரும்பின் ரசத்தையும், கற்கண்டின் இனிமையையும் கவித்திறத்துக்கு உவமை கூறிக் களிப்படைவதை விட்டு, கம்பன் பாட்டுக்குக் காரா பூந்தியையும், மூவர் தமிழுக்கு முறுக்கு மசால்வடையையும் பொருத்தங் கூறிப் புகழ்படலாகுமா?

(திரு. T. பக்தவத்சலம் அவர்கள் B. A. M. B. P. I.)

3. எங்கு ஒருகால் நம்மொழியும் இறந்த பாஷைகளுளொன் றாகுமோவென் றையுறுதற்கு மிடனுண்டாயிற்று. தமிழது சிறந்

சீவிப் பெருமையோ ? அன்றி நம்மனோரது அதிர்ஷ்டவசமோ ? பின் மேற் கூறப்பட்ட போலி யறிவினரது செருக்கடங்குங் காலமோ ? அன்றி வேறென் சொல்வல் ?

(திரு. A. கணபதிப் பிள்ளை அவர்கள்)

4. தமிழ்த்தாயீன்ற தகைசால் நங்கைகாள்! நுங்களையொன்று வேண்டுதும்; அன்புடனதற் கிசைவீர்களென்று நம்புகிறேன். ஊழ் வினைக் காரணமாகி இந்நாள் எம் நாட்டிடைத் தோன்றி எம் பழைய சிறப்பையெல்லாம் சிதைத்துப் பொய்மையையும் ஆரவார நீர்மையையும் பெருக்கிக் காட்டுத்தீப்போற் பரந்து எம்மனோரை யெலாம் பற்றி மயக்கிவரும் மேலைநாட்டுப் போலி நாகரிகத்தின் பயனாக நும்மாற் பெரிதும் உவந்து பாராட்டப்படும் புறப்புனைவைத் தவிர்மின் !

(இலங்கை திரு. L. சின்னதம்பி அவர்கள்)

5. வில்லேருழவரைக் கீழ்ப்படுத்தியும் சொல்லேருழவற்கே ஏற்றம் கொடுத்தமையால், படைக்கஞ்சிப் பள்ளியறை புகுந்த மகளிர், அறிவினை நாடி அம்பலம் புகுந்து, அவையத்தாரில் ஒருவராய், அனைத்துலகும் இன்பமுற இனிதே உழைத்தருளி, உயர்நிலை பெறுமாறு அவர்களுக்கோர் ஏற்றம் தந்தருள்கின்றார்.

(திரு. T. P. மீனாக்ஷிசுந்தரம் அவர்கள் M. A., B. L., Ec. M. R. A. S.)

6. ஒருவர் புகழொளித் திகழ்குன்றின் குவட்டினின்று பொற்புற்று விளங்க யாம் இழிவுறு படுகரிற்கிடந்து பருவரலெய்துவமோ வென்று மற்றவர்மே லிகழுரைப் பகழி சிந்திக் கலாம் விளைத்துழி தருவாருமாய்ப் பலவேறுபட்டுச் சிதர்ந்து போயினர்.

(திரு. மறைமலையடிகள்)

7. இனிக்களன்கூறவே காலமுமடங்காதோவெனின், நூல்செய்த காலத்தே யரங்கேற்றல் வேண்டுமென்பது நியமமாகாமையாற் பிற்காலத்துங் கூடுமாதலி னவ்விருகாலமும் வேறுதலுமுண்மை யான் வேறு கூறப்பட்டதென்பது.

(சோழவந்தானூர் திரு. அரசஞ்சண்முகனார்)

8. ஆஞ்சனேயாதி வானர வீரர்கள் சேதுபந்தனஞ் செய்யுங் காலத்தில் கடல் நீரிலே தோய்ந்து மணலிற் புரண்டு அம்மணலைக் கடலில் உகுத்த சிறு அணிற்பிள்ளையின் நன்முயற்சி அங்கீகரிக்கப் பட்டவாறே கல்விகேள்வியால் நிறைந்த இத்தலைமுறைச் சிரேஷ்டர் அங்கீகரித்து எனது இச்சிறு முயற்சியும் தமிழ் மாதாவுக்கு அர்ப்பித

மாம்படி அருள்புரியாதொழியார் என நம்பிப் பிரகடனஞ் செய்யப் படுகின்றது.

(திரு. P. சுந்தரம் பிள்ளை அவர்கள் M. A., F. M. U., F. R. H. S., M. R. A. S.)

9. அக்குன்றத்தி லிருக்கும் துறவிகளோடிருந்து வையத்தின் வருத்தங்களை வறிதே பார்த்துக்கொண்டிருப்பதைவிட யாதாயினும் ஓர் உயிரின் வருத்தத்தைத் தீர்ப்பதே மேலாகும் என்று கூறி, நொண்டிக்குட்டியைத் தூக்கித் தன் தோள்மேல் போட்டுக்கொண்டு தாயோடு மகிழ்ந்து தன் பின் கனைத்துவர அவ்வாடுகளுடன் சென்றார்.

(திரு. அ. மாதவையர் அவர்கள்)

10. கம்பர் செந்தமிழ்ப் பெரும்புலவருள் ஒருவர்; இராமாயணம் என்னும் பாரகாவியத்தை இயற்றிய செந்நாப்புலவர்; எஃகு செவியர்; நுணுகிப் பரந்த மதிவீறுடையர். அவர் கவிநலங்களை உற்றுணர்ந்த சான்றோர் அவற்றைச் 'சூத்திரம்' என்றும் 'சித்திரம்' என்றும் மிகுத் துரைப்பாராயினர்.

(திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்)

11. பின்னர், கவுந்தியடிகள் ஐயக்கடிகையும் மயிற்பீலியுங் கையகத்தேந்தி, அவ்விருவரையும் உடன்கொண்டு, அருகதேவன் பஞ்சமந்திரமே தமக்கு வழித்துணை யாவதெனக் கூறி மதுரை நோக்கி நடந்தார். நாளொன்றிற்கு ஒரு காவதமாக மணநாறும் மலர்க்காவும், மாபலாவின் செழுங்காவும் இடையிடையே பெற்ற பலவூர்களைக் கடந்து, மைந்நிறவண்ணன் ஐவாயரவில் அறிதுயி லமரும் அரங்க மடைந்தனர்.

(திரு. பொ. இராமானுஜம் அவர்கள்)

12. கண் முதலிய அறிவுக் கழிவிகளால் காண்டற்கியலாத நுண் பொருள்களை யெல்லாம் நுண்மாணுழை புலமையாகிய உட் கருவியாற் செய்யுளுலகத்திற் கண்டு இன்புறுதல் கூடும். அவ்வளவி ன்மையாது அவ்வுட்புறக் கருவிகளுக்கு மெட்டா தப்பாற்பட்ட திருவருளாற்றலின் சீரிய நிலையின் ஒரு சிறு கூற்றினையாதல் செவ்விய புலமை முதிர்ச்சியின் பயனாகிய மெய்யுணர்விற் கண்டு இன்புறுதற்கு முயலவேண்டும்.

(திரு. பண்டிதமணி. கதிரேசஞ் செட்டியார் அவர்கள்)

---

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

## ஒரு விநோத நாடகம்

(திரு. ஏ. சோக்கலிங்கப் பிள்ளை)

(பதிப்புரிமை ஆசிரியருடையது)

### அங்கம் 1.

### காட்சி 1.

இடம்:—சென்னைத் தங்கசாலை வீதி, நாராயண சாஸ்திரியார் வீடு.

காலம்:—காலை 8 மணி.

சாஸ்திரியார் வாசித்துக்கொண் டிருக்கும்போது, அவர் நண்பர் சங்கரராயர் பிரவேசம்.

பாட்டு

ஆயர்பெண்களின் நெறியினைக் கண்ணன்
அழித்ததின் கொடுமையோ அன்றி
தூயதாருக வனிதையர் நிறையைத்
தொலைத்த நல்லீசனுர் பவமோ
நேயமான தம்மனைவிய ராக
நிலைபெறும் ஆலயந் தோறும்
மாயமேசெயும் வேசையர் கற்பை
மாந்தர் நாடொறுங் கெடுப்பதுவே.

(என்று பாடி முடித்தவுடன் சங்கரராயர் வருகையைக் கண்டு)

நாராயண சாஸ்திரியார்:—இராயரவர்களே! வர வேண்டும், வர வேண்டும். தாங்க ளென்ன ஏழெட்டு நாளாக இந்தப் பக்கந் திரும்ப வில்லையே. காரணம்?

சங்கரராயர்:—நான் ஊரி லிருந்தால் உங்களைப் பாராமலிருப் பேனு? திடீரென்று என் மாமனுரிடமிருந்து கடிதம் வந்தது. என்னை உடனே புறப்பட்டு வரும்படி எழுதி யிருந்தார். தங்களிடம் பேசி விட்டுப் போனவுடன் அதை என் கையில் கொடுத்தார்கள். அதென்ன வெள்ளிக்கிழமையா? (யோசித்து) ஆம் ஆம், அன்றைய சாயங்காலமே பிரயாணப்பட்டு நானும் என் சமுசாரமும் குழந்தை களும் இரெயிலேறிப் போனேம். நேற்றிரவுதான் வந்தோம். இதோ இன்று காலையில் உங்களிடம் வந்தேன்.

நாராயண:—சரி. அங்கே எல்லாரும் க்ஷேமந்தானு? தாங்கள் அவ்வளவு அவசரமாய்ப் போன தென்ன? இத்தனை நாள் கழித்து வந்த தென்ன?

சங்கர:—என் மச்சினிக்கு விவாக முடிக்க ஏற்பாடு செய்திருக்கிறுர். வரனைப் பார்க்கவும் விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவும் வேண்டி என்னை வரும்படி யெழுதினுராம்.

நாராயண:—அவர், பாட்டுக் கச்சேரி, ஆட்டக் கச்சேரி எங்கே யிருந்தாலும் போவாரே, இந்தக் கலியாணத்தில் ஏதாகிலுந் தாசி கச்சேரி வைக்க யோசித்தாரா?

சங்கர:—ஒரு கச்சேரியா? ஆட்டு, பாட்டு இரண்டிற்கும் முன்னமே ஏற்பாடு செய்திருக்கிறுர். யாரோ ஜீவரஞ்சனியாம், ஜனரஞ்சரியாம். அவ்விரண்டு பேர்வழிகளும் சகோதரிகளாம். அவர்களைப் பற்றி அவர் வெகுவாய்ச் சிலாகித்துப் பேசினுர்.

நாராயண:—அடடா! அந்த யோகினி தேவதைகள் எங்கிருந்து வந்தன? நீர் அது விஷயத்தில் அவருக்குத் தக்கபடி சொல்லக் கூடாதா?

சங்கர:—நான் வேண்டிய மட்டுஞ் சொன்னேன். அவர் அந்தத் தாசிகள் விஷயத்திலேயே பிரியமுடையவரா யிருக்கிறுர். 'உமக்குச் சங்கீதக் கச்சேரி வைக்கவேண்டு மென்கிற அபிப்பிராய மிருக்கும் பட்சத்தில், திருவாரூர் தீக்ஷிதர், மகாவைத்தியநாதையர், கோயம்புத்தூர் தோடி இராகவையர், பட்டணம் சுப்பிரமணியையர், பிடில் கணேசகிரி, மிருதங்க ஹரிராவ், வீணை சேஷண்ணு, டோலக் நன்னுமியான் முதலிய வித்வாம்சர்க ளிருக்கிறுர்கள், அவர்களை யழைத்துக் கேட்கிறதுதானே! அந்தத் தாசிகள் தாம் மகா வித்வாம்சர்களோ?' என்று சொன்னேன். அதற்கு அவர் என்மீது மிகவுங் கோபித்துக் கொண்டார். பிறகு, அவருக்கும் எனக்கும் கொஞ்சம் மனஸ்தாபத்திற்கு இடமுண்டாயிற்று. நீர் தாசி கச்சேரி வைக்கிற பட்சத்தில் இந்தக் கலியாணத்திற்கு நானும் என் சமுசாரமும் வரவே மாட்டோ மென்று கண்டிப்பாய்ச் சொல்லித் திரும்பி விட்டேன்.

நாராயண:—இராய ரவர்களே! கலியாணத்தில் கச்சேரி யென்ன? கிச்சேரி என்ன? ஸார். நல்ல காரியஞ் செய்தீர்; மெத்த சந்தோஷம். இச் சென்னையிலும் சில பணக்காரர் வீட்டில் நடக்குங் கலியாணங்களைப் பார்த்திருக்கிறீர்க ளல்லவா? பந்தற் செலவென்ன? வாத்தியச் செலவென்ன? ஆட்டக் கச்சேரி யென்ன? பாட்டுக் கச்சேரி யென்ன? கண்ணுங் கருத்து மில்லாமல் பணத்தைச் செலவழிக்கிறுர்கள். அப்போதைக்குக் கடன் வாங்கித் தலைகால் தெரியா

மல் செலவு செய்து, பின்னல் கஷ்டப்படுகிருர்கள். அவர்களுக்குப் பொருளாட்சி நூல் (Economics) உணர்ச்சி சிறிது மில்லே. ஏனையா இப்படி அமிதமான செலவு செய்கிறீரே என்று யார் சொன்னாலும் அவர்கள் கேட்பதில்லே.

சங்கர:—சாஸ்திரியாரவர்களே! அவர்கள் ஒருவர் ஒருவரைப் பார்த்துப் பந்தையம் போட்டுக் கெட்டுப் போகிருர்களே தவிர வேறொன்று மில்லே. படுகிருர்கள் நமக் கென்ன?

நாராயண:—நமக்கென்னவா? அதைப்பற்றிப் பிறகு பேசலாம். சரி, இராய ரவர்களே! நம்ம ஊரில் விசேஷ மென்ன? தாங்கள் ஊருக்குப் போனது முதல் ஒன்றும் என் காதுக்கு எட்டுகிறதே யில்லே.

சங்கர:—தாங்க ளறியாத விசேஷ மென்ன இருக்கிறது. காமேஸ்வரம் பிள்ளேயவர்கள் தமது குடும்ப சகிதமாக இராமேஸ்வர யாத்திரை போன சங்கதி கேட்டிருக்கிறீர்க ளல்லவா?

நாராயண:—என்ன? அவர் பாரியாளும், அவர் மாமனும் நேற்றுச் சாயங்காலம் மதுரைக் கடைத்தெருவில் வேஷ்டி, புடவை வாங்கப் பேரம் பேசிக்கொண்டிருந்த போது நான் பார்த்தேன். என்னைக் கூப்பிட்டு இரண்டொரு வுருவைக் காட்டி, இது சாயம் நிற்குமா? அது வெள்ளிச்சரிகைதானு? என்று கேட்டார்கள். கொஞ்சநேரங்கூடப் பேசிவிட்டுப் போனேன். அவர்கள் நம் வீதியில்தான் குடியிருக்கிருர்கள். அந்த வீட்டுப் பெண்கள் பிரதிதினமும் எங்கள் வீட்டிற்கு வந்துபோய்க்கொண் டிருக்கிருர்கள். தாங்கள் கேள்விப்பட்டது பிசகாக இருக்கலாம்.

சங்கர:—சரி, சரி. தாங்கள் இன்னும் பழைய வழியிலேயே யிருக்கிறீர்? பார்யாளென்ருல் எந்தப் பார்யாளென்று நினேக்கின்றீர்? அவர் சமஸ்தானத்தோடு யாத்திரை செய்யப்போயிருக்கின்ருர்.

நாராயண:—என்ன! சமஸ்தானத்தோடா? இந்த வார்த்தையை யிப்போதுதான் கேட்டேன். சமஸ்தான மென்ரு லென்ன?

சங்கர:—தாங்க ளிதுவரையுங் கேட்டதில்லேயா? காமேஸ்வரம் பிள்ளேயவர்கள் நூதனமாக வைத்துக் கொண்ட தேவடியாள் வீட்டிற்குச் சமஸ்தான மென்று பெயர் வைத்திருக்கிருர்கள்.

நாராயண:—அப்படியா? வெகு அழகான பெயர். கேட்பாரில்லாமல் இந்த வூர் அடியோடுங் கெட்டுப் போய்க்கொண் டிருக்கிறது. பிரதி மனுஷனேயும் கட்டிக் கொண்ட பத்தினி யிருக்கக் கூத்தி

யாரை வைத்துக் கொள்ளும் பைத்தியம் பிடித்துக்கொண்டது. ஊரில் பெரிய மனுஷாளென்று திரியும் நாலேந்து பேரும் இப்படி அத்து மீறிப் பிரவர்த்தித்தால், இனிச் சில்லரைத் தேவதைகளைத் தண்டிப்பதார் ? கண்டிப்பதார் ?

சங்கர:—இந்தக் காலத்தில் தண்டிக்கிறதாவது கிண்டிக்கிற தாவது? அது வெகு காலத்திற்கு முன்னமே போய் விட்டது. முன் நான் சிறுவனாயிருந்தபோது, இந்த வூரில் தேவடியாட்களை வைத்துக் கொண்டிருந்தவர்கள் இரண்டு பேரோ அல்லது மூன்று பேரோ தெரியாது. உத்தியோகஸ்தர்களில் மோகனரங்க நாயுடு, காந்தையா முதலியாரிவர்களே. அவர்களும் தற்காலத்துப் பிரபுக்களைப் போலப் பெரியோர் சிறியோ ரென்பதை யெண்ணுமல், மரியாதை கெட்டு அத்துமீறித் திரிந்தவர்களல்ல. ஊர்சத்தமடங்கிய பிறகு 10 மணிக்கு மேல் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் முக்காடு போட்டுக் கொண்டு போவார்கள் உதயமாகு முன் இருட்டிருக்கும்போதே வீட்டிற்கு வந்து சேருவார்கள். அதற்கே அவர்களை யெல்லோரும் பரிகாசஞ் செய்வார்கள். பந்துக்களில் யாரும் அவர்கள் வீட்டிற்குப் போகிறதில்லை. நாலு பேர் கூடும் இடத்திற்கும் அவர்கள் போகிற தில்லை. பிறகு, அவர்கள் தேவடியாட்கள் வீட்டிற்குப் போகிறதையும் விட்டு விட்டார்கள்.

நாராயண:—இந்தக் காலத்தில் வெட்கமுமில்லை, பயமுமில்லை. முன் காலத்தில் தேவடியாளை வைத்துக்கொள்வ தென்றால் பெரிய அவமானமென்று எண்ணப்படும். இக்காலத்தில் தேவடியாளை வைத்துக் கொள்வதே பிரதிஷ்டையாகவும், வைத்துக் கொள்ளாமற் போவதே அப்பிரதிஷ்டையாகவு மிருக்கிறது. அக்காலத்தில் வைத்துக் கொள்பவ ரில்லாமல் தேவடியாட்கள் அல்லாடினார்கள். இக்காலத்தில் வைத்துக் கொள்வதற்குத் தேவடியாட்கள் போதாமல் புருஷர்கள் அல்லாடுகிறார்கள். அக்காலத்தில் தேவடியாள் வீட்டிற்குப் போனால் யாராகிலும் பார்ப்பார்களே யென்று வெட்கத்தால் இரகசியமாகப் போனவர்கள் இக்காலத்தில் எல்லோரும் பார்த்தாலே கௌரவ மென்று வெகு பெருமையோடு பகற் காலத்திலே தனக்கான இரண்டொரு சிநேகிதரை இட்டுக்கொண்டு மோட்டார்காரில் உட்கார்ந்து தாசிகள் வீட்டிற்குப் போகிறார்கள். இந்த வூர் கட்டுப் பாடில்லாமல் இப்படிக் கெட்டுப்போகின்றது.

சங்கர:—கட்டுப்பாடு செய்ய எவனுக்கு என்ன வந்தது ஸார்? கெட்டுப் போகிறானே யென்று பந்துக்கள் ஏதேனுஞ் சொன்னால், அவர்களை இலட்சியஞ் செய்கிறார்களா? உத்தியோகஸ்தனோ சிவலிங் கத்தின் மேல் எலி! அவனைக் கேட்கிறவனே யில்லை. அவன் தயவை நாடியவன் எதைச் சொன்னாலும் சரி சரி யென்கிறான். உதய

மானுல் அவன் தயவிருந்தால்தான் இவர்களுக்குச் சீவனம். அப்படியிருக்க அவர்களைக் கண்டிக்கிற தெப்படி? அவனுக்குக் கோபம் வருஞ் சங்கதியை யெவன் சொல்லப் போகிறான்? வயதிலும் புத்தியிலும் கல்வியிலும் பெரியவர்களா யிருக்கிறவர்களே ஊரும் பேருங் கெடும்படி ஸ்திரீலோலராய்த் திரிந்தால் மற்றவர்கள் ஒழுங்கு தவறி யதேச்சையாய்த் திரிவதற்குத் தடையென்ன விருக்கிறது. பெரிய மனுஷருடைய அபிமானத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்னும் எண்ண முடையவர்கள், அவர்கள் வைத்துக் கொண்டிருக்கும் தேவடியாட்களால் சிபார்சு செய்து வைத்துக் கொண்டா லொழிய அவர்கள் தயவு கிடைக்க மாட்டாது.

நாராயண:—சில நாள்களுக்கு முன் இந்த வீதியில் தேவடியாள் வீடு கிடையாது. தேவடியாள் வீட்டிற்குப் போகிறவர்களுமில்லை. இப்போது பார்க்கப் போனால் இந்த வீதியில் சுமார் ஏழெட்டு வீடுகளாய் விட்டன. இந்த வீதியிலுள்ள கௌரவ குடும்பஸ்தர் வீட்டுப் பிள்ளைகளில் அநேகர் கெட்டுப் போய் விட்டார்கள்.

சங்கர:—அந்த வயிற்றெரிச்சலை ஏன் சொல்லுகிறீர்கள். பிள்ளைகள் கல்வியில் தேறி, ஒழுக்கங் கெடாமல் விருத்தியாவதற்கும், பெற்றோர் சொல் மீறி உடம்பைக் கெடுத்துக் கொண்டு, உள்ளதையொழித்து நாசமாய்ப் போவதற்கும், நாம் வசிக்கும் இடமும், அவர்கள் சகவாசமும் ஒரு காரணமாகின்றது. பார்த்தீர்களா? காமபாலன் எப்படி யிருந்தான்! எப்படியானான்! அவன் எவ்வளவு கௌரவமான குடும்பத்திற் பிறந்தவன். அவனுடைய பிதா எவ்வளவு தனவந்தர்; எவ்வளவு படித்தவர். இப்படிப்பட்டவருடைய பிள்ளை என்னென்ன திருவிளையாட்டு ஆடி வருகிறான் பார்த்தீர்களா?

நாராயண:—ஆம், மெய்தான். அவன் மூன்றும் பாரத்தில் வாசித்துக்கொண் டிருக்கும்போதே கெடத் தொடங்கினான். இந்த வீதியில் தேவடியாள் வீடுகளுக்கு வருவதும் போவதுமா யிருக்கிற பெரிய மனுஷர்களைப் பார்த்தே கற்றுக் கொண்டான். காலா காலத்தில் போக வர விருந்தவன், ஒருத்தியை ஸ்திரமாக வைத்துக் கொண்டான். செலவுக்கு வேண்டுமே, பிதாவோடு சண்டையிட்டு சொத்தையெல்லாம் பங்கிட்டுக் கொடுக்கும்படி கேட்டான். அதனால் பிதாவுக்கும் புத்திரனுக்கும் விரோதமுண்டாகி ஒருவரோ டொருவர் பேசாதிருந்தனர். அவனுக்கும் அந்தத் தேவடியாளை முன்னே வைத்துக் கொண்டிருந்தவனுக்கும் பிராணபத்தான சண்டை யுண்டாகிப் போலீசுக்குப் போய் மானங் கெட்டு வந்தான். அவன் பிதா சொர்ன விக்கிரகம் போல் ஒரு பெண்ணைத் தேடி இவனுக்கு விவாக முடித்து வைத்தார். அந்தப் பெண்ணோ அதி புத்திசாலி; நல்ல

வாசிப்புடையவள்; தெய்வ பக்தி யுடையவள்; பொய் பேசாள்; ஒன்றைப் பத்தாகப் பிறரிடத்திற் சொல்லிச் சந்தோஷிக்காள். பதிவிரதை யென்றால் அவளுக்கே செல்லும். அப்படிப்பட்ட குண வதியைச் சிறை வைத்து, எந்நேரமும் அந்தத் தேவடியாள் வீடே கதியா யிருக்கிறான். அவனும் அவளும் வண்டியிலேறிக்கொண்டு ஊரெல்லாஞ் சுற்றி வருகிறார்கள். எந்த ஊரில் உற்சவமானாலும் அவனையும் அவளையுங் காணலாம். 'அச்சமும் நாணமும் அறி விலோர்க்கில்லை' என்றது போலக் கொஞ்சமேனும் அவனுக்கு லஜ்ஜை கிடையாது. பணத்தை யெல்லாம் பாழாக்குகிறான். இன்னுங் கொஞ்சந்தா னிருக்கிறது. அதனையும் அதிசீக்கிரத்தில் தொலைத்து விடுவான். பிறகு, என்னகெதி யாவானோ?

சங்கர:—கெதியென்ன? அதோ கெதிதான், தெரிந்தே யிருக்கிறது.

நாராயண:—அந்தக் காமபாலனுடைய பார்யாவைப் போலவே இன்னும் அநேகருடைய பார்யாக்களும் துக்கப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள். இராயரவர்களே! இன்னொரு விசேஷங் கேட்டீரா? இப்போது இந்த ஊரில் தேவடியாட்களை வைத்துக் கொண்டிருப் பவர்களெல்லாருஞ் சேர்ந்து தேவடியாட்களை வைத்துக் கொள்ளா தவர்களை நபும்சர்களென்றும், வகையற்றவர்களென்றும் பரிகாசஞ் செய்கிறார்கள்.

சங்கர:—இந்த வூரிலிருப்பவர்களே யல்லாமல், இதரப் பிரதேசங்களி லிருக்கும் தேவடியாட்களெல்லோருமே இந்த வூரில் வந்து குடித்தன மிருந்தாலும் போதாது. உலோகத்திலிருப்பவர்க ளெல்லோருந் தேவடியாட்களானால் நன்றாயிருக்குமென்று சில மகானுபாவர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

நாராயண:—இவ்வளவு பெரிய ஆலோசனை செய்தவர்கள் எவ்வளவு புத்திமான்களோ? ஆனால் இவர்கள் கோரிக்கை, உலகத்தி லிருக்கும் நதி, ஏரி, குளம், குட்டை முதலிய நீரெல்லாம் பிராந்தி, உஸ்கி, ஆரக், கள் முதலியவைகளாய் மாறிவிட்டால் வெகு நன்றா யிருக்குமென்று கோரிய குடியன் கோரிக்கையைப் பார்க்கிலும் மிக நன்றா யிருக்கின்றது.

சங்கர:—வெகு நன்றாகச் சொன்னீர்கள். இந்தக் குடியும் கூத்தி விஷயத்திற்குச் சாக்ஷாத் மைத்துனன் முறையாகவே யிருக்கிறது. ஐயோ! குடியர் சங்கதியை யெடுத்துப் பேசவேண்டு மானால், இப்போது காலம் போதாது. குடியர் படும் பாட்டையும், குடியினால் வருங் கேட்டையும் இன்னொரு சமயம் விஸ்தாரமாக

எடுத்துப் பேசலாம். நல்லது, பந்துக்களென்ன செய்யாமற் போன போதிலும் போகட்டும். சதாசாரத்தைத் தாபிக்கும் மதாசாரியர்களாகிலும், இந்தத் தேவடியாட்களை வைத்துக்கொள்ளும் துராசாரங்களை யொழிக்கச் சிரமமெடுத்துக் கொண்டால் நலமா யிருக்கும்.

நாராயண:—இக்காலத்தில், அந்த மதாசாரியர்களுடைய வார்த்தைகளெல்லாஞ் செல்லாக்காசுகளாயின. அந்த மதாசாரியர்கள் கூட இந்தப் பெரிய மனுஷர்களை அனுசரித்தாலொழிய அவர்களுக்குப் பிட்சை கிடையாது. மதாசாரியர்களுக்கு இந்தச் சங்கதி தெரிந்தால், அவர்களிடத்தில் பணத்தைப் பெற்றுக்கொண்டு நீங்கள் சர்வோத் கிருஷ்டமானவர்கள்' என்று புகழ்வார்களே தவிர இகழ்வார்களல்லர். 'குலம் குப்பையிலே பணம் பந்தியிலே' என்றறியீர்களா?

சங்கர:—எனக்கிப் போது போக வேண்டுங் காரிய மிருக்கிறது. இன்னொரு சமயம் நம்முடைய சங்கத்தில் சேர்ந்த சிநேகிதர்களை வரவழைத்து, இதற்கென்ன பிரயத்தனஞ் செய்ய வேண்டுமோ அதை ஆலோசிப்போம்.

நாராயண:—நல்லது, நாளைய ஆதிவாரம் நாமெல்லோருங்கூடி யொருவழி தேடினலொழிய பட்டணத்தில்' சங்கதி யொன்றுஞ் சரிப்படாது.

சங்கர:—தவருமல் அப்படியே செய்வோம் (என்று போகிருர்கள்.)

'தாசிகளும் தாசிகாந்தர்களும்' என்ற மேற்கண்ட நாடகத்தை எழுதிய உயர்திரு. ஏ. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் ஓர் அரிய தமிழ்ப் பெரியாராவர். ஆண்டிலும், அறிவிலும், அனுபவத்திலும் மிகுந்த இப் பெரியாரது பேனு முனையி லிருந்து வெளிவந்துள்ள இந் நாடகம் வெறும் வேடிக்கையைப் புகட்டுவதாய் இல்லாமல், நிறைந்த பொருளையும் சிறந்த படிப்பினைகளையும் தருவதாய் இருக்கிறது. இந்நாடகம் இன்னும் தொடர்ந்து 'தமிழர்'சில் வெளிவரும். அன்பர்கள் இதனை ஆய்ந்தறிவாராக. இந் நாடகத்தை முடிவில் ஒரு தனி நூலாக வெளியிட நினைத்துள்ளோம்.

ஆசிரியர்.

# ஸர். தி. முத்துசாமி ஐயர்

(தமிழாசிரியர். பா. பக்கிரிசுவாமி செட்டியார்)

எளிய குடும்பத்திலே பிறந்து தங்கள் முயற்சியால் முன் வந்தவர்கள் எந்த நாட்டிலும் உண்டு. நமது தமிழ் நாட்டிலே ஒரு ஏழைக் குடும்பத்திலே உதித்து உழைப்பால் உயர்வடைந்த பெரியார் ஒருவர் சமீப காலத்தில் இருந்தார். அவரது பெயர் ஸர். தி. முத்துசாமி ஐயர்.

இந்தியாவில் தென்னாடு விசேஷமுடையது. அத்தென்னாட்டிலும் தஞ்சாவூர் ஜில்லா அதி முக்கியமானதாகும். தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாரூர் என்ற ஒரு திவ்விய ஸ்தலம் இருக்கிறது. அப் புண்ணிய க்ஷேத்திரத்திற்கு அருகில் உச்சுவாடி என்ற ஒரு கிராமம் உண்டு. அக்கிராமத்தில்தான் முத்துசாமி ஐயர் 1832-ஆம் வருடம் பிறந்தார். அவர் சிறுவராய் இருந்த போதே அவரது தந்தையார் காலமானார். முத்துசாமி ஐயருக்குச் சகோதரர்களும் இருந்தார்கள்.




தந்தை இறந்த பிறகு அவர்களைப் போஷிக்க வேண்டிய பொறுப்பு அவரது தாயாருடையதாயிற்று. முத்துசாமி ஐயரின் தாயார் தம் மக்களை அழைத்துக் கொண்டு திருவாரூரை அடைந்தார். முத்துசாமி ஐயர் பன்னிரண்டு வயது வரையில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார். மேலும் கல்வி கற்க அவரால் முடியவில்லை. அவர் தமது படிப்பைவிட வயிற்றுப் பிழைப்பை முக்கியமாய்க் கவனிக்கும்படி ஏற்பட்டு விட்டது.

முத்துசாமி ஐயர் ஒரு கிராமக் கணக்கப் பிள்ளைக்கு உதவியாக மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபா சம்பளத்திற்கு வேலை பார்க்கத் தொடங்கினார். சில மாதங்களுக்கெல்லாம் அவரது அன்னையார் மரணமடைந்தார். தாயின் பிரிவு முத்துசாமி ஐயருக்குத் தாங்க

முடியாத துக்கத்தைத் தந்தது. பிறகு ஒருவாறு தேறி, ஐயர் தமது முன்னேற்றத்தில் கருத்தைச் செலுத்தினர்.

முத்துசாமி ஐயர் கஷ்டப்பட்டு வயிறு வளர்க்க வேண்டி இருந்தும் கல்வி கற்பதற்கான முயற்சியில் குறையவில்லை; தரித்திரத்தால் விளக்கெண்ணெய்கூட வாங்க வகையற்று வீதி லாந்தர்களிலும், கோயில் விளக்குகளிலும் ஒதுங்கி நின்று படித்து வந்தார். இதை விட வேறு கஷ்டம் உண்டோ? அன்பர்களே! முத்துசாமி ஐயர் தம் வறுமை நிலைமையிலும் கல்வி மீது வைத்த கருத்தைக் கவனியுங்கள்.

திருவாரூரில் முத்துசாமி நாய்க்கர் என்பவர் அதுசமயம் தாசில்தாராய் இருந்தார். அவர் முத்துசாமி ஐயரின் புத்திக் கூர்மையையும் சுறுசுறுப்பையும் கண்டு மெச்சி அவரைத் தமது கச்சேரியில் ஒரு சிறு உத்தியோகத்து அமர்த்தினர்; ஒழிந்த வேளையில் அவருக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்து வந்தார்.

இவ்வாறு இருக்கையில் திருவாரூருக்கு அருகில் ஓர் ஆறு உடைப் பெடுத்துக் கொண்டது. தாசில்தார் உடைப் பெடுத்த இடத்திற்கு, நிலைமையை அறிந்து வர முத்துசாமி ஐயரை அனுப்பினர். ஐயர் அவ்விடம் சென்று விவரம் அறிந்து விரைவில் வந்து சொன்னர்; உடைப்பை அடைப்பதற்காகும் செலவுக்கும் ஒரு திட்டம் கூறினர். தாசில்தாருக்கு அவர் உரைத்தது சரியாக இருக்குமென்ற நம்பிக்கை இல்லை; அநுபவம் வாய்ந்த தமது ஆபீஸ் குமாஸ்தா ஒருவரை வினவினர். அவரும் முத்துசாமி ஐயர் கூறிய அபிப்பிராயத்தையே தெரிவித்தார். ஆதலால் தாசில்தாருக்கு ஐயர்மீ திருந்த அபிமானம் அதிகரித்தது. மற்றெரு சமயம் மிராசுதார் ஒருவர் தாசில்தாரிடம் வந்து, தமது நிலங்களின் கிஸ்தி எவ்வளவு என்று கேட்டார். அப்போது அங்கிருந்த முத்துசாமி ஐயர் கணக்கைப் பார்க்காமலே சரியான தொகையைக் கூறினர்.

முத்துசாமி ஐயரின் நுண்ணறிவையும் சிறந்த குணத்தையும் கண்ட முத்துசாமி நாய்க்கருக்கு அவரை அதிகமாகப் படிக்க வைக்க வேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டது. நாய்க்கர் தாம் விரும்பியவாறே ஐயரை நாகபட்டினம் அனுப்பி மிஷன் ஸ்கூலில் படிப்பித்தார். ஐயர் நாகையில் 18 மாத காலம் ஊக்கமாகப் படித்து வந்தார்; பிறகு நாய்க்கரின் பேருதவியால் சென்னை அரசாங்க ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்டார். சென்னையில் ஐயரை ஸர். ஹென்றி மாண்ட் கோமரி என்னும் பிரபுவும், பாடசாலைத் தலைவரான பௌவெல் துரையும் அன்போடு ஆதரித்து வந்தனர்.

ஐயர் தமக்கு இருபத்து நான்கு வயது ஆகிற வரையில் சென்னையில் கல்வி கற்றுர். அப்போது ஆசிரியரும் பிறரும் அவரது கல்வித் திறத்தைக் கண்டு அவரைப் பாராட்டினர். பல பரீட்சை

களில் ஐயர் முதல் தரமாகத் தேறிப் பல பரிசுகளும் பெற்ருர். சென்னைக் கல்விக் கழகத்தார் ஆங்கிலத்தில் ஒரு சிறந்த வியாசம் எழுதுகிறவருக்கு ரூபா ஐந்நூறு பரிசு அளிக்க முன் வந்தனர். ஐயர் அவ் வியாசப் போட்டியில் கலந்து கொண்டார். பலர் எழுதிய கட்டுரைகளில் ஐயருடையதே முதல் தரமாக இருந்தது. கல்விக் கழகத்தார் ஐயரைப் பாராட்டி ஐந்நூறு ரூபா வெகுமானமாய்க் கொடுத்தனர். அந்த ஐந்நூறு ரூபாவையும் ஐயர் தாம் இறக்கும் வரையில் காப்பாற்றி வைத்திருந்தார்.

படிப்பு முடிந்த பிறகு ஐயர் தாம் படித்த பாடசாலையிலேயே ஆசிரியராய் அமர்ந்தார். அப்போது அவருக்கு ரூபா அறுபது சம்பளம் கிடைத்தது. பிறகு ஸர். ஹென்றி மாண்டு கோமெரியின் உதவியால் தஞ்சாவூரில் ரிக்கார்டு கீப்பராகக் கொஞ்ச காலம் இருந்தார். பின்னர் ஐயர்மீது அபிமானமுடைய ஆர்பத் நட் என்பவர் 150 ரூபா சம்பளத்தில் அவரைப் பாடசாலை டிப்டி இன்ஸ்பெக்டராக நியமித்தார்.

அதுசமயம் அரசாங்கத்தார் வக்கீல் பரீட்சை ஒன்று நடத்தினர். முத்துசாமி ஐயர் அப் பரீட்சைக்குப் படித்து முதன்மையாகத் தேறினர். பிறகு ஐயருக்குத் தரங்கம்பாடியில் ஜில்லா முன்சீபு வேலை கிடைத்தது. ஐயர் தமது உத்தியோகத்தில் உண்மையாக உழைத்ததால் முறையே தஞ்சாவூரில் டிப்டி கலெக்டராகவும், தென் கனடாவில் ஸப் ஜட்ஜாகவும், சென்னையில் போலீஸ் மாஜிஸ்ட்ரேட்டாகவும் மாற்றப்பட்டார். ஐயர் தாம் வகித்திருந்த உத்தியோகங்களிலெல்லாம் முறைப்படி நடந்து வந்தார்; வழக்குகளில் பாரபட்சமின்றி நீதி வழங்கி வந்தார்.

அவர் சென்னையில் போலீஸ் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தபோது ஹைக்கோர்ட் ஜட்ஜ் ஒருவர் தம் வீட்டு எல்லைக்குள் பிரவேசித்ததற்காக ஓர் இந்தியனை அடித்து விட்டார். அந்த வழக்கு ஐயரிடம் வந்தபோது அவர் எதிரி பெரிய உத்தியோகஸ்தர் என்பதையும் பாராது, அவருக்கு மூன்று ரூபா அபராதம் விதித்தார்.

அப்பால் ஐயரை அரசாங்கத்தார் சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜாக நியமித்தனர். அப்போது டில்லியில் நடந்த தர்பாருக்கு ஐயரும் சென்றிருந்தார். திரும்பி வந்தவுடன் ஐயர் ஹைக்கோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டார். இந்தியரில் ஐயரே முதன் முதல் ஹைக்கோர்ட் ஜட்ஜானவர். ஐயர் பதினேழு வருடங்கள் ஹைக் கோர்ட் ஜட்ஜாக இருந்தார். உத்தியோகங்களில் அவரைப்போல் உழைத்தவரும் நல்ல பெயர் எடுத்தவரும் இல்லை.

ஐயரின் சிறந்த ஊழியத்தையும் அரிய குணத்தையும் கண்ட அரசாங்கத்தார் அவருக்கு 'ஸர்' என்ற உயரிய பட்டத்தை அளித்

தனர். ஸர். தி. முத்துசாமி ஐயருக்குப் பொது நலத்தில் மிகப் பொறுப்புண்டு. அவர் அனைவரிடத்திலும் அன்பாக நடந்து கொள்வார்; ஏழை—பணக்காரன் என்ற வேற்றுமை பாராட்டுவதில்லை. அற்ப நிலையிலிருந்து உயர்ந்த பதவிக்கு வந்தபோதும் அவர் அடக்கமாகவே இருந்தார். எளிய வாழ்க்கையையே அவர் எப்போதும் விரும்பினர். அவரிடமிருந்த எல்லா நற்குணங்களிலும் பொறுமையே சிறந்தது. உழைப்பால் உயர்ந்த ஸர். தி. முத்துசாமி ஐயர் நீண்ட புகழோடு தமது 63-வது வயதில் (1895-ஆம் ஆண்டு) இம் மண்ணுலகை விட்டு மறைந்தார். சென்னை ஹைக்கோர்ட்டில் அவரைப்போல் வெண்சிலையில் ஓர் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது.

உணவுக்கே கஷ்டப்பட்ட முத்துசாமி ஐயர் உயர்ந்த நிலை அடைந்து உலகம் போற்றும் ஸர். தி. முத்துசாமி ஐயரானது எப்படி? ஊக்கத்தாலும், உழைப்பாலும் அல்லவா? அவைகளே நம்முடைய முன்னேற்றத்திற்கும் உரிய கருவிகளாகும்.

## தூக்கம் அவசியமா?

அறிஞர் எடிசன் சாதாரண நிலைமையிலிருந்து பெரிய பணக்காரரானது அவரது அதிர்ஷ்டத்தாலேயே என்று பலர் கருதினும் அப்பெரியாருக்கு அதிர்ஷ்டம் என்பதில் நம்பிக்கை இல்லை. அவர் தமது வெற்றிக்குக் காரணம் தம் விடாமுயற்சியே யென்றும், பலர் ஏதேனும் ஒரு காரியத்தை ஆரம்பித்து அதைப் பெறுவதற்கு முன்னரே ஏற்படும் கஷ்டங்களைக் கடந்து செல்லச் சக்தியற்றவர்களாய் அதை விட்டு விடுவதாகவும், ஆனால் எல்லாவற்றையும் சகித்து விடா முயற்சியுடன் உழைத்தால் எதுவும் கைகூடுமென்றும் கூறுகிறார். மற்றும் அவர் மனிதனுக்குத் தூக்கம் அவசியமா? என்பது பற்றிக் கூறியதாவது:—தூக்கமென்பது நாமாக ஏற்படுத்திக் கொண்ட ஒரு வழக்கமேயாகும். மீன்கள் இரவும் பகலும் விடாமல் தண்ணீரில் நீந்திக்கொண்டே இருக்கின்றன. அவை தூங்குவதே இல்லை. குதிரையும் தூங்குவதே இல்லை. அது நின்றபடியே சிறிது கண் அயர்ந்து ஓய்வைப் பெற்றுவிடுகிறது. அது போலவே மனிதனுக்கும் தூக்கம் அவசியமில்லை. ஒவ்வொருவரும் பிரயத்தனப்பட்டால் இதில் வெற்றியடையலாம். பகலும் இரவும் விடாமல் வேலைசெய்யுங்கள். விடியற்காலம் சுமார் அரை மணி நேரம் சிறிது கண் அயர்ந்து உடனே விழித்துக்கொண்டு குளிர்ந்த நீரால் முகத்தை நன்றாகக் கழிவிவிடுங்கள். உடனே சுறுசுறுப்பு ஏற்பட்டுவிடும். இதனால் தேகத்துக்கும் கெடுதி ஏற்படாது. ஆகவே நாமாக ஏற்படுத்திக்கொண்ட இப்பழக்கத்தை ஒவ்வொருவரும் ஒழிப்பது நலம். நானும் தூங்காமலேயே இரவும் பகலும் வேலை செய்வதற்கு எனது இக்கொள்கையே காரணம்.

# இந்திய உணவு

(டாக்டர். குருசாமி முதலியார்)



உடல் நலம் பேணுதற்கு முதற்படியாக உள்ளது நேர்மையான உணவு. நேர்மையான உணவு எது என நாம் முதலில் நிர்ணயிக்க வேண்டும். இதற்கு நமது சூழல் எத்தகையது என்று நாம் எப்போதும் தெரிந்து கொள்ளல் வேண்டும். அன்றியும் நாம் உட்கொள்ளும் உணவின் சக்தி இன்னதென்றும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். பல உணவுப் பொருள்களையும் சோதித்துப் பார்த்ததில், பாலும் கீரையும் சிறந்த உணவுகளாகத் தோன்றுகின்றன. இதர உணவுப் பொருள்களின் குணபேதங்களைச் சமனாக்கும் திறன் இவைகளுக்கு வாய்ந்திருக்கின்றது. இவ்விரண்டையுந் தவிர வேறெந்த உணவுப் பொருளுக்கும் இந்தக் குணங்கள் கிடையா. ஆனால் ஒரு விஷயம்பற்றி மட்டும் நாம் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். கிருமிகள் செழிப்பதற்குப் பால் தக்க சாதனமாகும். பால் கலப்பற்றதென்றும், அந்தப் பாலை யளிக்கும் பசு நன்றாக உணவு கொண்டு நோயின்றியுள்ளதென்றும் தெளிவாய்த் தெரிந்தே அதைக் கொள்ளவேண்டும்; இல்லையேல் பாலே பல வகை நோய்களுக்குக் காரணமாக நிற்கும்; விஷசுரம், வாந்திபேதி, குடல் நோய்கள் முதலியன தோன்றுவதற்கு ஆதாரமாக விருக்கும். சாக்கடையிலுள்ள கிருமிகளைவிட அதிகமான கிருமிகள் பாலில் இருக்கின்றனவென ஒரு மருத்துவ நிபுணர் கூறுகிறார். ஆகவே இந்த ஆபத்தைக் கடக்கவேண்டிப் பாலைத் தோய்த்துத் தயிராக்கி அதை உண்ணலாம். பாலிலுள்ள குணங்களனைத்தும் தயிருக்குண்டு. ருஷ்ய மருத்துவ நிபுணரான மெக்னிகாப் என்பார் இந்தியர்களின் உணவைப்பற்றிக் கூறும்போது ‘இந்தியாவில் இள மணங்கள் நடைபெற்றும், சீதோஷ்ண நிலை பாதகமாயிருந்தும், வறுமை ஓங்கியிருந்தும் மக்கள் நெடுநாள் வரை உயிருடன் இருப்பதற்குக் காரணம் அவர்கள் தம் உணவுடன் மோர் சேர்த்துண்பதே யாகும்’ எனக் கூறியிருக்கின்றார். வயிற்றில் அழுகக் கூடிய பொருள்களை மோர் நாசஞ் செய்கிறது. இதனாலேயே இந்தியர் நெடுநாள் வாழ்கின்றனர். இந்தப் பாடம் அவர்களுக்கு ஹடயோகிகளால் கற்பிக்கப்பட்டது. இவர்கள், வயிற்றை வெகு

சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுவார்கள்.

## கீரைகள்

பாலுக்கு அடுத்தபடியாகச் செடிகளின் கீரைகள் ஏற்ற உணவுப் பொருளாம். கீரைகள் பரம ஏழைகளுக்கும் கிடைக்கத் தக்கன. கீரையில் முதல்தர உணவுச் சத்திருக்கின்றது. இது உடல் வளர்ச்சிக்குக் காரணமாயிருப்பது மட்டுமன்றி நோய் சாராவண்ணம் தடுக்கவும் வல்லது. கீரை எவ்வளவிற் கெவ்வளவு மேன்மையாயிருக்கிறதோ அவ்வளவிற் கவ்வளவு அதில் உணவுச் சத்து மிகுந்திருக்கின்றது.

சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட வரை அங்குள்ள மக்கள் உண்ணும் உணவில் கார்போ ஹைட்ரேட் வெகுவா யிருக்கின்றது. ஆனால் மாச்சத்து சிறிது குறைவா யிருக்கின்றது. சில உணவுகளில் தாதுவைக் காப்பாற்றுவதற்கான சத்துக்கள் கிடையவே கிடையா. எனவே இம் மாகாணத்தில், குறிப்பாக வடஜில்லாக்களில், உடல் வீக்க நோய் வெகுவாகக் காணப்படுகிறது. அன்றியும் முதல்தர உணவுச் சத்துக் குறைவாயுள்ள உணவு உண்ணுகிறவரது பற்களில் இலகுவாக நோய் ஏற்படுகிறது. கீழ் நாடுகளிலுள்ளோர் பற்கள் மிகச் சிறந்தனவெனும் புகழ் பெற்றவை. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உறைவோர் மிக மோசமான பற்களுடையவர்கள். இதற்குக் காரணம் போலி நாகரிகமெனக் கூறுகின்றனர். போலி நாகரிகப் பெருக்கமே இதற்குக் காரணமெனத் தோற்றுகிறது.

## தானியங்கள்

இந்திய உணவுப் பொருள்க ளனைத்திலும், கோதுமையிலேதான் மிகச் சிறந்த உணவுச் சத்திருக்கின்றது. ஆனால் கோதுமை உணவுண்ணுவோருக்கு நீரடைப்பு நோய் வெகுவாய்க் காண்கிறது. அரிசி யுணவருந்துவோர்க்கு இந்நோய் வருவதில்லை. தென்னிந்தியாவில் அரிசி தீட்டும் முறை கெடுதலானது. எவ்வளவிற் கெவ்வளவு அரிசி வெகுவாகத் தீட்டப்படுகிறதோ அவ்வளவிற்கவ்வளவு அதன் உணவுச்சத்துக் குறைந்துபோகிறது. அரிசியைத் தீட்டும்போது அதன் தவிட்டிலுள்ள உணவுச் சத்துக்களெல்லாம் சேதிக்கப் படுகின்றன. அன்றியும் சாதம் வெந்த பிறகு அதினின்று கஞ்சியை வடித்து விடுவதனால், அரிசியில் எஞ்சி யிருக்கும் உணவுச் சத்தும் அதினின்றும் நீங்கிவிடுகிறது. பட்டாணியிலும் மொச்சையிலும் மாச்சத்து வெகுவா யிருக்கின்றது. ஆனால் அவை சீக்கிரமாகச் சீரணமாவதில்லை. மொச்சையை உட்கொண்டவுடனே

குடலில் அதைப் பொங்கச் செய்யத் தக்க சத்து அதில் வாய்ந்திருக்கின்றது. பாலூட்டும் தாய்களுக்குப் பருத்திவிதை சிறந்த உணவெனக் கருதப்பட்டது. ஏனெனில் இதில் தாய்க்குப் பாலைப் பெருக்கத் தக்க சத்தொன்றுண்டு. ஆயினும், அதில் ஒரு விஷச் சத்து மிருக்கின்றது.

## பழங்கள்

உருளைக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு முதலிய கிழங்கு வகைகளில் மூன்றாந்தர உணவுச் சத்திருக்கின்றது. எனவே, இவை சொறி, கரப்பான் வாராது தடுக்கத்தக்கன. மூன்றாந்தர உணவுச் சத்து புதுபழங்களிலும் காய்கறிகளிலு மிருக்கின்றது. மஞ்சள் நிறமுள்ள எல்லாப் பழங்களிலும் இச்சத்திருக்கின்றது. பழங்கள் மலத்தைக் கழிக்கச் செய்யும் இயல்புடையன. எனவே இதர உணவிலுள்ள குறைபாடுகளைத் திருத்தும் இயல்பு பழங்களுக்குண்டு. ஆரஞ்சு பழத்திலும் முதல்தர உணவுச் சத்திருக்கின்றது. மாம்பழத்தில் இரண்டாந்தர உணவுச் சத்து மிகுதியா யிருந்தாலும், மூன்றாந்தரச் சத்து மிகக் குறைவா யிருக்கின்றது. முளை விதைகளில் மூன்றாம் வகுப்பு உணவுச் சத்து ஏராளமா யிருக்கின்றது. எனவே இந்தியர்கள் உண்ணு நோன்புறும் நாட்களில் முளைகளை யுண்கின்றனர். நிலக்கடலை பசியை வெகுவாய்த் தணிக்கும் உணவாகும். இதில் மாச்சத்து, ப்ரொடின், கொழுப்பு முதலிய சத்துக்கள் அதிகமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கின்றன.


## ஏஜண்டுகள்

—:O:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களின் மருந்துகளை விற்பனை செய்ய இரங்கூனில் 122, மோகல் வீதியி லிருக்கும் திரு. தி. ஞானப் பிரகாசம் அவர்களைச் ஏஜண்டாகவும், பள்ளத்தூரில் திரு. ஏ. சுப்பையர் அவர்களை ஏஜண்டாகவும் நியமித்திருக்கிறோம். மருந்து வேண்டுவோர் மேற்கண்ட ஏஜண்டுகளிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்.

# இழந்த தருணங்கள்

('ஏசி')

'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்பது ஒரு பழமொழி. தூற்றிக் கொள்வதென்றால் காற்றடிப்பது தெரிந்தால்தானே! காற்றடிப்பதே தெரியாவிட்டால் தூற்றிக் கொள்ளவில்லையே என்று முறையிடவோ, குறை சொல்லவோ இடமில்லையே! அப்படித்தான் தருணம் இஃதென அறியாமல் நான் இழந்துவிட்ட தருணங்கள் பற்பல.

எதற்குத் தருணங்கள்? நான் என் சொல்வேன்? இதைப் படித்தறியும் நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். ஒரு நாள் ஒரு சொந்தக்காரர் வீட்டினுள்ளே புகலானேன். வீட்டின் கதவு தாளிடாமல் சாத்தப்பட்டிருந்தது. கதவைத் திறந்தேன்; ஒரு காட்சி. என் கண்ணும் வேறிரண்டும் நோக்கின. காலைப் பின் வாங்கினேன். 'இல்லை, தம்பி, சும்மா உள்ளே போ, பாதகமில்லை' என்ற சொற்கள் அக்கண்ணிடத்திருந்து வந்தன. நானும் உள்ளே போனேன். சொன்னவள் வேறொருவருமில்லை; இருபது வயது பெண்தான். அவள் வேறொன்றுஞ் செய்து கொண்டிருக்க வில்லை; சாக்கடையில் நீர் வார்த்துக்கொண்டிருந்தாள்.

எங்கள் வீட்டில் ஒரு வேலைக்காரி இருந்தாள்; அவள் ஒரு விதவை. நல்ல திடகாத்திர முடையவள். ஜாதியில் இழிவுதான். அவள் நெல் குத்தும் பொழுது மார்பகத்தே ஒன்றுமிராது. கேட்பானேன்? கொங்கை குலுங்கும் காட்சியைச் சொல்ல முடியுமோ? ஐயோ! அவள் எத்தனை முறை என்னைக் கண்டதும் உத்தரீயத்தை நெகிழ விட்டிருக்கிறாள்? நான் அதன் தாத்பரியத்தை அறியும் வயது எனக்கில்லையே! 'அம்மா! அங்கே அவளைப் பாரு' என்று சொல்லிக் கொண்டு பயந்தல்லவோ பல சமயங்களில் ஓடி அடுப்பகத்தே புகுந்துள்ளேன் !!

எனக்கு நிரம்ப நெருங்கிய சொந்தத்தில் ஒரு விதவை யுண்டு. அவள் தனது வீட்டுக்கு என்னை யடிக்கடி யழைப்பாள். அங்குப் போனால் நல்ல தின்பண்ட மெல்லாம் கிடைக்கும். அதனாற் போவேன். போகும் சில சமயங்களில் இரவிலே அங்கே தங்க

சேர்ந்து விடுவதும் உண்டு. அக்காலே நிகழ்வனவற்றைச் சொல்ல வெட்கம் என்ன வந்தது? அந்த அம்மை என்னைக் கட்டியணைத்துக்கொண் டிருக்க, ஒரே பாயில் நாங்கள் தூங்குவோம். வேறு வித்தியாச விஷயம் ஒன்றும் நிகழ்ந்ததே கிடையாது. இது எத்தனை வயதில்? எல்லாம், பத்து, பன்னிரண்டிலாகும்.

எனக்கு ஸைக்கிள் விடத் தெரியும். ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து ஸைக்கிளில் வீடு திரும்பிக்கொண் டிருந்தேன். ஒரு கோபுர வாசலண்டை என்னை ஒரு மாது ஸைக்கிளிலிருந்து இறங்கக் கட்டளையிட்டாள்; இறங்கினேன். அவளை முன்னால் எனக்குத் தெரியும்; என்னையும் அவளுக்குத் தெரியும். அதனால், சற்றுநேரம் ஏதோ கேள்விகள் சில அவள் கேட்க, நான் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். இதில் என்ன வந்தது? இதிலொன்றுமில்லை. பிறகு? பிறகுதான் விஷயம். அஃதென்ன? வேறொன்றுமில்லை; அவள் இளநகில் என் கையில் வந்து இடிக்கும்படி வேண்டுமென்று செய்து பேசிக்கொண் டிருந்தாளே அதுதான்!

ஒரு நாள்—அல்ல ஓரிரவு—நானும் ஒரு வயது வந்த பெண்ணும் தற்செயலாக ஓரறையிற் குறுகிட்டோம். ஒருவரை யொருவர் விரும்பினோம். ஆனால், பாவம்! எனக்கும் வழி தெரியாது; அதற்கும் வழி தெரியாது. பேத்தப் பேத்தக் கொஞ்சம் விழித்தோம். 'இதும்புமா?' என நான் கேட்க, அது 'எதும்புமா?' என்றது. அதற்கு மேல் எனக்கு நா எழவில்லை. ஓட்டம் பிடித்து விட்டேன்.

'தம்பீ! நீ நல்ல சட்டை கிட்டை போட்டுக்கொள்ளும்போது என்னிடம் கொண்டு வந்து காண்பிக்கக் கூடாதோ? அதைக் காணும் பாக்கியம் நான் பெறக் கூடாதா?' என்றும், 'நேற்றுத்தான் உன்னோடு பேசிக்கொண்டிருந்ததுபோல் கனக் கண்டேன்' என்றும், 'நேற்றுத்தான் உன் அம்மாளிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தேன் உன்னைக் காண ஆசையா யிருக்கிறதென்று' என்றும் என்னிடம் ஒரு பெண்மணி கூறுவள். அவளுக்கு என்னிடத்தில் ரொம்ப ரொம்ப அன்புண்டு. எனக்கும் அப்படியே. முற்பிறப்பில் ஒருகால் நாங்கள் இருவரும் கணவன் மனைவியாக இருந்தோமோ என்னவோ தெரியவில்லை. அவளும் எனக்கு உறவுதான். ஒரு நாள் அவளுடைய ஒற்றைமாட்டு வண்டியிலே அவள் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தாள். வண்டியில் வண்டிக்காரனும் அவளும் அவள் குழந்தையும் இருந்தார்கள். என்னை வழியிற் கண்டதும் வண்டியை நிறுத்தி, உடனழைத்துச் சென்றாள். வண்டியில் நான் உட்கார்ந்து செல்கையில், அவள் உடலை என் உடலிற் பொருத்திக் கொடுத்த இடிகளுண்டல்லவோ? அவற்றை இன்று நினைத்தாலும் இன்பம் உண்டாகின்றதே!

இப்பொழுது நான் ஒரு ஹோட்டலில் ஜாகை வைத்துக் கொண்டுள்ளேன். அந்த ஹோட்டல் மொட்டை மாடிமீது காற்றுக்காக

எப்பவாகிலும் போவேன். முக்கியமாக மாலை நேரங்களில் செல்வேன். அங்கிருந்து பார்த்தால் ஒரு வீடு தெரியும். அவ்வீட்டிலிருந்து என்னென்னவோ சைகைகள் வரும். முதலில் ஒரு பெண் வந்து நின்று சிரிப்பாள். பின்னால் முக்காடிட்ட ஒருத்தி வந்து இளிப்பாள்; பிறகு முக்காட்டை நீக்கி உள்ளே போவதுபோல் போவாள். இன்னொருத்தி வருவாள், குனிவாள், நிமிர்வாள், ஓடுவாள், மீடுவாள், பாடவுஞ் செய்குவாள், பதறவுஞ் செய்குவாள். ஆனால், நான் அங்கு எப்படிச் செல்வது? சென்றால், உதை விழுந்தால் மானம் ஆகாசத்தோடு போய்விடுமே!

எங்கள் உறவினர் வீட்டிற் கலியாணம் வந்தால், நான் சில சமயங்களில் கறி முதலானவை எடுத்துப் பரிமாறுவேன். எனது உறவினருள் ஒருவர் பெரிய பணக்காரர். பணக்காரர் வீட்டிலே பரிமாறுகின்றவர் எல்லாம், பொதுவாக, பரிசாரகராகவே இருப்பர். ஏனென்றால், பணக்காரர் பிறர் வீடு சென்றால் உட்கார்ந்த விடத்திலேயே சாப்பிட்டுக் கைகழுவி வந்து விடுவர்; அவர் பரிமாறியிருந்தால்தானே அவர் வீட்டில் வந்து வேறு சில உறவினர்கள் பரிமாறுவர்? ஆனால், இந்தப் பணக்காரர் வீட்டிலோ பரிசாரர் வேறு, பந்துக்கள் வேறு, தலைக்கொரு சட்டி, ஆளுக்கொரு கூடை, பேருக்கொரு சொம்பு முதலானவற்றை எடுத்துக்கொண்டு ஒரு நாள் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். நான் பந்திக்குக் கொஞ்சம் பிந்தி விட்டேன்; இலையொன்றுமில்லை. அடுத்த பந்திவரைச் சும்மா உட்கார்ந்திருப்பதைப் பரிமாறலாமே என நினைத்தேன். என்னென்னமோ எடுத்துப் பரிமாறினேன். பிறகு லட்டு வந்து கேட்கும் நேரமாயிற்று. வாங்கி வர உள்ளே சென்றேன். லட்டு உள்ளே ஓரறையில் இருந்தது; ஆமாம், லட்டு ஒன்று அங்கே யிருந்தது! 'அக்கா, லட்டு கொடுங்கள்' என்றேன். 'தம்பீ! உள்ளே வந்து எடுத்துக் கொண்டு போ' என்றாள் அவள். சரியென்று லட்டை ஒரு தட்டில் எடுத்து அடுக்கி வைக்கலானேன். அவளும் வந்து உதவி புரியலானாள். ஆனால், ஐயகோ! எங்கள் வீட்டு வேலைக்காரி முன்செய்ததுபோல் செய்ய ஆரம்பித்து விட்டாளே அவள்! நான் லட்டை அடுக்குகின்றேன்; அவளும் அடுக்குகின்றாள்; 'தம்பீ, இதைப்பாரு நல்லாயிருக்கா, இதையும் எடுத்துக் கிட்டுப் போ' என்கிறாள் அவள். அவள் கையில் வைத்திருக்கும் லட்டைப் பார்க்கிறேன். அவர் மார்பில் இரண்டு லட்டுகள் பிடிபடாமல் நிற்கின்றன. நான் என் செய்வது? லட்டுத் தட்டை எடுத்துக் கொண்டு பரிமாற வந்துவிட்டேன். அப்புறம் நாளது தேதி வரை அந்தத் தருணங்க ளெல்லாம் இழந்த தருணங்களாகவே இருந்து வருகின்றன.

---

# பிராணிகளின் துயரம்

## ஒரு கழுதையின் அனுபவம்

(மன்னார்குடி திரு. பாலகிருஷ்ண ஐயர்)

எனது எஜமானனும் எஜமானியும் அவர்கள் வாடிக்கையாகத் துணி வெளுக்கும் வீடுகளுக்கு எண்ணெய், சீயக்காய், அரிசி முதலியவை வசூலித்துக் கொண்டு வருவதன் பொருட்டு வெளியே செல்லத் தயாராயினர். மழை மிகுதியினால் உரியவர்களிடமும் கொடுபடாமல் மிஞ்சியிருந்த சலவைத் துணிகள் ஒரு குன்றுபோலக் குவிந்து இருந்தன. அம்மூட்டைகளைக் காணுந்தோறும் என் நெஞ்சம் பதைத்தது. மூன்று நாளாயிற்று உணவைக் கண்டு. 'பல்லசைந்தாற் பசியாறும்' என்பர்; அதற்கும் வெளியே போக மழை மிகுதியாகப் பெய்தமையால் இயலவில்லை; படுக்கவும் இடமில்லை; சொட்டச் சொட்ட நனைந்துகொண்டிருந்த என்னைக் கண்டு மிகுந்த பரிவுடன் எனது எஜமானி (வண்ணாத்தி) காதைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துவந்து தெருவில் நிறுத்தினாள். இத்தகைய கொடுந் துன்பத்திற்கு ஆளாகும் பொருட்டோ, கடவுள் எங்களுக்கு நீண்ட செவிகளைப் படைத்தார்.

மழை பிசுபிசுவென்று தூறிக்கொண்டிருந்தது. என் எஜமானன் (வண்ணான்) மதுபான மிகுதியால் தள்ளாடித் தள்ளாடி நடந்து பெரிய முண்டாசும் கம்பளிப் போர்வையும் அலைய என்னருகில் வந்து நின்றான். அவன் முகத்தைப் பார்க்கும்பொழுது நான் அப்படியே மனம் இடிந்து நின்றேன்; ஏனெனில் அவன் கட்குடித்துவரும் நாட்களிலெல்லாம் வேறொருவரு மகப்படாவிடில் என்னையே நையப்புடைக்க முற்படுவது வழக்கம். ஆகையால் நான் என் விதியை நொந்து தள்ளாடித் தள்ளாடி நின்றேன். 'ஐய! ஒரு மூட்டை எடுத்திம்போய் வெய்யே' என்று என் எஜமானி உள்ளிருந்தபடியே உத்தர விட்டாள்.

'அடி, செருப்பாலே ஐயோக்கியப் படுவா' என்று என் எஜமானன் வாயிலிருந்து வசைமொழிகள் புதையாணம் புறப்படுவது போல் புறப்பட்டன.

முணுமுணுத்துக் கொண்டே எனது எஜமானி பெரிய மூட்டையொன்றைக் கொணர்ந்து என் முதுகி லேற்றினாள். உடலை ஒரு முறை சிலிர்த்துக்கொண்டு நிமிர்ந்து நின்றேன். கால்கள் தள்ளாடின; கண் கிறுகிறுத்தது; பசி காதை அடைத்தது. அடி மேல் அடி வைத்து மெதுவாய் நடக்கலானேன். என் எஜமானி முன்னும் எஜமானன் பின்னுமாக என்னைத் தொடர்ந்து வந்தனர். என் எஜமானி கையில் சிறிய கொம்பொன்றை வைத்திருந்தாள். நான் சிறிது தயங்கினால் என் எஜமானன் வாலைப் பிடித்து முறுக்குவான். எஜமானியோ காதைப் பிடித்து முறுக்குவாள். பின்னும் சிறிது தயங்கினால் என் எஜமானன் மிகுந்த கருணையுடன் 'மூக்குமேலே அடி!' என்று உத்தரவிடுவார். அவர்கள் செல்ல வேண்டிய வீடு நகரின் நடுவில் புறப்பட்ட இடத்தி லிருந்து ஒரு மைல் தூரத்தில் இருந்தது. நாங்கள் தெருவழியே செல்லும் பொழுது பள்ளிக்கூடத்திற்குப் போகும் சிறுவர்கள் 'வண்ணா மூட்டுக் கைதே! வண்ணா மூட்டுக் கைதே!' என்று ஏளனமாய்க் கத்திக் கொண்டே சிறு கற்களைப் பொறுக்கி என்மீது எறிந்தனர். அத்தகைய குழந்தைகளைக் கண்டால் எனக்குக் குலைநடுக்க மெடுத்து விடும். ஏனெனில் சென்ற வருடம் தீபாவளியன்று எனது வாலில் ஒரு காலித் தகரத்தைக் கட்டிவிட்டுப் பெரிய பெரிய சீனி வெடிக் கட்டுகளை அதற்குள் போட்டு என்னை ஊர் முழுவதும் துரத்தியடித்தனர். 'நரிக்குக் கொண்டாட்டம்! நண்டுக்குத் திண்டாட்டம்!' என்றபடி நான் பட்ட துன்பம் அவர்களுக்கு மகிழ்ச்சி யளித்தது போலும்.

இன்னும் அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? எனது நண்பனாகிய கருப்பன் என்னும் நாயின் ஒரு கண்ணைக் கல்லாலடித்துக் குருடாக்கிவிட்டனர். 'என்னையும் எங்கே அக்கதிக்கு ஆளாக்கி விடுவார்களோ?' என்று நான் அவர்களைக் காணும்போ தெல்லாம் அஞ்சுவேன். நான் அஞ்சினாலென்ன, கொடுமை செய்பவர்களுக்கென்ன பயமா! அவர்களுக்கு இரக்கம் என்பதே கிடையாது.

குழந்தைகள் மாத்திரம் இப்படிச் செய்கிறார்கள் என்று எண்ண வேண்டாம். வயதான கிழங்கள்கூட ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு அதற்குப் பழிவாங்குவதாக எண்ணங்கொண்டு எங்கள் காதைக் கத்தரித்து விடுகின்றனர். (சிலர் அடையாளத்தின் பொருட்டும்) பல்வேறு உருவங்களாகவும் கத்தரித்து விடுகின்றனர். என் எஜமானன் மகனுக்கும், அண்டை வீட்டுப் பையனுக்கும் காற்றாடி விஷயமாய் ஒரு சிறு சண்டை உண்டாக, அது படிப்படியாய் முற்றிப் பெரியவர்களுக்குள் வாய்ச் சண்டை, கைச்சண்டையாக மாறி அதன் பொருட்டுக் கோபங் கொண்ட அண்டைவீட்டுக் கிழவன் என் காதுகளின் நுனிப் பாகத்தைக் கத்தரித்துவிட்டான்.

அதற்காகக் கோபங்கொண்ட என் எஜமானன் அவனுடைய கழுதைகள் இரண்டின் காதுகளைக் கத்தரித்து விட்டான். என்னே மதியீனம்! விலங்குகளாகிய எங்களுக் கிருக்கும் பகுத்தறிவுகூட ஆறறிவு படைத்த மனிதர்களாகிய அவர்களுக்கில்லையே! நாங்கள் செல்லும் வழியே தெருத் தெருவாய் பலர் கூட்டங்கூடி 'ஆடு கோழிகளுக்கு ஓட்கொடுங்கள், புனிதமான தீபாவளி நாட்களில் புலாலுண்ணுதீர்கள்' என்று கூவிச் செல்வதைக் கண்டேன். என் மட்டில் கொஞ்சம் திருப்தி அடைந்தேன். ஏன் தெரியுமா? எங்கள் இனத்தாரைக் கொன்று தின்பதில்லை. அந்தமட்டில் நாங்கள் பாக்கிய சாலிகள் தான்.

என் எஜமானன் தன் மனைவியை விளித்து 'அடி ராமாயி! தீபாவளி கும்பிடுவது எப்போ?' என்முன். குடி மயக்கத்தினுல் அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லைபோலும்.

'அமாவாசெ நண்ணு தீவாளி. அண்ணிக்கு கும்பிட்டாக்க மாக்கறிதான் திண்ணனும். அதின்னு ரோதனெ! நம்மவங்களெல்லாம் அத்தான் நாளக்கே பண்டிகே செய்யுருங்க. அண்டைவீட்டு ரங்கய்யா கறிக்கு 5 ரூபாயும் குடிக்க 5 ரூபாயும் வச்சிருக்காணும். நமக்கும் இண்ணிக்கு 10 ரூபா வந்தா நெல்லாத்தான்' என்று கூறினுள்.

நெஞ்சு பொறுக்குதில்லையே! ஐயோ! அநியாயம் விலங்குகளின் ஊனை உண்பதில் இவர்களுக் கிருக்கும் பேராவல் என்னே! வாயில்லாச் சீவன்களை வதைத்து உண்ணுகிறுமே என்று அவர்களுக்குக் கடுகளவேனும் தோன்றுகிறதா. இரக்கமற்ற கொடிய வன்னெஞ்சர்களாகிய இவர்களது பராமரிப்பிற் காலங்கழிக்கும் எங்கள் பாடு சொல்லத் தரமன்று. தீபாவளிப்பொழுது நல்ல பொழுதாய் விடியவேண்டுமே என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டியவனுய்த் தள்ளாடித் தள்ளாடிச் சென்றுகொண்டிருந்தேன்.

நாங்கள் செல்ல வேண்டிய வீடு சமீபித்து விட்டபடியால் என் எஜமானனும் எஜமானியும் நின்றனர். என்மே லிருந்த பெருஞ் சுமை மெதுவாய் இறக்கப்பட்டது. 'உஸ்! அப்படா!' என்று கால்களை உதறிக்கொண்டு உடலைச் சிலிர்த்துக் கொண்டேன். வழி நடந்த இளைப்பினுலும், பசியினுலும் பொத்தென்று கீழே விழுந்தேன். என்னை யறியாமலேயே அயர்ந்து நித்திரையி லாழ்ந்தேன்.

ஆகா! என்ன அற்புதமான கனவு! எனது குழந்தைப் பருவத்தில் நடந்த சம்பவங்கள் என் கண்ணுக்குப் புலனுயின. தெளிந்த நீரோடையி னருகே நானும் என் இள நண்பர்களும் குதித்துக்

கூத்தாடிக் களித்த காலமும் பசும்புல்லை வயிறு நிரம்ப மேய்ந்து நீரோடையின் தண்ணீரைக் குடித்து மகிழ்ந்த காலமும், எங்கள் கிராமத்து வண்ணான் கொண்டுவரும் சிறிய துணி மூட்டைகளை என் தாயார் தூக்கிவர அவளிடம் போய் ஒண்டி ஒண்டி நாங்கள் விளையாடிய காலமும் ஒவ்வொன்ருய்த் தோன்றலாயின. என்ன சந்தோஷகரமான வாழ்க்கை ! என்ன இன்பகரமான உலகம்!! கிராம வாசத்தின் எளிய வாழ்க்கை எங்களுக்குக்கூட மனோற்சாகத்தை உண்டு பண்ணிற்று. நகர வாசம்போல் கழுதைமேல் சுமைசுமையாய் ஏற்றுவாரும், வீட்டுக்கு வீடு பெருந்துணிக் குவியல்களும் அங்கு இல்லை. ஆனுல் சில ஊர்களில் சலவை செய்த துணியை எங்கள்மேல் ஏற்றுவது அநாகரிகம் என்று கருதி அழுக்குத் துணிகளை மட்டுமே எங்கள் மேல் ஏற்றுகிருர்கள். அது எவ்வளவோ மேலான வாழ்க்கை. அப்படிக்கின்றி வீட்டிலிருந்து ஆற்றிற்கும், ஆற்றிலிருந்து வீட்டிற்கும், மறுபடி வீட்டிலிருந்து சலவைத் துணிகள் கொண்டு போய்க் கொடுப்பதற்கும் எங்களைக் கட்டி இழுப்பவர்களே மிகுதி.

அடுத்தாற்போல் கனவில் நான் என்று அடிமைப்பட்டு நகர வாசத்திற்கு வந்து சேர்ந்தேனே அந்தக் காட்சி தொடங்கிற்று. என் இனிய தாயையும் என்னைப் பரிவுடன் பராமரித்த பாட்டியையும் விட்டுப் பிரிந்து நகரவாசம் என்னும் நரக வாசத்திற்கு நான் அழைத்து வரப்பட்டேன். அதிலிருந்தே எனது துன்பமான வாழ்நாள் தொடங்கிற்று. ஆம், முதல்நாள் எனக்கென்ன பயம் தெரியுமா? தெருவில் ஒரு கும்பல் நாய்கள் முன்னும் பின்னும் பலர் புடை சூழ பவனி வந்துகொண்டிருந்தன. 'அவைகள் எங்கே போகின்றன?' என்று எனது நண்பனுகிய கருப்பனைக் கேட்க, 'அவைகள் கொல்லப்படப் போகின்றன' என்று கண்ணீர் பெருகிக் கதறினுன். 'அடாடா, என்ன விபரீதம், ஒரு கூட்டம் நாய்களைக் கொல்வதுபோலவே நம்மையும் கொன்றுவிடுவார்களோ' என்று நான் கலங்கினேன். என்னையும் கொன்று தின்றுவிடுவார்களென்றே நான் பயந்தேன். ஆனுல் கருப்பன் விஷயங்களை நன்ருய்க் கூறிவிட்டான். நாய்களினுல் தொந்தரவு ஏற்படுகிறதென்று கொலை செய்கிருர்களாம். 'மனிதக் குழந்தைகளால் தொந்தரவு ஏற்பட்டால் மந்தையாய்க் கொண்டு போய்க் கொலை செய்வார்களா?' என்று நான் சிந்தித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று தூக்கி வாரிப் போட்டது.

ஒன்றன்பின்னென்ருய்ச் சீனி வெடிகள் என்மீது வந்து விழுந்து படீர் படீர் என்று வெடித்தன. நான் வெருண்டு ஓட லானேன். குழந்தைகள் என்று கூறப்படும் அம்மானுடப் பேய்கள் ஓட ஓட நாற்புறமும் சூழ்ந்துகொண்டு என்னை வெருட்டி மேன்மேல் வெடிகளைப் பொழிந்தனர். நல்ல காலம், என் எஜமானன் வந்து என்னை விடுவித்தான்.

'விடுதலை அடைந்தோம்' என்று நான் சந்தோஷப்படுமுன் பளீர் பளீர் என்று சுடச்சுட முதுகில் பல அடிகள் விழுந்தன. மறு விநாடி ஒரு பெரிய மலையளவு துணிகள் என்மீ தேறின. மெள்ள மெள்ளத் தள்ளாடி வீடு சேர்ந்தேன்.

பண்டிகைக் கொண்டாட்டம் என்றால் மனிதர்களுக்குத்தான். எனக்கொரு பிடி வைக்கோலு மில்லை. பசியினால் துடித்துக்கொண் டிருந்தேன். ஆறறிவு படைத்தவர் மனிதர்கள். விலங்கினத்திற்கு இல்லாத பகுத்தறிவு இவர்களுக்குமட்டும் இருக்கிறதாம். ஜீவகாருண் யம் என்று கும்பல் கூடி வம்புபேசுகிறார்களே யன்றி என்னைப் போன்றவர்களைக் கொஞ்சம் கடைக் கண்ணாலாவது பார்க்கக் கூடாதா? நகரிலுள்ள எல்லா மனிதர்களும் களித்துக்கொண் டிருக்க நான் பசி காதடைக்க, சீனி வெடிகளால் சுடப்பட்ட விடங்கள் கொப்புளிக்க, உடல் குளிரினால் விறைக்க மண்ணுக்கும் விண்ணுக்கு மாய் ஊசலாடிக்கொண் டிருந்தேன்.

அன்றிரவு முழுமையும் இப்படியே கழிந்தது. மரணவேதனையை விட பனை ஓலைகளின் சலசலப்பைக் கேட்டே மிகவும் அஞ்சினேன். சென்ற வருடம் என் வாலில் பனை ஓலையைக் கட்டி, சில சிறுவர் தீயிட்டனர். அதன் இரணம் இன்னும் ஆறவில்லை.

பொழுது புலர்ந்தது. என் எஜமானனும் எஜமானியும் வந்து எட்டியேனும் பார்ப்பரோ வென்று கண்ணீர் பெருக்கினேன். அண்டையி லிருந்த கருப்பனையும் காணோம். வாய் பேச முடியவில்லை. எங்கிருந்தோ என் எஜமானன் வந்து சேர்ந்தான். 'கழுதை, என் படுத் திருக்குது?' என்று அருகில் வந்தான். எனது மரண வேதனையைக் கண்டான். கடவுள் அவனுக்கும் ஒரு துளி கருணை உண்டாகு மாறு செய்தார் போலும்.

'மூச்சு வாங்குது, வேப்பெண்ணெ எடுத்து வா, உடம்பெல் லா புண்ணா யிருக்குது, தீனி போடவே மறந்துட்டோம். கொஞ்ச கழுநீர் என்னாச்சும் கொண்டா' என்றான். வேப்பெண்ணெயும் கழுநீரும் கொண்டுவரப்பட்டன.

'ஆனால் என்ன பலன்? என் எஜமானன் வேப்பெண்ணெ யைத் தடவும் பொழுதே என் ஆவி அகன்றது. உங்களுக்கு அதி காரமும், எங்களுக்கு அடிமைத்தனமும் இல்லாத ஓர் உலகிற்கு நான் செல்கிறேன். அந்தப் பரம்பொருளின் சந்நிதியில் மனிதனும் கழுதையும் சமமே.'

---

# பாப்பா பாட்டு

(தேசீயக்கவி. சி. சுப்பிரமணிய பாரதியார்)

1. ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

2. காலை யெழுந்த வுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

3. பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா.

4. துன்பம் நெருங்கி வந்த போதும்—நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வ முண்டு—துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா.

5. சோம்பல் மிகக் கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பி யழுங் குழந்தை நொண்டி—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

6. தமிழ்த் திரு நாடு தன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

7. உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமை யடி பாப்பா.

8. சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

# செட்டிமார்களின் சிக்கன ரகசியம்

(மே. மா)



உலகில் சிக்கனமாக வாழ்பவர்களைச் செட்டானவர்கள் எனக் கூறி வந்தனர். அத்தகைய செட்டானவர்களை நாளடைவில் செட்டியார்களென அழைக்கலானார்கள். இதனால் செட்டாகச் சிக்கன வாழ்க்கையைக் கைக்கொண்டவர்கள் செட்டிமார்கள் எனப்படும்.

இத்தகைய செட்டிமார்களில் எத்தனையோ பிரிவினர் இருக்கின்றனர். அவருள் பேரி செட்டி, வணிகர் செட்டி, கோமுட்டிச் செட்டி, வேளாஞ்செட்டி, பட்டணவ செட்டி, காசி செட்டி, நகரத்துச் செட்டி என்போர் சிறப்பானவராவர்.

செட்டாக வாழும் செட்டிகளின் கதையினால் நாம் அறிந்து கொள்ளக் கூடிய கருத்துகள் பல உள. அவற்றுள் சிலவற்றை இங்கே குறிக்கின்றேன்.

நான் சில தினங்களுக்குமுன் நகரச் செட்டியார்கள் வாழும் ஊர்களுக்குச் செல்ல நேர்ந்தது. எனக்குப் பல நாளாக நண்பராயிருக்கும் திருவாளர் ப. ழ. மு. வேலாயுதம் செட்டியார் அவர்களுடைய புதல்வியின் திருமணத்திற்காகப் பனையப்பட்டி என்னும் ஊருக்குச் சென்றிருந்தேன்.

ஆங்கு, செட்டிமார்கள் வாழும் செட்டான வாழ்க்கையைக் கண்டு களிப்புற்றேன். செட்டிமார்களின் வாழ்க்கையில் மண் பாத்திரத்தைச் சமையலுக்காக உபயோகிப்பது சிறப்புடையது.

சிக்கன வாழ்வில் வாழும் முறைகளைக் கவனிக்கும்போது முக்கியமாகத் தாய், தகப்பன் முதல் அண்ணன், தம்பி யாராயிருந்தாலும் அவரவர்கள் துண்டாகச் சமையல் செய்துகொள்ளுகின்றனர். செட்டிமார்களில் மனைவி மணாளன் இருவர் மாத்திரம்தான் சேர்ந்து சமைத்துக்கொள்கின்றனர்.

இவர்கள் வாழ வீடுகளையும் தனியாக அமைத்துக்கொள்கின்றனர். தவிர பெரும்பான்மையோர் ஒரு வேளை சமைக்கும் அதாவது பகலில் சமைக்கும் பதார்த்தத்தையும், குழம்பையும் சூடேற்றி இரவிலும் உபயோகித்துக் கொள்கின்றனர். இரவில் சாதத்தை மாத்திரம் பாகம் செய்கின்றனர். உட்கொள்ளும் ஆகாரத்திற்கு மிளகு ரசம் வைத்துக் கொள்ளும் பழக்கம் எகதேசமாய் இருக்கின்றது.

இதனால் ஒரு செட்டியார் வீட்டிற்கு விருந்தாளி சென்றால் அவரைக் கண்ட பின்னரே சமைக்கவேண்டியவர்களாகின்றனர். தவிர விருந்தாளிகளும் ஏகதேசமாய் வருகின்றனர். இந்நிலையில் வாழ்க்கையை நடத்துவதால் பணச்செலவு அதிகமில்லாமல் வாழ்கின்றனர்.

மற்ற ஜாதியினர் வாழ்க்கையில் ஒருவன் சம்பாதிப்பானேயானால் அவன் சம்பாதனையைக்கொண்டு தாய், தகப்பன், அண்ணன், தம்பி, அக்காள், தங்கை, மாமன், மைத்துனன் முதலிய பலபேர் சாப்பிட்டு வருவதால் அவன் எவ்வளவு சம்பாதித்தாலும் குடும்பத்திற்குப் போதாமல் கடன்காரனாய் வாழ்கின்றான்.

செட்டிமார்களைப் போல் பிற ஜாதியார்களும் சிக்கன வாழ்க்கையைக் கைப்பற்றி ஒவ்வொருவரும் தத் தம் வயிற்றுக்குத் துண்டாக ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமென்ற முறையை அனுஷ்டித்தால் இவர்களும் பணக்காரர்களாய் விளங்கலாம்.

இந்த வகையில் சிக்கனம் செய்து சேகரிக்கும் பணத்தை வட்டியில் பெருக்கும் செட்டிமார்களின் சிக்கனத்தைப் பிற ஜாதியினரும் கைக் கொள்ளல் வேண்டும்.

செட்டிமார்களின் கடல் யாத்திரையாலும், வட்டி வியாபாரத்தாலும் சேகரிக்கும் பணத்தைத் தமக்கு வேண்டாத அளவில் காடுகள் சூழ்ந்த ஊரில் இருவர் வசிக்க, ஒருவரைப் பார்த்து ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு இலட்சக் கணக்கான பொருளைச் செலவிட்டு பெரிய வீடுகளைக் கட்டி, சகல கட்டடத்தையும் பூட்டி வைத்துப் புறந்திண்ணையில் வாழும் பழக்கத்தை நிராகரித்தல் வேண்டும்.

செட்டிமார்களில் கலியாணம் செய்து கொள்ள பெண்ணுக்கு முப்பது ஆயிரம் கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏழைகளுக்கு ஏற்பட்டிருப்பதையும், கலியாண காலத்தில் சீர்கொடுக்கும் வகையில் அவசிய மில்லாத சாமான்களைப் பொருட்காட்சி சாலையைப்போல் அலங்கரித்துப் பெண்ணோடு அனுப்பும் வீண் விரைய வழக்கத்தையும் பிற ஜாதியினர் பின்பற்றலாகா.

புருடனை விட்டுத் தனியே மனைவியை வீட்டில் வாழச் செய்வதும், புருடன் தனித்து வெளியூர் சென்று வியாபாரம் செய்து மூன்று ஆண்டுக்குப் பின் திரும்புவதுமாகிய பழக்கத்தை விடுதல் வேண்டும்.

ஆக தள்ளத்தக்கன சில, செட்டிமார்களிடம் காணப்பட்டாலும் கொள்ள தக்கதான சிக்கன வாழ்க்கையையும், பணம் பெருக்கும் திறமையையும் மக்கள் கைக்கொள்வது நலம் என அறியலானேன்.

# தீனிப்பை

(டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்)

தீனிப்பை சுருங்கிவிடுமானால் குடலும் சுருங்கிவிடும்; கல்லீரலும் சுருங்கிவிடும். கல்லீரல் சுருங்கினால் இருதயமும் சுருங்கும்; இருதயம் சுருங்கினால் கை, கால், வயிறு முதலானவை வீங்கிவிடும்.

பெரும்பாலும் இந்நோயானது அமிதமாகக் குடிப்பவர்களுக்கே உண்டாகின்றது.

மேற்சொன்ன வகையில் ஏற்பட்ட நோயானது சரீரத்தை அக்னிப்பிரவேசம் செய்யவோ அல்லது மண்ணில் மறையவோ செய்துவிடும்.

தீனிப்பைக்குள் செலுத்தும் ஆகாரமானது முக்கியமாய்க் கவனிக்கத் தக்கது. தீனிப்பையிலிருந்து ஏற்படக் கூடிய நன்மை தீமைகள் பலவுள.

முதலிலே தீனிப்பைக்குள் செலுத்தும் ஆகாரத்தை உமிழ்நீர் சேர்த்து செலுத்த வேண்டும். உமிழ்நீரைத் தீனிப்பைக்குள் ஆகாரத்துடன் செலுத்தவேண்டுமானால் நன்றாக மென்று தின்னக் கூடிய ஆகாரத்தை உட்கொள்ள வேண்டும்.

ஆகாரத்தை மென்று தின்னுவதால் உமிழ்நீர் என்னும் (சலைவா) ஒரு திரவம் ஆகாரத்துடன் கலந்து தீனிப்பைக்குள் செல்லுவதால் தீனிப்பையில் வந்து கலக்கும் பித்தம் (ஐட்ரோ கிளோரிக் ஆஸிட்) கலந்து ஆகாரம் கறைந்து மிருது வாக்கப்பட்டு குடலில் நுழைகின்றது.

தீனிப்பையிலிருந்து இரத்தாசயப்பைக்குப் பதினாறில் ஒருபங்கு இரத்தமானது உண்ட ஆகாரத்திலிருந்து போகக் கூடியதாதலால் உண்ணப்பட்ட ஆகாரத்தில் இரத்தத்தை அதிகப்படுத்தும் சக்தி வாய்ந்த வஸ்துக்களை உண்ணல் வேண்டும்.

நம்முடைய தேகத்தைப் பாதிக்கக்கூடிய ஆகாரத்தை உட்செல்லவொட்டாதபடி இயற்கையில் நமது நாவிற்கு அமைக்கப்பட்டிருப்

பதால் நாவானது நமக்குத் தீமையைச் செய்யும் ஆகாரத்தை உட் செல்லவொட்டாதபடி தடுக்கும்.

நாம் நீண்ட நாள் உயிர் வாழ வேண்டுமானல் திரவ பதார்த்தங்களையும், கீரை வகைகளையும், பழ வகைகளையும் உண்டு வாழ வேண்டும். நாவின் ருசியைக் கருதி இனிப்பு, புளிப்பு, கைப்பு, உவர்ப்பு, காரம் இவைகளைக் கூட்டி உண்ணும் ஆகாரம் உசிதமன்று. எனினும் வழக்கத்தில் உண்டு பழகியதால் அதனைப் பாகுபடுத்தி உண்ணல் நலம்.

தீனிப் பைக்குள் செலுத்தும் ஆகாரம் நெய் அல்லது எண்ணெய்ப் பசை உள்ளதானலும் சரி அல்லது திரவ மூலமானலும் சரி அதனையே முதலில் சாப்பிட வேண்டும்.

இரண்டாவதாக காரம், இனிப்பு வகைகளைச் சாப்பிட்டு மூன்றாவது புளிப்புள்ள வஸ்துவைச் சாப்பிடவேண்டும். புளிப்புள்ள வஸ்துக்கள் சீக்கிரம் ஜீரணிக்கச் செய்யும் வஸ்துக்களில் சேர்ந்தவை. எனவே ஆகாரத்திற்குப் பின் புளிப்புள்ள காடி நீரோ அல்லது மோரோ ஆக ஏதாவதொன்றை உண்ணல் வேண்டும். இம்முறையில் உண்ணும் போதும் சில நோய்கள் காணும். அதாவது தீனிப்பைக்குச் செல்லும் ஆகாராதிகளில் புழுக்களை அதிகப்படுத்தச் செய்யும் ஆகாரங்கள் பல இருப்பதால் நாம் உண்ணும் ஆகாரத்தினல் புழுக்கள் அதிகப்படுகின்றது. புழுக்களை நாசம் செய்வதில் முதன்மை பெற்றது பித்தமாகும். இப்பித்தத்தினல்தான் புழுக்கள் அதிகப்படாமல் நாசமடைகின்றன. ஆனல் பித்தத்தினல் நாசமடையாத சில புழுக்களும் தீனிப்பையில் காணப்படுகின்றன. அப் புழுக்களைப் பூதக்கண்ணாடியால் மலத்தில் பார்க்க தெரியவரும்.

பித்தத்தால் நாசமடையாத புழுக்கள் மோர், பால், தயிர் ஆகிய இவைகளால் உண்டாகும் புழுக்களுக்கு நிகரானவை. இப்புழுக்கள் மோர் பால் சாப்பிடுவதால் பெருகுகின்றன என்றாலும் அவை சரீரத்தைக் கெடுக்கும் புழுவகையில் சேர்ந்தவை யன்று.

எனவே பால் மோரினல் ஏற்பட்ட புழுக்களோ அல்லது தானக உண்டாகிப் பித்தநீரில் இறக்காத புழுக்களோ எப்படியும் நம் சரீரத்தில் பெருகிவிடுகின்றமையால் அத்தகைய புழுக்களை நாசமடையச் செய்யவே மாதம் ஒரு முறை பசுவின் சாணம், பசுவின் சிறு நீர் ஆக இவ்விரண்டையும் சாப்பிடச்சொன்னது. சாணத்தையும், நீரையும் ஒருவரும் உண்ண முடியாது. ஆதலால் பாலும் தயிரும் அதில் சேர்த்து மாதம் ஒரு முறை சாப்பிடவேண்டும். இவ்வாறு சாப்பிட்டால் அப்புழுக்களால் ஏற்படும் வயிற்று வலி, பேதி முதலான வியாதிகள் உண்டாக மாட்டா.

இக் காரணம் பற்றியே சில வைத்தியர்கள் தங்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ நேர்வாளத்தின் மிகுதியாலோ அல்லது விஷபேதியாலோ, உஷ்ணத்தாலோ ஏற்படும் மலக் கழிச்சலை நிறுத்துவான் வேண்டி சாணிப்பாலைப் பிழிந்து தயிரில் கொடுத்துப் பேதியைப் போக்குகின்றனர்.

[தொடரும்]

## இந்திய வறுமையை ஒழிக்க வழி

இந்தியாவில் வறுமை அதிகப்படுவதற்கும் விசேஷமாக இந்திய கிராமங்கள் சீரழிந்து வருவதற்கும் பல காரணங்கள் உண்டு. சர்க்காரின் அளவு கடந்த தீர்வையும், இந்தியருக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பகட்டான சாமான்களில் ஏற்பட்டிருக்கும் பிரியமுமே முக்கிய காரணமாகும். மேலும் விவசாயிகள் ரசாயன முறைப்படி தங்கள் நிலங்களைப் பயிரிட இன்னமும் அறியாததால் அதிகப் பொருள் திரட்ட வகையறியாதவர்களா யிருக்கிறார்கள். வறுமைக்கு இதுவுமொரு காரணமாகும். ஆகவே அரசாங்கத்தார் கிராம சீர்திருத்தத்தில் கவனம் செலுத்துவதுடன் அவர்களிடமிருந்து வசூலிக்கும் வரிப்பணத்தில் ஒரு பகுதியை விவசாயிகளின் சௌகரியத்துக்காகச் செலவிட முன் வந்தாலொழிய கிராம புனருத்தாரணம் ஏற்படுவது அசாத்தியமாகும்.

நமது நாட்டில் விவசாயிகள் உடல் வருந்தப் பாடுபடுகிறார்கள். இவ்விஷயத்தில் மின்சார சக்தியை உபயோகித்து விவசாயத் தொழிலை எளிதாக்க வேண்டுமென்பதே என் அபிப்பிராயம். இதனால் கிராமங்கள் சீர்திருத்த மடைவதுடன் விவசாயிகளும் பல அரிய விஷயங்களை அறிந்து முன்னேற்றமடைய ஹேதுவாகும். இதற்காகப் பத்து வருஷத் திட்டமொன்றை அமைத்து கிராம சீர்திருத்தத்துக்காகவும், விவசாய அபிவிருத்திக்காகவும் பாடுபட வேண்டும். இவ்விதம் வேலை செய்தாலொழிய கிராம சீர்திருத்தம் செய்வது கஷ்டமாகவே இருக்கும்.

—திரு. கே. எஸ். வேங்கடரமணி.

"மீனாட்சி" பிரஸ் 31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

# சிவப்பிரகாச மெடிகல்ஹால்

## டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

## ஔஷதங்களின்

# கிரய ஜாபிதா

---

### முக்கியமாய்க் கவனிக்கவேண்டியவை

எங்களுடைய மருந்துகள் பர்மாவிலும், மற்றும் பல தேசங்களிலும் பிரக்யாதி பெற்றுள்ளன.

எங்கள் மருந்துகளைத் தயார் செய்யும் **டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரைத்** தெரியாதவர் வெகு சிலரே யாவர்.

சென்னையில் அவரால் நடத்தப்படும் வைத்திய சாலையில் சிகிச்சை பெருதவர்களும் வெகு சிலரே. திருவாளர் M. C. நஞ்சுண்டராவ், B. A., M. B. & C. M. அவர்களும், டாக்டர் T. G. பிள்ளை யவர்களும் இணைபிரியா தோழராவர். இவர்கள் பல ஆராய்ச்சியின் மூலம் அரிய மருந்துகளைச் செய்து முடித்தவர்கள்.

இரங்கூனில் **தி. ஞானப்பிரகாசம்** அவர்கள் பர்மாவில் எங்கள் மருந்துகளைப் பரப்ப ஏஜண்டாய் நியமிக்கப்பட்டுள்ளார். பர்மா வாசிகள் 122, **மோகல் தெரு**வு, **தி. ஞானப்பிரகாசம்** அவர்களிடம் சகல மருந்துகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை அளிக்கும்

இம் மாத்திரையை மாலையில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாகும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரரோபா முதலான சத்து வஸ்துக் களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது. இதன் முக்கிய குணம் புருஷர்களுக்குப் புருஷத் தன்மையும் பெண் களுக்குப் பெண் தன்மையும் உண்டு பண்ணுவதாகும்.

இருபாலாரின் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ளச் செய்வ தும் தவிர கர்ப்பம் தரிக்கவும் செய்யும்.

இன்பசாரம் என்னும் மாத்திரையைச் சாப்பிட்டால் ஒடிந்த எலும்புகள் கூடிவிடுகின்றன.

இன்பசாரத்தைச் சாப்பிட்டால் சொர்ப்பன ஸ்கலிதம் நீங்கி விடுகின்றது.

இன்பசாரத்தால் தாது விருத்தியைப் பெற்று விடலாம்.

இன்பசாரத்தால் நீரில் கலந்துபோகும் இந்திரியத்தைத் தடுத்துக் கொள்ளலாம். (செடிமென்ட்ஸ்)

இன்பசாரத்தால் சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றிக் கொள்ளலாம்.

இன்பசாரத்தால் க்ஷய சுரத்தையும், மற்ற சுரங்களையும் போக்கி விடலாம்.

இன்பசாரத்தால் சோகை நோய் நீங்கி, இரத்த விருத்தி யடையலாம்.

இன்பசாரத்தால் இருதய வியாதி, சுரம், பித்தசோகை, பசியின்மை, வீக்கம், மதுமேகம், பாரிசவாய்வு, க்ஷய இருமல் சுரம் இவை நீங்குகின்றன. இலட்சக்கணக்கான நன்மதிப்புகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிச்
## சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

### வரப்பிரசாதம்

சென்னைப் பவளக்கார வீதியில் டாக்டர் சம்பத்து ஐயங்காரின் மைத்துனர் இருதய வலியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்து, டாக்டர் ரங்காச்சாரி யவர்களிடம் காண்பித்ததில் ஆப்ரேஷன் செய்ய வேண்டும் எனக்கூறி அதன்படி ஆப்ரேஷன் செய்ய மயக்கம் கொடுக்கும் சமயம் கம்பியை செலுத்திச் சீழ் உள்ள இடத்தைப் பரிசோதிக்கும்போது சீழ் காணப்படாமையால் ஆப்ரேஷன் வேண்டாம் என்று தடுத்துவிட்டாராம். அதற்குப்பின் என்னிடம் வந்து காண்பித்ததில் 3 நாளைக்குச் சகல மேக சித்தாதி எண்ணெயைக் கொடுத்து பிறகு இன்பசார மாத்திரையைக் கொடுத்து வந்ததில் வியாதி நீங்கி இப்போது சுகமாக இருக்கின்றார் என்பது தெரிவிக்கப்படுகின்றது.

---

அன்புள்ள டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கட்கு,

என் மனைவி கொஞ்ச நாளாக, விடாத சுரத்தாலும் இருமலாலும் கஷ்டப்பட்டு வந்தாள். எப்பொழுதும் கோழை விழுந்து கொண்டே இருந்தது. சென்னையில் பேர்போன இரண்டொரு இங்கிலீஷ் டாக்டர்களிடம் காண்பித்தேன். அவர்க ளெல்லோரும்

க்ஷயரோகம் என்று சொல்லி விட்டனர். எனக்கும் க்ஷயரோகமென்றுதான் தெரிந்தது. தெய்வச் செயலாகத் தங்கள் இன்பசார மாத்திரை ஒரு புட்டி வாங்கிக்கொடுத்தேன். பாதி புட்டி சாப்பிடு வதற்குள் முழுதும் குணமடைந்து முன்போலாகிவிட்டாள். எனக்கு **இம் மாத்திரை ஒரு வரப்பிரசாதமென்றே தோன்றுகிறது.** இம்மாத்திரை என் போன்ற ஏழைகளுக்குப் பெருத்த உபகாரமாக இருக்கின்றது. எனது நண்பர்களுக்கு உதவுமாறு குஜராத்தி பாஷையில் இதை விளம்பரம் செய்வீர்களானால் அநேகர் நன்மை பெறுவார்கள். என் மனைவியைக் குணப்படுத்தியதை நான் என்றும் மறவேன்.

தங்கள் அன்புள்ள,

**வித்தல் தாஸ் கோவர்த்தன தாஸ்,**

75, தங்கசாலை வீதி, சென்னை.

---

# பசி உணரும் பாக்கியம் பெற்றேன்

**ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,**

தங்களுடைய ஆக்ஞைப்படித் தாங்கள் அனுப்பிய இன்பசாரம் சாப்பிட்டு வருகிறேன். இன்னும் முதுகு வலியும், மார்பு வலியும் மாறுதுதான் இருக்கின்றன. எனினும் தாது கட்டுப்பாடு யிருப்பதை உணர்கிறேன். பசி என்பதும் இம்மருந்தால் உணரும் பாக்கியம் பெற்றேன். நான் இன்னும் இதே மருந்து சாப்பிடும்படித் தாங்கள் எண்ணினால் ஒரு புட்டி வி. பி யில் அனுப்பவேண்டியது. இம்மருந்தினாலேயே என்னுடைய நோயைப் போக்க எண்ணுவீர்களேயானால் மாதந் தவறாது ஒவ்வொரு புட்டி அனுப்பிவைக்கக் கோருகிறேன். நான் எழுதினாலும், எழுதா விட்டாலும் மாதா மாதம் ஒரு புட்டி வி. பி. யில் அனுப்ப வேண்டியது. நிற்க, நான் தங்களுடைய பத்திரிகை தமிழரசிற்கு சந்தாதாரனாயிருந்து வருகிறேன். ஒரு வருட கட்டணமும் தாங்கள் இரங்கூன் வந்திருந்தபோது லாயர் சோமசுந்தரம் பிள்ளையவர்களால் எனக்குப் பத்திரிகை அனுப்பச் சந்தா செலுத்தப்பட்டிருக்கிறது. எனக்குச் சஞ்சிகையும் கிடைத்து வருகின்றது. இப்போது மீண்டும் ஒரு பத்திரிகை என் விலாசத்திற்கு வி. பி.யில் அனுப்பி யிருக்கிறார்கள். அதை நான் திருப்ப நேர்ந்ததைப்பற்றி விசனிக்கிறேன். கூழ்ப்பாண்ட லேகியம் ஒரு பவுண்ட், சஞ்சீவி சூரணம் புட்டி ஒன்று அனுப்பவேண்டியது. மற்றபடி தங்கள் தாக்கல் கண்டு எழுதுகிறேன்.

தங்கள் அன்பன்,

**S. சிவானந்தம் பிள்ளை நேஷனல் பேங்க் மாண்டலே.**

---

# குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும், எனக்குப் புத்திர சந்தானமில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பது ஆயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணம் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ண அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக்கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கின்றேன். பெற்றுக்கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

**தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.**

---

# ஆண் தன்மை அடைந்தேன்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கட்கு,

அன்புள்ள ஐயா,

தாங்கள் கொடுத்த இன்பசாரம் என்னும் மருந்து என்னைப் புருஷனாகச் செய்து விட்டதை நோக்க நான் அடைந்த சந்தோஷம் சொல்லுந்தரம் அன்று.

எனது முதல் மனைவி 10 வருடமிருந்து காலமானாள். இரண்டாவது மனைவியை எனக்கு என் உறவினர்கள் கட்டி வைத்தார்கள். விவாகமானதிலிருந்து என் மனம் அடைந்த துன்பம் அளவிலடங்காது. எனது நண்பர் திண்டுகுறத்தி எதிராஜுலு செட்டியாரால் தங்களிடம் வந்து இன்பசாரம் என்னும் மருந்தை உட்கொண்டதால் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஆனந்தம் கிடைத்தது.

என்னுடைய நாயகிக்குச் சரீரம் உஷ்ணமாயும் நீர் இறங்கும்போது பாதையாயும் இருப்பதாய்த் தெரிகின்றது. அதற்குத் தாங்கள் எண்ணெய் கொடுக்கும்படிக் கோருகிறேன்.

**லேட் மோஸஸ் கம்பெனி**

**கொத்தா கிருஷ்ணசாமி செட்டியார்.**

---

# இழந்த வலிமை எய்தினேன்

**கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,**

நான் சுமார் ஆறுமாதகாலமாய்ச் சுரத்தால் பீடிக்கப்பட்டு சரீரம் வெளுத்து கைகால் சிறுத்து ஓாடி நடந்தால் சுவாசம் வாங்கிக் கொண்டு கஷ்டப்பட்டு வந்தேன்.

இவ் வியாதிக்காக டாக்டர் நாராயணராவ், குருசாமி முதலியார் முதலானவர்களிடம் மருந்து சாப்பிட்டும் குணம் ஏற்படவில்லை. ஆதலால் ஊருக்குப் போய் விடலாம் என நினைத்திருக்கும் சமயத்தில் எங்களிடம் இருக்கும் குமாஸ்தா சுப்பிரமணிய ஐயர் என் நிலைமையைப் பார்த்து எங்கள் வைத்தியரிடம் ஒரு முறை மருந்துசாப்பிட்டு விட்டு ஊருக்குப் போய்விடுங்கள். என்று சொன்னார். அவர் வார்த்தைக்கு இசைந்து அவரையே துணையாக அழைத்துக்கொண்டு டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரைப் பார்த்தோம். அவர் என்னை பரிசோதித்துப் பார்த்து அலட்சியமாக இது நீங்கிவிடும் பயப்பட வேண்டாம் என்று கூறினர்.

இதைக்கேட்ட எனக்குச் சந்தேகம் கிளம்பியது. ஏனெனில் நான் எத்தனையோ டாக்டர்களிடம் மருந்து சாப்பிட்டுக் குணமடையாமல் இனி பிழைப்பது கஷ்டமென நினைத்திருக்கும்போது அவ்வியாதியை அலட்சியமாகப் போய்விடும் என்று சொன்னதைக் கேட்டதால் யோசனை தோன்றியது.

கடைசியில் என்ன மருந்து கொடுக்கின்றீர்கள் எனக் கேட்டேன். அதற்கு 'இன்பசாரம்' என்னும் மருந்தைக் கொடுத்தார். அதை இரவில் ஒரு மாத்திரை தூள்செய்து பாலில் சாப்பிடச் சொன்னர்.

அதன்படி 3 நாள் சாப்பிட்டவுடன் மேல் சுவாசம் நின்றுவிட்டது. சுரமும் காணப்படவில்லை. பிறகு மனம் உற்சாகம் அடைந்தது. பசி அதிகரித்தது. 10 நாள் மாத்திரையைச் சாப்பிட்டபின் தேகத்தில் இரத்தம் பரவ ஏற்பட்டது. இப்படி 1 புட்டி மாத்திரை சாப்பிடுவதற்குள் இழந்த பலத்தைப் பெற்று விட்டேன்.

பிறகு இரண்டாவது புட்டி மாத்திரை வாங்கிச் சாப்பிட்டேன். இப்போது எனக்கு நல்ல பலமும் ஏற்பட்டு வியாபாரத்தைக் கவனித்து வருகிறேன். இதன் குணத்தைக் கண்ட நான் என்னுடைய நண்பர்களை மேற்படி மாத்திரையைச் சாப்பிடும்படிக் கூறி, 4 புட்டி அவர்களுக்கும் வாங்கி அனுப்பினேன். மாத்திரையைச் சாப்பிட்ட ஒவ்வொரு நண்பரும் எனக்கு எழுதிய கடிதத்தில் மாத்திரையின்

குணத்தை அதிகமாக எழுதியிருக்கின்றார்கள். ஆனபடியால் இதைப் பொது ஜனங்களுக்குத் தெரிவித்தால் அநேகர் நன்மையடைவார்கள் எனக் கருதித் தெரியப்படுத்தலானேன்.

தங்கள் அன்புள்ள,

பயிடிபட்டி கோபால கிருஷ்ணய்யா, கமிஷன் வியாபாரம்
73 நாராயண முதலி வீதி, சென்னை.

---

## ஓர் அரிய சஞ்சீவி

14 வயதுள்ள பெண் குழந்தைக்குச் சன்னிவாத சுரமும், கபவாத சுரமும் அதிகரித்து அபாய நிலைமையில் இருக்கும்போது டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடத்தில் காண்பித்ததில் அபாயகரமான நிலையாயினும் இன்பசார மாத்திரையால் குணமடையும் என்று 3 மாத்திரை கொடுத்தார். முதல் மாத்திரை கொடுத்த அரை மணி நேரத்திற்கெல்லாம் 105 டிக்கிரி இருந்த சுரம் 102-க்கு இறங்கி விட்டது. மற்ற இரண்டு மாத்திரை கொடுத்ததும் 99 டிக்கிரிக்கு இறங்கி விட்டது. மீண்டும் சுரம் அதிகரிக்கவில்லை. பிறகு டாக்டர் காஞ்சீபுரம் உற்சவத்திற்குப் போவதாய் டாக்டர் துரைசாமி நாயுடுகாரிடம் ஒப்புவித்துச் சென்றார். இப்போது குழந்தை சௌக்கியமாய் இருக்கின்றது. இன்பசாரம் என்னும் மாத்திரை ஒரு அரிய சஞ்சீவி எனவே சொல்லலாம்.

சாமி. வெங்கடேச பெருமாள் செட்டி.

---

## பேச்சு மாருட்டம் இல்லை

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் கொடுத்த இன்பசாரம் என்னும் மாத்திரையைக் கொடுத்து வந்ததில் எனது மாப்பிள்ளைக்கு அதிக குணமாக இருக்கின்றது. இப்போது பேச்சு மாருட்டம் இல்லை. நாக் குளரல் நீங்கி விட்டது. தெளிவாகப் பேசுகின்றார். இன்னும் இன்பசாரத்தைச் சாப்பிட்டால் பூராவும் குணமாய்விடும் என்று தெரிந்து கொண்டேன். இன்பசார மாத்திரைக்கு விலை ரூபாய் 100 விதிக்கலாம் எனச் சொல்லுவேன். அம் மாத்திரையின் குணத்தை என்னென்று கூறுவேன்.

கே. சீனிவாச ஐயங்கார், முத்தியாலுபேட்டை.

---

# பலம் பெற்றேன்

ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நமஸ்காரம்.

எனக்கு வயது 75, நான் வயிற்றுப் புண்ணாலும், வாய்ப் புண்ணாலும், ஜுரத்தாலும் சொல்ல முடியாதபடி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். இதோடு நில்லாது பேதியும் ஆகிக்கொண்டிருந்தது. வாயிலிருந்து நீர் விழுந்துகொண்டே இருந்தது. எழுந்து நடமாட முடியாது. எத்தனையோ இங்கிலீஷ் டாக்டர்களிடம் மருந்து சாப்பிட்டேன். சிறிதும் குணம் தெரியவில்லை. எல்லோரும் என்னைக் கைவிட்டு விட்டார்கள். அச்சமயம் இன்பசார மாத்திரையில் ஒரு புட்டி வாங்கிச் சாப்பிட்டேன். எனக்குள்ள நோயெல்லாம் பறந்தோடிவிட்டது. ஜுரம் நின்று விட்டது. புண்களெல்லாம் ஆறிவிட்டன. தற்சமயம் டாக்டர் வீட்டுக்கு நடந்துவர சக்தி ஏற்பட்டுவிட்டது. நான் சிறு பிள்ளையைப்போல் இப்போது வேலைசெய்ய பலம் வந்து விட்டது. நான் இன்று ஸ்ரீரங்கம் சுவாமி தரிசனத்திற்குப் போவதால் கையில் இன்னும் ஒரு புட்டி இருக்க வேண்டுமென நினைக்கிறேன். இது கடிதம் கொண்டுவரும் ஆள் வசம் ரூபா 5 பெற்றுக்கொண்டு ஒரு புட்டி அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

**பசுமர்த்தி. தேபெருமாள் செட்டி,**

நாராயண முதலி வீதி, சென்னை.

---

# க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு: என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்து கொண்டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கி விட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட்டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமேயில்லை. இதை க்ஷய ரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சினேகிதர்களுக்குச் சொல்லி வருகின்றேன்.

**வி: ராமநாத ஐயர்,**

7—5—32 கார்ட்டன் வூட்ராம் கம்பெனி, மதராஸ்.

---

அன்பார்ந்த டாக்டர் மே மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனால் நான் எதிர் பார்க்காதவண்ணம் குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே !

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்த மில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு,

28—4—32, காஞ்சிபுரம், Dr. T. N. நடராஜன். L. M. P.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய மனைவிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோக வியாதிக்காக எத்தனை பணம் செலவிட்டேன். குணமில்லை. க்ஷயரோக நிபுணர் என்னும் ஆங்கிலப் பட்டம் பெற்ற பலர் என் மனைவி பிழைக்கமாட்டாள் என்று சொல்லி விட்டனர். என் மனைவிக்குச் சுரத்தாலும், இருமலாலும் சரீரம் இளைத்து இருந்தது. தங்கள் இன்பசாரம் மாத்திரையைச் சாப்பிட ஆரம்பித்தவுடன் சுரம் நீங்கி பசி எடுத்து இருமலும் போய் இப்போது சரீரம் பெருத்து இருக்கிறது. இன்னும் மாத்திரை சாப்பிட்டு வருகிறாள்.

இம் மருந்தை ஆஸ்பத்திரிகளுக்கும், டாக்டர்களுக்கும் கொடுத்தால் எத்தனையோ உயிரைக் காப்பாற்றலாம். இம் மருந்தை க்ஷயரோகத்துக்குச் சஞ்சீவி என்றே சொல்லலாம். என்னுடைய நண்பர்களுக்கு இதைப்பற்றிச் சொல்லி இருக்கிறேன். இன்னும் ஒரு பாட்டில் கொடுக்கவும்.

ரங்கசாமி ஐயங்கார், சென்னை.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய மனைவிக்கு இருந்த க்ஷயத்தால் உண்டான சுரமும், இருமலும் நீங்கிவிட்டது. இன்னும் எத்தனை நாளைக்கு இன்பசார மாத்திரை சாப்பிடச் சொல்லுகின்றீர்களோ அத்தனை நாளைக்குக் கொடுத்து வருகிறேன். தங்களுடைய இன்பசாரம் க்ஷயரோகத்துக்கு ஏற்ற மருந்து என்று சொல்லுவதில் ஆட்சேபனை இல்லை. ஆங்கில வைத்தியர்கள் கைவிட்ட என் மனைவியை அம்மாத்திரை காப்பாற்றியது. இன்னும் ஒரு புட்டி அனுப்பவும்.

21—9—32, சென்னை, துரைசாமி ஐயங்கார்

---

ம-ா-ா-ஸ்ரீ மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் எழுதிக்கொள்வது என்னவென்றால், இப்பவும் என் சம்சாரத்திற்குத் தங்களிடம் வருவதற்கு முன் இருமலும் சாதம் செல்லாமலும் தள்ளாமை அதிகமாயும் இருந்தது. டாக்டர் கோதண்டராம ஐயரிடம் கொண்டுபோய்ப் பார்த்தேன். அவர் கன்ஸம்ஷன் வியாதி என்று ஒரு மருந்து கொடுத்தார். இஞ்சக்ஷன் பண்ணியும் கொஞ்சம்கூட கேட்கவில்லை. இன்னும் மற்றுமுள்ள இங்கிலீஷ் டாக்டர்கள் எல்லோரிடமும் காண்பித்தார். பணச் செலவு ஆனது தவிர வியாதி சொஸ்தமாகவில்லை. சில சமயத்தில் பலஹீனம் அதிகமாய் உடம்பு இளைத்துக்கொண்டு நாளடைவில் எனக்குப் பிராணபயம் ஏற்பட்டது. பிறகு நாட்டு வைத்தியரான திரு. மாணிக்க முதலியாரைக் கூப்பிட்டு வந்து காண்பித்தேன். அவர் இது க்ஷயரோக மில்லை. வெட்டச் சூட்டினால் ஏற்பட்ட வியாதி என்று மருந்து கொடுத்தார். 100 ரூபாய் வரையில் கொடுத்தேன். டைபாட் சுரம் வந்ததில் அது அவரிடம் ஸ்வஸ்தமானதுந் தவிர வியாதி குணமாகவில்லை. கடைசியில் தெய்வக் கிருபையால் தங்களிடம் காண்பித்ததில் வியாதியைத் தாது தெரிந்து நீங்கள் ஒருவர்தான் சொன்னீர்கள். முதலில் Mixture வாங்கி சாப்பிட்டதில் ஜுரம் 10 நாளில் நின்றது. பிறகு லேகியமும் எண்ணெயும் சாப்பிட்டதில் வயிற்றுவலியும் உடம்பு அசதியும் சுகமாயிற்று. இன்பசார மாத்திரைகள் இப்பொழுது சாப்பிட்டுக் கொண்டு வருகிறாள். இதில் குணம் அதிகம் என்று எனக்குத் தெரிய வருகிறது. நடமாடவும் சாப்பிட வேண்டிய சமயத்தில் பசியும் நன்றாக எடுக்கிறது. இன்னும் இன்பசார மாத்திரை நீங்கள் சொன்னபடி சாப்பிடப்போகிறேன். சென்னை, ஜானகிராம சாஸ்திரி.

---

ம-ா-ா-ஸ்ரீ மகாகனம் அய்யா அவர்களுக்கு நான் ஆகிய R. T. கோவிந்தன் கங்காணிகடிதம் எழுதிக்கொண்ட விண்ணப்பம் யாதெனில் இப்பவும் தயவுசெய்து தாங்கள் அன்பான மாத்திரையில் 2 பிள்ளைகள் பிறந்து தவரிபோய் விட்டது பின்பு ஒரு குழந்தை பிறந்து கடவுள் கிருபையால் க்ஷேமமாய் இருக்கிறது. ஆனபடியால் தங்களுடைய கேட்லாக் தவரிபோய்விட்டது. ஆனபடியால் அய்யா தயவு செய்து கேட்லாக்கு அனுப்பவும். நாங்கள் வேண்டியமாத்திரை எடுத்துக்கொள்கிறோம். தயவு செய்து அனுப்பவும். மாத்திரையெடுப்போம் கேட்லாக்கு இல்லாதபடியால் இன்னமாத்திரை என்று தெரியாது. ஆனபடியால் கேட்லாக்கு அனுப்பவும்.

R. T. **கோவிந்தன்,**

உடுவளைத்தோட்டம், கந்தப்பளை போஸ்டு.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூபா 5.



## சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசுப்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கைகால் பிடிப்பு, உடம்புவலி, இடுப்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிடவேண்டும். எண்ணெயை இரண்டு காலேக்கு ஒரு முறை சாப்பிடவேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும் இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப்பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5 நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினாலான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றுள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு,
அண்ணுவையங்கார்.

---

**டாக்டர் அவர்களுக்கு கீழ்வீதி சீனிவாச ஐயங்கார் எழுதியது:**

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கி விட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயை கையிருப்பாக வைத்திருக்கின்றேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினுல் அநேக நாளாய் கஷ்டப்படுகிருள். கிருபை கூர்ந்து ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,

**கீழ்வீதி சீனிவாச ஐயங்கார்.**

**சைவ முத்தையா முதலிவீதி, சென்னை.**

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒண்ணுக்குப் போகும்போது நீர் துவாரத்திலிருந்து இரத்தம் விழுந்து வந்தது. அதற்குத் தங்கள் சகல மேக சித்தாதி எண்ணெய் 3 வேளை சாப்பிட்டதில் பூரா குணம் பெற்றேன்.

இப்படிக்கு,
இராஜரத்தினம் செட்டி.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

## கெந்தக ரசாயணம்

உலகில் அநேகரால் கெந்தக ரசாயணம் தயார் செய்யப்படுகின்றது. அவை ஒருவித வெறுக்கக் கூடிய கந்த முடையனவா யிருக்கின்றன. அன்றி வியாதிகளையும் கண்டிக்க முடியாமல் போய் விடுகின்றன. அத்தகைய காரணங்களால் கந்தக ரசாயணம் என்பது சீர்குலைந்து தற்காலத்தில் மேல் நாட்டார்கள் (சல்பார்சனல்) என்றும் (சால்வர்ஸான்) என்றும் பெயரிட்டு அனுப்பப்பட்ட மருந்துகளை இரத்தத்தில் கலக்கச் செய்து வியாதியைக் குணப்படுத்துகின்றார்கள். அதுபோலவே நம்மால் தயார் செய்யப்பட்ட கெந்தக ரசாயணம் மேகத் தடிப்பு, மேகப்புண், குண்மவலி, அசீரணம், கீழ்வாய்வு காசரோகம் ஆகிய இவைகளைக் குணப்படுத்தி மேக வெட்டையை வேரோடு நீங்கச் செய்யும்.

அரை அவுன்சு அல்லது 80 நாள் மருந்து ரூபா 5—0—0

## முத்துபஸ்பம்

இந்த பஸ்பமானது நவாப் காலத்தில் வெகு உன்னத முறையில் யூனானி வைத்தியர்களால் தயாரிக்கப்பட்டு அரசர்களால் அநுபவிக்கப்பட்டு வந்தது.

இம்மருந்தானது இருதயவியாதியை அதாவது (பால்பிடேஷன் ஆப் தீ ஆர்ட்) என்னும் வியாதியைப் போக்கி இருதயத்திற்குப் பலத்தைத் தந்து கை கால் வீக்கம் நீங்கி நாடியைச் சரியான நிலைமையில் கொண்டுவரும்.

இருதயத் துடிப்பு குறையுங் காலத்தில்தான் கை கால் சில்லிடும். அத்தகையோர்களுக்கு இது ஒப்பற்ற மருந்து.

ஜீரணப்பையின் வீக்கம் நீங்கும். சீதபேதியை போக்கும். இருமல், பித்தசுரம் இவைகளை ஒழித்து இருதயத்திற்கு பலம் தரும்.

ஒரு தோலா பஸ்பம் விலை ரூபா 16—0—0.




# மேகராஜ மல நிவாரணி

(ஒரு மகானின் வரப்பிரசாதம்)

இந்த சஞ்சீவி லேகியமானது மஹான் கரபாத்திர சிவப்பிரகாசசுவாமிகளால் அருளப்பெற்று அநேக் ஆண்டுகளாகக் கையாளப்பட்டு வருகின்றது.

அனுபவத்தில் கண்ட இதன் பெருணங்குத்தை இதனடியில் கூறுகிறேன்.

மேக வாய்வு, மேகச்சூடு ஆகியவைகளின் காரணத்தால்தான் மலச் சிக்கல் ஏற்படுகின்றது. அத்தகைய மலச்சிக்கலுக்குப் பேதி உப்பு, மாத்திரை, எண்ணெய்கள், சூரணங்கள் ஆகிய பேதி மருந்துகளை உபயோகிப்பதால் மருந்து சாப்பிடும்போது மலம் தள்ளுவதும் மருந்து நின்றதும் மலம் கட்டுவதுமின்றி, சரீரத்தில் உஷ்ணமும் அதிகரித்து மீளா வியாதிகளையும் உண்டாக்குகின்றன என்பது உலக அநுபவம்.

## சுந்தரராஜன்

நான் சுமார் 16 வருடங்களாக மலச் சிக்கலால் வயிறு, வாய், இரணம் ஏற்பட்டும் கஷ்டப்பட்டுவந்தேன். கடைசியாக **டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம்** சென்று காண்பித்ததில் **மேகராஜ மல நிவாரணி** மருந்தைக் கொடுத்தார். அம்மருந்தை நான்கு நாள் சாப்பிடும்வரை மலம் தள்ளவில்லை. டாக்டரிடம் சொன்னதில் மீண்டும் அந்த மருந்தையே சாப்பிடச் சொன்னார். சுமார் ஒரு வாரத்திற்குள் மலம் தாராளமாய் இறங்க ஆரம்பித்தது.

12 குண்டுமணி அல்லது 24 கிரெயின் எடை லேகியத்தை காலையில் சாப்பிட்டு வந்தேன். 10 நாள் மருந்து சாப்பிட்டதும் மலம் தாராளமாய் நிவர்த்தியானதுடன், எனக்கிருந்த வாய்ப் புண், வயிற்றுப்புண், கால்பிடிப்பு, இடுப்புவலி, கணுக்கால் நோய், மேகப்படை, மேகப்புண் இவைகள் நீங்கினதைப் பார்க்க ஆச்சரிய முற்றேன். இக் குறைந்த விலையுள்ள அருமை வாய்ந்த மருந்தை என் போலிய ஏழைகளின் உபகாரத்தின் பொருட்டு பகிரங்கப்படுத்திப் பலர்க்கும் பயன்படுமாறு செய்விக்க வேண்டுமாய்க்கோருகிறேன். நான் மருந்து விட்ட பிறகும் சாதாரணமாய் மலம் தாராளமாய்ப் போய்க் கொண்டிருக்கின்றது. முக்கியமாய் என் தேகத்திலுள்ள மேக உஷ்ணத்தைப் போக்கிவிட்டது.

புட்டி 1-க்கு விலை ரூபா 1—4—0.

தபாற்கூலி பிரத்தியேகம்.

## கர்ண பிந்து

சகலவிதமான காது நோய்களுக்கும் இலேசாக அனல் காட்டி காதில் 3 துளி விட்டு, பஞ்சு வைக்கவும். மருந்து உபயோகிக்கும் போது, காதில் சீழ்வடிந்தால் சுத்தம் செய்தபிறகு உபயோகிக்கவும்.

தீரும் வியாதிகள்:—காது குத்தல், சீழ்வடிதல், ஆறாத இரணங்களுக்கு முக்கியமானது. புட்டி 1-க்கு விலை அணு 8.

# காஸ்டோலின்

## (இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக்கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டுபண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக் கீழ் கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துக்கொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்கு குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

எவ்வித படைகளையும் நொடியில் போக்கும் தன்மை வாய்ந்தது. உபயோகிக்கும்போது எரிச்சல் உண்டாகாது. வேஷ்டியில் கரை பிடிக்காது. எத்தனை வருஷமாக இருக்கப்பட்ட இரணமானாலும் போக்கக்கூடியது.

இதனை உபயோகித்தவர்கள் உங்களுக்கு இதன் பெருமையைச் சொல்லுவார்கள். புட்டி 1-க்கு விலை அணா 4.

இன்னும் சகல நோய்களுக்கும் சிறந்த மருந்துகள் எங்கள் மருத்துவ சாலையில் கிடைக்கும். விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.

விலாசம்:

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

208522

## சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ 3 அணா, மணியார்டர் கமிஷன் 2 அணா, வி. பிக்குத் தபால் சார்ஜ $\frac{1}{2}$ அணா, $5\frac{1}{2}$ அணா சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினால் ரூ. 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கிய மாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத்தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

### வியாசம் எழுதுவோர்க்கு

4. வியாசம் எழுதுவோர் எளிய இனிய தமிழ் நடையில் இலக்கண வழுவில்லாமல் கால தேச வர்த்தமானங்களுக் கொத்த பொருள்பற்றி ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக மையினால் எழுதி அனுப்புதல் வேண்டும்.

கிடைக்கப்பெறும் கட்டுரைகளைக் கூட்டவும் குறைக்கவும் நிறுத்தவும் ஆசிரியருக்கு அதிகார முண்டு.

---

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது ! !

# ஜீவ இரகசியம்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் எழுதப் பட்ட 'ஜீவ இரகசிய' நூல் வெளியாகி விட்டது.

இது ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய முக்கியமான நூலாகும். இந்நூலில் சுகாதாரம், பிராணயாமம், சூரிய ஒளியின் பயன், நித்திய விதிகளின் தத்துவம், மோட்சத்தின் இரகசியம், ஆயுளைப் பெருக்கும் மார்க்கம், யோக சாதனத்தின் உண்மைகள், சரீர நடை முதல் காரணம், நோய் வராது தடுக்கும் அனுஷ்டானங்கள் முதலான பல அரிய பெரிய நுட்ப விஷயங்களைத் தெளிவாக விளக்கியும் அனுஷ்டிக்கும் மார்க்கங்களைத் தெள்ளத் தெளிய படங்களுடன் காட்டியும் இருக்கின்றது. இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# கார்டோலின்

## ஆஸ்தமாவிக்கு அரிய ஔடதம்

30, 40 வருடங்களாகக் காசநோயால் கஷ்டப்பட்டவர்களை இம் மருந்து காப்பாற்றி இருக்கிறது.

விலை புட்டி 1-க்கு ரூபா 10. விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.



ஈளை இருமல், சுவாச காசம், காச இருமல், பக்கார காசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த ம

விலாசம்:—31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudalia.
at Meenatchi Press, 31, Vaithi-anatha Mudali Street, Madras.